25

வைத்திய அட்டவணை.

218

318

குப்புசாமி செட்டியார்,

காவேரிப்பட்டணம், உ

வைத்திய அட்டவணை- கட்டு-14.

குப்புசாமிசெட்டியார்,

காவேரிப்பட்டணம்,

வைத்திய அட்டவணை - கட்டு.14.

21.12.62.

குப்புசாமி செட்டியார்.

காவேரிப் பட்டணம்.

வைத்திய அட்டவணை கட்டு: 14.

முதல் ஏடு முறிந்து சிதைந்துள்ளது.

அமுர்த மூண்டால் காய சித்தியாகுஞ் செப்பி மல சித்த ரெல்லா முரைத்திட்டாரே.

5. முரைத்திடாற் மதத்தை முழுங்கி கொல்ல மைந்தனே விடூ குறைந்தி மது தான் கண்டத்தில் நிற்கும்
தரைத்திட்டாதற் கணையும் திமையங் கூட்டி நோரி கண்டத்தே அசைத்து நட்டுரைத்த
விடூங்கள் எல்லா மகைக்கு விரும் உத்தமனே யித்த மென் பாத்துலக மாமக்
கரைத்திட்ட கறண்ட ரசிங் மைந்தன் சொன்ன காய சித்திச் சின்னமொரு அங்கங் கேளு.

6. கேளப்பா ஆமணக்கின் வெண்ணை யோடு கெடியான குமரிச் சார் கூடக் கூட்டி
நாளப்பாளியில்த் தோயித்து கொண்டு நலமான பாவவலயப் போலிருந்து கொண்டு
நீளப்பா அபானத்தில் சத்தியாட நேரொன்று மலங்களெல்லாம் போகும்
சூளப்பா யிதை மறைத்துக் காய சித்தி சொன்னார் முரிந்து விட்டேன் வழுவே முறை காய சித்தி காணேன்.

7. சித்திக்கக் காய முதல் வாதந் தாக்கு செப்புறேன் வாலையுட மூனெழுத்தைக் கேட்டு
பத்திக்கக்குருவிநட உபதேசங் கேட்டுப் பன்பாகத் தேவியைத் தான் பூசை பன்னி
முத்திக்க மேல் நோக்கித் தாரகத்தைப் பார்த்து உன்டு வா கற்பத்தை உடனே சத்தி
மத்திக்க வாலையுட மூன்றெழுத்தை விட்டால் மன்னுச்சிச் சித்தி யெல்லா மனசில்த் தானே.

8. காணப்பா வாலையுட மூன்றெழுத்தை நாட்டு கையி முறையாய்ப் பூமி யொன்று ஆகாச மொன்று
தோணப்பா பிறபஞ்ச மொன்று மூன்றாய் நின்ற சுக போக சித்திதனை யியம் பாரு
ஊணப்பா சொல்லார்கள் வாசித்திட்ட கை ஒரு கோடி தனமீந்து சொல்லார் சொல்லார்
வீணப்பா தேவியுட பூசை விட்டால் வெறும் பொய்யாய் னால் மூதலா யிசித்தி போமே.

9. போகாமல் சிவனுடைய சக்கரத்தின் மைய்யம் புகளான் தேவியுட சக்கரத்தை வைத்து
வாங்காமல் சிவ சத்தி பூசை சாமம் மைந்தனே தினச தீட்சை கேள்க்க வேணும்
சாகாமலிருத்தி விப்பார வன வருங் கட்டி சத்த ரிஷி வித்தை யெல்லா மவனுக்குள்ளாம்
வேசாமல் வேடமடா தீவினைகளெல்லாம் மேல் நோக்கிக் கற்பமுண்டு யேற பேறே.

10. ஏறுமென்ன பல கால்கள் கோடான எஞ்ச மெச்சங் கொங்கணர் தான் பாடிப் போட்டார்
தேறுமென் கள் கொண்டு சொர்க்கம் சொன்னார் சிவமான மூலரு உன் பேரென்றார்
கூறுமென்று சிவராலிங் கன்டு கன்டு கொள் மென மச்சமுனி அறிந்து பாரே
நெறிமேர் மாமகின்ன மட்டவதியன் சித்தரெல்லாம் வைத்தாரே காயசித்தி மாண்டார் காணே

11. காணபபா காய கற்பங் கொள்ளுவர்க்கு கையி முறையாய் காட்டி விக்கும் வரிசையில் லை

தோனப்பா சொன்ன யிலே மயக்கந்தற்கு சொல் பெரிய உடல் நோவு வருத்தமாகி
வீணப்பா வென்று விட்டார் சோடான் கோடி விதியல்லா மதியல்லோ வினையோ காணேன்
ஊனப்பா வென்று சொல்ல நாவில்லாத நோக்ஷ மொரு மொனிய ருந சொல்லா நோக்ஷந் தானே.

12. தாவுண்டபடி நூலிற் படிதான் பாரு சட்டை முனி நூல் பாருமே நோ கோடி
காணென்ற காடு போல் காய சித்தி வாதஞ் சனங் கைபி முறையாய் பாடாமல் முறைத்து சொன்னார்
பேனென்று சொன்னக்கால் சுந்தரமே ஆதி * முதல் * கொன்று * பேர் * சித்தர் * கோடி அய்யா வெல்லோருங் காய சித்தியாவாரென்று
ஆதி முதல் லொன்பது பேர் சித்தர் கோடி யாழ் யனேகங் கோடி சித்தராச்சே.

13. ஆச்சுதப்பா நவகோடி கோடி கோடி ஆச்சு தென்று சித்தரெல்லாம் பேசிக் கொண்டு
போச்சப்பா காய சித்தி மறைத்துச் சொன்னார் போக்கறியா நூலத்தே நின்று கெட்டார்
ஏச்சப்பா வாதத்தில்லாதி யென்ன கருவே யெரும்பாமல் வழலை பத்தானிழுக காயிச் சொல்லி
நீச்சப்பா கருநீச்சு காய சித்தியாகா நிகண்டோடு மென்னுலை யோனித்தார் பாரே.

14. பாரு எந்த நூலோடு நிகண்டு கண்டு பார்த்தோர்க்குப் பரிச முதல் சந்தான வேதை
சாரும் கண்டாய் அவர் பத்தை பனிரெண்டாண்டாண்டு கருவையுடன் கைபி கொடுத்தால் கண்டு பாரு
மாற கொண்டு திருடாதே வாயாடாதே மய்க்கமொடு வல்லமையள் செய்திடாதே
போரு கொண்டு வாளாதே பொய் சொல்லாதே புத்தி கேள் சித்தர்களே புகள கேளீர்.

15. கேளப்பா யின்னூலை வைத்திருந்தோர் பாதம் கெடியாகத் தொழுதிறைஞ்சி வாங்க நன்று
நாளப்பா யில்லா விட்டால் தனமீய்ந்து நலமான வாங்குவது ரெண்டாம் பக்ஷம்
காணப்பா யென்னூல்க்குச் சரி நூலையிலே சாதகமாய்க் குருப்பதற்கு சிவராஜ மொவ்வா
ஊனப்பா நூல் கொடுத்தோர் மனது நொந்தால் சுத்தப் பாளாகு மென்று செலித்திட்டேனே.

16. யிட்டதொரு சாபத்தால் பயந்து சித்தர் யென்னூலை வாங்கையிலே குளிகை யீய்வார்
மட்டதோதெனவ் கெட்டாவர் கொடியரவராப் (மேல் பல ஏடுகள் இல்லை)

17. குந்திருந்து உசையிட்டு ஓடி சென்று உத்தமனே அவரவரை கேட்டு
உரை மருந்திருந்து திருடாதே பொட்டி சொல்லாதே வாயாறி திரியாதே நமக்கு கொஞ்சம்
பொருத்திருந்த சட்டை முனி பின்னையன் தானென்பேல் போகமுன்னே கை கொடுத்து புகழ் செய்வாரே.

18. புகழாக யிதன் பிறகு முனடியே தானுண்டு போக்கோட்டே சோதியுண்டு கண்கண்டு
தகளகா ரேம வருக்ஷமுண்டு சாயா விருக்ஷஞ் சாதகமாயி சேர்ந்தடு பாவையுண்டு
தகளாக கறபி விருக்ஷம் ரேம விருக்ஷம் சால் பெரிய எருமை விருக்ஷ பாலையுண்டு
யிக நோயை யுள மணியை கண்டு தேறி யிவருடைய நற்றத்தத்தின் கற்பங் கோரே.

19. கேளப்பா அண்டத்தை பனம் போல் பெத்து கெடியான வீரமுடன் கற்பூமிட்டு
தாளப்பா வெடியுப்புச் சவுக்காரச் சுண்ணஞ் சாதகமாய் வகை யொன்று பனம தொன்று
நாளப்பா பொடி செய்து நாலண்டத்தில் நலமாகப் பொடியிட்டு வெயிலில் வைக்க

தேளப்பா கொட்டிய தோர் வேகம் போல சென்னத்திலே ரெண்டு கரு செலமுமாச்சே.

20. ஆச்சப்பா கெந்தகம் பலந்தான் பத்த அப்பலே கல்வத்தில் விட்டு நன்றாய்
ஒச்சப்பா அண்ட நீர் விட்டு ஆட்டு உத்தமனே அண்டங்கள் தன்னிற் பன்னீர்
வீச்சப்பா கெந்தகத்தைத் தினந்தான் மூன்று விட்டரைத்து வெள்காரம் பலந்தானென்று
தேச்சப்பா கழுவியிதை யிதிலே போட்டு திரமாக ஒரு நாளித் தான் அரைத்துக் கட்டே.

21. கட்டியதோர் வில்லையைத் தான் மையோட்டில் கருக வைத்து வாழ்கையிலேத்தி மெள்ள
ஒட்டிய தோர் தீ யெரிப்பாய் தினந் தானென்று உறவாகக் கட்டிப் போங் கெந்தி கெந்தி
தீட்டிய தோர் கெந்திக்கு பதித்த மாட்டியல்லோ பொடியாக்கி வைத்துக் கொண்டு
நெட்டியல்லோ பூசுகங் கழுவிப் போட்டு நேராகப் பீங்கானில் புளிந்து போடே

22. போட்டதிலே சவுக்காரச் சுண்ணங் காரம் புகளாக வெடியுப்பு மூன்றுங் கேரு
நீட்டிதிலே வகைக்கொரு காசு எடை கலு நேராகப் பொடி செய்து அதிலே போட்டு
மூட்டிதிலே நன்றியது தன்றிருக்கும் மோந்து அந்த தண்ணீரை கெந்தகத்தை விட்டு
ஊட்டிதிலே தின மொன்று மெழுகு போலே அப்பரத்தே வாங்கி வேதை தட அரைக்கக் கேளே.

23. கேளப்பா தங்கமது கையிலிட்டு கெடியான செம்பதிலே நாலிலொன்று போட்டு
நீளப்பா உருக்கையிலே மெழுகு தானும் நேரப்பா பணம் போலே அதிலே போட்டு
தாளப்பா தங்க எடை யிட்ட பின்பு சாதகமாய் சோதித்து எடுத்து நன்றாய்
நாளப்பா குகையிலிட்டு உருக்கிக் கொண்டு நலமாக முன போலே செம்புக் கூட்டே.

24. கூட்டியல்லோ முன்னுலே உருக்கிக் கொண்டு குறையாமல் முன் போலே மெழுக்குப் போட்டு
நீட்டியல்லோ யிதை எடுத்துச சோதித்து வாங்கி நேராக முன் போலே செம்பு கூட்டி
ஆட்டியல்லோ உருகையிலே மெழுக்குப் போட்டு அப்பனே யிப்படியே முறையள் தோறும்
பூட்டியல்லோ பத்து விசை தீர்ந்தாயானால் பொன்னும் செம்பெல்லாம் புகழ்ந்து பாரே.

25. பாரப்பா குகை தோறும் சோதித்து வாங்கிப் பதமாய் எடுத்தெல்லாம் உருக்கிக் கொண்டு
நேரப்பா ஒட்டிவிட்டு ஊதிப் போட்டு நிலைச் சதங்கம் வ கன் பணம் மதிக்க நிக்கும்
தாரப்பா தங்கமது செம்பே யான சாதகமாய் கெந்தகத்தின் செம்பிலே
ஊரப்பா கொள்ளாதும் பின வேதை ஒட்டி விக்க ஆன் பிள்ளை யிடுண்டோ சொல்லே.

26. சொல்லியதோர் செம்பிநுல் உளிகை போட சுகமாக வெஉங்கள பன்னு பன்ற
சொல்லியதோர் செம்பிநுல் வளகி பன்னு அடியான மோதிரமு மாத்திரையும் பண்ணு
சொல்லியதோர் செம்பிநுல் சித்தரெல்லாம் சுகமாக ஆபரணம் பன்னி ரே.

27. பன்னிதோர் கெந்தகத்தின் மெழுகு தன்னைப் பாலிடை தான் ரெண்டு தினந் தின்று தின்று
வென்னிதோர் மண்டலத்தில் சட்டை தானும் உத்தமனே தளமாக தள்ளிப் போட்டு
நன்னிதோர் மேனி தன்னை பார்க்கும் போது நலமாக அறனன் போலக் காணும்
புண்ணியமே செய்தவர்க்கு யிந்த வியு மெய்யும் பொய் சொல்லும் பாவிக்கு எல்லாம் பொய்யே.

28. பொய்யாகும் நூல் குடுத்த குருவைப் பார்த்து புகளாகத் தூஷித்தால் போகும் பாளாய்
பொய்யாகும் காய சித்தி வாத மூலென்னூர் போக்கோடே கோடி சென்மம் புலையரூலார்
பொய்யாகும் தேவியுட வரமெல்லாம் புகளாக யிகத்திலே பெரு வயறு மாவான்
பொய்யாகு மூலகத்தே சித்தருண்டோ வெங்கல் போசனமுங் கிடையாது புலைப்புமே.

29. ஆமப்பா முன்னெடுத்த தங்க செம்பை அடித்து நன்றாய் தகடாக அதிலே கேளு
ஊமப்பா வாச கெந்தகமுங் கட்டி உறவாகத் தகட்டுக்கு பாதி பூசி
சேமப்பாகத் தகட்டில் திரமாக தகடு கொண்டு மூடி கட்டி
தேமப்பா ஓட்டிலிட்டுறு மூடி தீக் கொருத்திக் கவ புடமாய்ச் சிறக்கச் செய்யே.

30. செய்யயிலே தேவியைத் தான் பூசை பண்ணி திறமாகச் சமாதியிலே யிருந்து பாரு
மெய்யா பிதார சத்தி தேவி நிற்ற வாச்சுதடா வாச்சுதடா காய சித்தி யென்பாள்
கையிலே வாத சித்தி கவன சித்தி வகை முறையாய் பலித்ததடா மைந்தா வென்பாள்
நேரப்பாலே பாரு தனம் வெளியாய் காட்டி கூப்பிட்டு சக்கரத்தின் குறி சொல்வேனே.

31. சொல்லியதோர் புடமாறிக் குறந்த பின்பு சுகமாகப் பூசித்து எடுத்துப் பாரு
வல்லிய கத்தார பொடியாக நெருங்கா நிதி மைந்தனே யிதை யெடுத்து வைத்துக் கொண்டு
ஒல்லியதோர் பொருதுக்குக் குன்றி யுன்று ஒங்கிய தோர் மண்டலத்தி லொளியே மீறம்
நல்லிய தோரருட்டரை யிருக்கும் போது சந்திரனே சூரியனே வென்பார் காணே.

32. காணப்பா பூசை செய்ய முறையை கேளு கைய முறையா யிசேஉடி வைத்துப் பூசை செய்வார்
பூணப்பா போதான தீபம் வைத்து புகழாக பூசை செய்வார் பெண்ணை வைத்து
நாணப்பா சக்கரத்தைப் பூசை செய்வார் நம்முடைய பூசை யென்ன மேரு போலே
ஊணப்பா நாற்பத்து முக்கோணம் பார்த்து உத்தமனே பூசை செய்வார் சித்தர் தானே.

33. தாவென்ற மேரு வைத்தான் பூசை செய்தால் சாப மிட்டாலண்ட ரண்டந் தீயாய் வேகுந்
தேன்ன மேவிகருந் தீகைது வேகும் சிற பிள்ளாய் மத்தவரால் தீண்டப் போகா
வாவென்ற மேரு வைத்தான் பூசை செய்வார் வாய் திறந்து உபதேசஞ் சொன்னார் கால
கோவென்ற காய சித்து வாத சித்து கொள்ளை யிட்டானவன் சிஉந்சன் கூறினனே.

34. கூறியதோர் வாலையுட முன்னெழுத்தைக் கேளு குறிமறித்து பூசை செய்து பின்பு கேளு
மாறியதோர் திரிபுரையின் னெட்டெழுத்தைக் கேளு மைந்தனே யிவளை நீ பூசை பண்ணி
தேறிய தோர் புவனையுட திரி யெழுத் கேளு திரமாகப் புவனையை நீ பூசை பண்ணி
சூரிய தோர மலையின் நாலெழுத்தைக் கேளு மனதுடைய பதம் போற்றிப் பூசை பண்ணே.

35. பண்ணிய பின் சாமளையின் அஞ்செழுத்தைக் கேளு பண்பாகத் தீகை முடித்த பின்பு
வன்னியதோர் வாசி யென்னூர் போகத்துக்கு மைந்தனே வைத்தே வத்த பிரமந் தீரு
கன்னிய தோரிந்த வையு மிரித்திருந்தால் காஞ்சி பண்ணையிலே வித்தைகள் யில்லே
ஒன்னியதோர் யோக மென்ன சித்தி யென்ன உத்தமனே விட்ட முறை யெருக்குங் காணே.

36. காணப்பா குறைய் சித்தி பன்னும் போத காட்டுகிறேன் வாலையிலே நின்றுகில்
பூணப்பா வாலையைப் போலிருந்து வாழ்வார் புகழாக எவ்வனத்தில் நின்றுதல்
ஆணப்பா அன்பரிது போலென்றும் வாள்வார் அப்பனே யெம்பதிலே நின்றுக் கேளே
தோணப்பா மூப்பது போல் லென்றும் வாழ்வார் சுகமான கன்பதிலே நின்றுகில்.

37. கேளப்பா யெழுபது போய்ப் பதினாறும் கெடியான யென்பதிலே நின்றுகில்
வாளப்பா யிருபது போல் லென்றுந் தான் வாங்காமல் நின்று விடும் வனத்தி கூட
நாரப்பா யிருக்கு மேல் வயசு மஞ்சி நரம்பெல்லாம் தளர்ந்து போம் கடினம் பாரும்
வேளப்பா எரித்த சிவன் சொன்ன மார்க்கம் வெவ்வேறாய் சித்தர் சொன்ன கற்பந்தானே.

சகலமான வியாதிக்கும் அனுபானம் சுத்தி.

நாவி யிருவி ரசம், கெந்தகம் அரிதாரம் வெங்காரம் இந்த ஆறு மருந்து தன்னியிலொக்கக் கூட்டி சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தன்னி நெல்லிமுள்ளி இந்த ஆறு மருந்தும் சமனுகக் கூட்டி நேர்வாளம் நாலு பங்கும் யிம்மூன்றும் சமனுகக் கூட்டி நொச்சிலைச் சாறு வார்த்தொரு நாளரைக்க முருக்கிலைச் சாறு வார்த்து ஒரு நாளரைக்க குப்பை மேனிச் சாறு வார்த்து ஒரு நாளரைக்க. கையாந்த கரைச் சாறு வார்த்தொரு இரு நாளரைக்க இந்த நாளரைச்சு மிளகு மாதிரி உருண்டை பண்ணி நிழலுலர்ந்ததாக உலர்த்தி வைத்துக் கொண்டு கபால குலைக்கு எலை பாலம் பாலில் உரைத்து உள்க்கு கொடுத்து மேலுக்கு பூசவும். மண்டைக் கரப்பானுக்கு குப்பை மேனி சாத்திலிட்டுப் பூசவும். மண்டை வியர்திக்கு செருப்படை சாத்திலிடவும். கபால குத்தலுக்குச் வெலிப் பருத்தி, மணத்தக்காளி சாத்திலிடவும். அமைபாகத்துக்கு பசுவின் நெய்யிலிடவும். அக்கரத்துக்குச் சந்தனத்திலிடவும். சுக்கிர பலத்துக்குச் சிறு புள்ளடிச் சாத்திலிடவும். கண்ணில் அமரத்துக்கு வேப்பிலைச் சாத்திலிடவும். நிணம் செருக்கி வருற வனுக்கு ஊமத்தைச் சாத்திலிடவும். காதிலே புச்சிக்கு கீழா நெல்லிச் சாத்திலிடவும். கரப்பானுக்கு கழுதை லிட்டைச் சாத்திலிடவும். நத்தைப் பருவனுக்கு வேப்பம் பட்டைச் சாத்திலிடவும். கண் புழு மேச்சலுக்கு முருக்கிலைச் சாத்திலிடவும். கண்ணிலுற ருடுசிறுக் சிறு நீரிலிடவும். சேத்தும கரப்பானுக்குப் பிறண்டை யிலைச் சாத்திலிடவும். பித்த கரப்பானுக்குப் பழஞ் சேர்த்துத் தண்ணியிலிடவும். கிரந்தி எனப்பட்டதற்கெல்லாம் ஆடாதோடைச் சாத்திலிடவும். வாத வாய்வுக்கு வெத்திலைச் சாத்திலிடவும். வாய்வுக்கு வெந்தயத்திலிடவும். சேத்தும வாய்வுக்கு கொள்ருப் பொடியிலிடவும். வயிறு கழிச்சலுக் அத்திப் பட்டைச் சாத்திலிடவும். கிறுனிக்கு சீரகத்திலிடவும். வாய்வுக் கிரானிக்கு பாவட்டைச் சாத்திலிடவும். ஒட்டுக் கிரானிக்கு எருமைத் தயிரிலிடவும். வாய்வு, உன்மத்துக்கு உமிக் கிள்ள நீரிடவம். சத்தி குன்மத்துக்கு வில்வப் பத்திரி சாத்திலிடவும். வயிற்று வலிக்கு மாவிலிங்கம் வேர்ச் சாத்திலிடவும். வாதத்துக்கு முடக் கொத்தான் சாற்றிலிடவும். தனுர் வாதத்துக்குத் தடரியிலைச் சாத்திலிடவும். அற்புத வாதத்துக்கு பொன்னாயிலைச் சாத்திலிடவும். சந்து வாதத்துக்கு சாற ணையிலைச் சாத்திலிடவும். பல்லு வாதத்துக்கு சுக்கு நீரிலிடவும். அடிப்பு வாதத்துக்கு எலுமிச்சம் பழச் சாத்திலிடவும். ஊத வாய்வுக்கு ஆதண்டையிலைச் சாத்திலிடவும். நடுக்கு வாதத்துக்கு கழற் கொட்டைப் பருப்புச் சாத்திலிடவும். குதியடி வாதத்துக்கு உவர் மண்ணிலிடவும். ஆசன பிளவைக்கு தண்டற பிளவைக்குப் பொன்னுங் கண்ணிச் சாத்திலிடவும். உச்சிப் பிளவைக்குப் பசுவின்

நெய்யிலிடவும். பித்த சுரத்துக்கு முலைப் பாலிலிடவும். சன்னி வாத சுரத்துக்கு சிட்டுக் குருவி முட்டையிலிடவும். பித்த சன்னிக்கு ஊமத்தையிலைச் சாற்றிலிடவும். அலத்த சன்னிக்கு அவரை யிலைச் சாற்றிலிடவும். நடுக்கு சன்னிக்கு சாறணை யிலைச் சாற்றிலிடவும். பம்புக்கு மாவிலைச் சாற்றிலிடவும். அஞ்சுவத்துக்கு வெற்றிலைச் சாற்றிலிடவும். நசியத்துக்கு சிறு வழுதலை சாற்றிலிடவும். பனையன் பாம்புக்கு ஊமத்தையிலைச் சாற்றிலிடவும். முசுமுசுக்கை சாற்றிலிடவும். தம்பனத்துக்கு அத்திப் பாலிலிடவும். யோனி ஒட்டத்துக்கு பிரண்டையிலைச் சாற்றிலிடவும். ஊர் சுட்டுக்கு முருங்கைப் பூச் சாற்றிலிடவும். கோரத்துக்கு அரப்பொடி யிலிடவும். நீர்க் கோவைக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். பித்த பாண்டுவுக்கு சங்கிலைச் சாற்றிலிடவும். சோகைக்கு சீரகத்திலிடவும். காமாலைக்கு வெள்ளரிசி யிலிடவும். வறக் காமாலைக்கு கடுக்காய் சாற்றிலிடவும்.

சங்கு வடை கிரமம்.

புளியம் பட்டைச் சாம்பல் ஒரு பங்கு பஞ்ச லவண வகை அந்த சாம்பலுக்குச் சரியாய் இந்த இரண்டுக்கும் சரியாய் இதை வேப்பம் பட்டைச் சாற்றிலரைத்து சங்கு பற்பம் கூட்டி அதின் பிறகு பெருங்காயம் சுக்கு, மிளகு, திப்பிலி, இந்த நாலும் அதுக்கு சரியாய்க் கூட்டி வேப்பம் பட்டைக் கசாயத்தில் அரைத்து சணப்பம் விரைப் பிரமாணம் குளிகை பண்ணி வென்னீரில் கொடுக்க மகா வாத சூலை எல்லாந் தீரும்.

சங்கு வடையம்.

மருள்க் கிழங்கு புளியாறைக் கிழங்கு அம்மான் தாளன் கிழங்கு பிரண்டை வேர், கொடி வேலி வேர், திரிபலம் பஞ்ச மூலம் சுக்கு, மிளகு, திப்பிலி இந்த நாலும் அதுக்குச் சரியாய் கூட்டி வேப்பம் பட்டை கசாயத்தில் அரைக்க சணப்பம் விரைப் பிரமாணம் குளிகை பண்ணி வென்னீரில் கொடுக்க மகா வாத வல்லை நோவு தீரும்.

குன்மத்துக்கு உசிதம்.

மருள் கிழங்கு புளியாறைக் கிழங்கு, அம்மணந் தாள் கிழங்கு, பிரண்டை வேர் கொடி வேலி திரிபலம் பஞ்ச மூலம், சுக்கு, மிளகு, திப்பிலி அதிமதுரம், சீரகம், சத்திக்ஷாரம், எவ்வாக்ஷாரம், நவ்வாக்ஷாரம், புங்கம், வேர், பெருங்காயம், ஓமம் இது வெல்லாத்துக்கும் மூன்று பங்கு சங்கு பற்பம் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு நாளரைத்து இலந்தைக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொடுக்க வயிற்றில் சூலை, அசீரணம், அதிசாரம், அரோசிகம், அக்கினி மாந்தம், வயிறு உப்புற கிருமி ரோகம், குன்மம் வயிற்றில் கட்டி இவைகள் தீரும்.

புளியம் பட்டை சாம்பல் பலம்.உ, அதுக்குச் சரியாய் பஞ்ச லவணம் எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து அதிலே சங்கு பற்பம் பலம். , கூட்டி மிளகு, பெருங்காயம், செவ்வியம் வகை ஒன்றுக்கு மூன்று விராகனிடை ரசம் மூன்று விராகனெடை கெந்தகம் எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து அதிர்சிக் கொட்டை பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்க குன்மம் சூலை, அக்கினி மாந்தம், விசுஷ்டாசி, அதிசாரம், கிரஹணி என்னேம், பெருங் கொரல், பிணி விக்கல் தீரும்.

மகா சங்குடையம்.

ரசம், கெந்தகம், நாபி விஷ பாசப்பம் இது மூன்றும் மூன்று பங்கு கொடி வேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம் இது வகை ஒன்றுக்கு மூன்று பங்கு கூட்டி நாகு லோகம் எவ்வாக்ஷாரம், வெங்காரம், புளியம் பட்டை சாம்பல் இந்த லவணம்

விடலவணம், காசுலவணம், சங்கு பாசப்பம் இது வகை ஒன்றுக்கு விராகனெடை ஒன்று கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திலரைச்சு குன்று மணிப் பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்க சூலை, அஜீரணம், அஸிமுகம், ஆரோசிகம், வலபந்தம், அக்கினி மாந்தம், வயிறு உப்புற மல கிருமி ரோகம், குன்மம் யிதுகள் எல்லாம் தீரும்.

ரச_பூபதி.

சங்கு வடையம், கெந்தகம், ரசம், இந்து லவணம் வெண்காரம், நாபி பல கறை பற்பம், சங்கு பற்பம் இதுகள் கூட்டி பஞ்ச மூல கசாயம் புங்கம் வேர் காசயம் இஞ்சிச் சாறு இதுகளில் ஒவ்வொரு சாமம் அரைத்து மடக்கில் வைத்து ஒவ்வொரு குக்கிட புடம் போட்டு ஆற விட்டு எடுத்துச் சூரணமாய் அரைத்து இது எல்லாத்துக்கும் சரியாய் மிளகு சூரணம் கூட்டி பஞ்ச லோக கிசாயத்தில் கொடுக்கவும். பஞ்ச குன்மம், சேஷ்டு மகன் சுவாசம், மந்தாக்கினி, அக்கினி மாந்தம் இதுகள் தீரும்.

ரசம் பலம்.க, கெந்தகம் பலம்.க, நாபி பலம்.க, தாம்பிர பற்பம் பலம்.க, செருப்படைச் சாத்தில் நாலு சாமம் அரைத்து குன்று மணிப் பிரமாணம் குளிகை பண்ணி காசு குப்பியிலிட்டு சீலை மண் பூசி வாலுகா எந்திரத்தில் நாலு சாமம் தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினியில் எரித்து ஆறின பிறகு எடுத்து இந்த மருந்துக்கு நாலத்தொன்று நாபி கூட்டி நாபிக்குச் சரியாய் மிளகு கூட்டி வெற்றிலைச் சாத்தில் நாலு சாமம் அரைத்து அவரைப் பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்க சகல ரோகமும் சுவாச காசம், பாண்டுவ காமாலை, சூலை வாய்வு, சன்னி பாதம், சுரம் இதுகள் தீரும்.

தாம்பிர_பூபதி.

ரசமும், கெந்தகமும் சரியாய்க் கூட்டி இதுக்கு நாலத்தொன்று நாபி கூட்டி மூன்றுக்கும் பதிமூ பங்கு தாம்பிர பற்பம் கூட்டி செருப்படை யிலைச் சாறு விட்டு மூன்று நாளரைத்துக் குளிகை பண்ணி காசுக் குப்பியிலிட்டு வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினியில் எட்டு சாமம் எரித்து அகலிலிட்டு மூடி சீலை மண் பூசி ஒரு குக்கிட புடம் போட்டு ஆற விட்டு எடுத்து பின்னேயும் இந்த மருந்துக்கு நாலத்தொன்று நாபியும் நாபிக்குச் சரியாய் மிளகு கூட்டிக் கொட்டைக் கரந்தை சாத்தில் ஒரு சாமம் அரைத்து குன்று மணிப் பிரகாரம் குளிகை பண்ணி இஞ்சிச் சாத்தில் கொடுக்க தீரும் வியாதி: அக்கினி மாந்தம், சுரம், வாத சேஷ்டுமம், சோகை பாண்டு, வைபிவிகம், குன்மம் மூலம், சன்னி பாதம் இதுகள் தீரும்.

அக்கினி_குமார_பூபதி.

ரசம், கெந்தகம், தாம்பிர பற்பம், எமாஊஷிகம், பச்சைசிலை, அரிதாரம் இதுகள் சரியாய்க் கூட்டி செருப்படைச் சாத்தில் இரண்டு சாமம் அரைத்து குன்று மணிப் பிரமாணம் குளிகை பண்ணி காசுக் குப்பியிலிட்டு சீலை மண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினியில் கமலாக்கினியில் எட்டு சாமம் எரித்து அதின் பிறகு எடுத்து இதுக்கு நாலத்தொன்று சிலாபி கூட்டி நாபிக்குச் சரியாய் மிளகு கூட்டி இஞ்சிச் சாத்தில் சாமம் அரைத்து உளுந்துப் பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்கத் தீரும் வியாதி வலம் சத்தியாம் தீபனமாம். ஆரோசிகம் அஷ்ட்ட விக்கினி வாய்வு, சேஷ்ம சுவாச காசம் பண்டு சகல ரோகமுந் தீரும்.

சித்தாக்கினி_பூபதி.

ரசம் கெந்தகம், வெண்காரம், நாபி இதுகள் சரியாய்க் கூட்டி எருக்கிலைச்

சாந்தில் சாமம் அரைத்து வச்சிர மூசை பண்ணி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினியில் ஒரு சாமம் எரித்து ஆறின பிறகு எடுத்து இஞ்சிச் சாத்தில் சாமம் அரைத்து குண்டு மணி பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்க சர்வ சன்னியும் சத்தியும் தீரும.

மார்க்கண்ட பூபதி.

ரசம், வெங்காரம், கெந்தகம், தாளகம், மனேசிலை இதுகள் சரியாய்க் கூட்டி செருப்படை சாத்தில் எட்டு சாம மரைத்து காசக் குப்பி யிலெடுத்து சீலை மண் புசி வார்த்து நொச்சில் சாத்தில் அரைத்துக் குண்டு மணிப் பிரகாரம் குளிகை பண்ணி கொடுக்க பதிமூன்று வகை சன்னி சுரம் தீரும்.

மகா அக்கினி குமார பூபதி.

ரச பற்பம், தாம்பிர பற்பம், நாபி, வெங்காரம் இது சரியாய்க் கூட்டி நொச்சில் சாறு, கொடிவேலிச் சாறு, கண்டங் கத்திரிச் சாறு, தழுதலைச் சாறு இதுகளில் ஒம்பத்தொரு நாள் அரைத்து குண்டு மணிப் பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்க சன்னி பாதம் கூசிக வாய்வு வாய் அடைக்கப் போனது இதுகள் தீரும்.

மகா வாதரோகத்துக்கு சொறண பூபதி.

ரச பற்பம், தாம்பிர பற்பம், கெந்தகம், சொவற்ன பற்பம், காந்தபற்பம் வெள்ளி பற்பம் இதுகள் சரியாய்க் கூட்டி செருப்படை சாத்தில் எட்டு சாமம் அரைத்து குண்டு மணி பிரகாரம் குளிகை பண்ணி காசிக் குப்பியிலிட்டு சீலை மண் புசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினித் கமலாக்கினி காடாக்கினியில் மூது சாமம் எரித்து ஆறின பிறகு எடுத்து இஞ்சிச் சாத்தில் சாமம் அரைத்து பயறிடை பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சிச் சாத்தில் திப்பிலியில் கொடுக்க சேஷ்பம் திரிதோஷம், பதிமூன்று சன்னி, அங்க வாதம், அதிர் வாதம், குரு வாதம், மகா வாதம், ஆம வாதம், சர்வ வாதமும் இது முதலாய் அந்தர காரமான இருட்டில் சூரியனுதயமானது போலிருக்கும்.

சன்ன பதிமூன்றுக்கும் சர்வேசுவர பூபதி.

ரசம், கெந்தகம், தாம்பிர பற்பம், தாளகம் இது வகைக்கு பலம்.க, வெள்ளைப் பாஷாணம் பலம்.உ, கௌரி பாஷாணம் பலம்.உ, இதுகள் கூட்டி சித்திர மூல கசாயத்தில் இரண்டு சாமம் அரைத்து மிளகு பிரமாணம் குளிகை பண்ணிக் காசிக் குப்பியி லிட்டு சீலை மண் புசி வாலுகா எந்திரத்தில் கமலாக்கினியில் நாலு சாமம் எரித்து ஆற விட்டு எடுத்து இந்த மருந்துக்கு நாலத்தொன்று சீல நாபி கூட்டி நாபிக்குச் சரியாய் மிளகு கூட்டி நொச்சில் சாத்தில் ஒரு சாமம் அரைத்து உழுந்து பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சிச் சாத்தில் கொடுக்க பதிமூன்று வகை சன்னியும் ஏகாக்சியம் திரிமாக்சியம், சுரமும் தீரும்.

வாசா பிறங்க கிறுதம்.

ஆடாதோடைச் சாறு, காசருங் கன்னிச் சாறு; பசுவின் கோமியம் பசுவின் பால் இதுகள் கூட்டி இதுக்கு கலக்க திரவியம் திப்பிலி மூலம். அரத்தை, தாளிச பத்திரி இது வகைக்கு பலம்.வ, சூரணம் பண்ணி அந்த நெய்யில் போட்டு மெழுகு பக்குவத்தில் வடித்துக் கொண்டு குடிக்க சுவாசம் அஸிறுகம் பாண்டுவ மூலரோகம் சோப, பிலிகம் சுரம் அக்கினிமாந்தம், நாசியில் விழுகிற ரத்த பித்தம், ரத்த வாந்தி இதுகள் தீரும்.

அருகம் வேர், நெய்தல் கிழங்கு, தாமரைக் கிழங்கு, மஞ்சட்டி, வெம் மருள் கிழங்கு வெட்டி வேர், கோரைக் கிழங்கு, சந்தனம், திராட்சை பழம், அதிமதுரம், வகைக்கு விராகனெடை.ங, சூரணம் பண்ணி இரு நாழி நெய்யில் போட்டு அருகன் வேர் சாறு பிழிந்து அதில் அந்த சூரணம் போட்டு மெழுகு பக்குவத்தில் காய்ச்சி வடித்துக் கொண்டு முடிக்க தலைக்கு விடவும். மூக்கில் நசியம் பண்ணி ரத்த வாந்தி பைத்திய காமாலை இதுகள் தீரும்.

மகா வாசக் கிருதம்.

ஆடாதோடையிலைச் சாறு நெய் நாழி, பால் இதுகள் கூட்டி கலக்கும் நிலவேம்பு கொடிசைப் பாலைப் பட்டை, அதிமதுரம், சந்தனம் வெட்டி வேர் இலுப்பைப் பூ கொத்தான் நன்னாரி வேர், நெல்லிப் பருப்பு, தாமரைக் கிழங்கு, நெய்தல்க் கிழங்கு, மாதளங் கொழுந்து வகைக்கு விராகனெடை.க, கூட்டி சூரணம் பண்ணி அந்த நெய்யில் கலந்து மெழுகு பக்குவமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு ஒரு பலம் சர்க்கரையும் உழக்கு தேனும் கலந்து வைத்துக் கொண்டு குடிக்க இரத்த பாித்தியம், ஸ்வாச காசம் க்ஷயம், சுரம் வேதம்புலி முகம் இதுகள் தீரும்.

பாடாதி கிருதம், வராசி கந்த கிருதம்.

வட்டத் திருப்பி வேர், இலவம் பிசின், மாதளங் கொழுந்து, பெரு மரப்பட்டை கோரைக் கிழங்கு, திராட்சை பழம், சந்தனம், மாங்கொட்டை, நாவல்க் கொழுந்து, நிலப்பனங் கிழங்கு, வாழைக் கிழங்கு இது வகை ஒன்றுக்கு விராகனெடை. ஒன்று கூட்டி நாழிப் பாலில் அரைத்து நாழி நெய்யில் வார்த்து பக்குவமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு ஸ்திரீகளுக்கு அஸ்தி சுரம், பெரும்பாடு குறு சூலை இதுகள் தீரும்.

வாராதிந்த கிருதம்.

நிலப்பனைங் கிழங்கு பலம்.ள, நாவல்ப் பட்டை பலம்.ள, கருங் காலிப் பட்டை பலம்.ள, முருக்கம் பட்டை பலம்.ள, இதுகள் கூட்டி பதினாறு மரக்கால் தண்ணீரில் போட்டு நாலத் தொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு அதிலே பசுவின் நெய் நாழி வார்த்து புளியாரைச் சாறு தண்ணி முட்டான் கிழங்குச் சாறு பாலில் நாழி அந்த நெய்யில் கலந்து கலக்கும் திரவியம் சீரா ஒரு சாடா மாங்கிஷம், கொத்தமல்லி விரை, வட்டத் திருப்பி வேர், மாங்கொட்டைப் பருப்பு, திரிபாலை, சற்சூர பழம், சுக்கு, திராட்சை பழம, செம்மரம், எலவம் பிசின், தாமரைப் பூ, நாகேசரம், கொடிசை பாலைப் பட்டை, கொத்தான் எருக்கம் ப அதிமதுரம், ம மாதளங் கொழுந்து, அதிவிடையம், கோரைக் கிழங்கு விலைப் பழம், திப்பிலி அருக கிழங் கிழங்கு நன்னாரி வேர் வெட்டி வேர் இது வகை ஒன்றுக்கு விராகனெடை ஒன்று கூட்டி சூரணம் பண்ணி பாலிலரைச்சு சந்தித அந்த அந்த நெய்யில் கலந்து மெழுகு பக்குவத்தில் காய்ச்சி வடித்துக் கொண்டு உழக்குத் தேன் கூட்டி குடிக்க யோனியில் பிறந்த ரோகமெல்லாம் போம். நளாகச்சே நீல வர்ணமாய் கசாயமாய், பச்சை வர்ணமாய் விழுகிற ரோகம், ஸ்வாச காசம், அஸ்திசுரம், சுர சாதகம் மேகம் பாண்டுவ காமாலை இதுகள் தீரும்.

கண்டகாரி கிருதம்.

கண்டங் கத்திரிச் சாறு நாழி நெய் நாழி கூட்டி, சுக்கு, மிளகு, திப்பிலி, மாதளங் கொழுந்து, சவ்வாஊசாரம், எவ்வாஊசாரம், வாய் விளங்கம், செங்கல், கோஷ்டம், கடுக்காய் வகை ஒன்றுக்கு விராகனிடை ஒன்று கூட்டி சூரணம் பண்ணி

அதை நெய்யில் கலந்து மெழுகு பக்குவத்தில் காய்ச்சி வடித்து குடிக்க இருமல், உப்பிசம் இந்திர ரோக மாகிறது, நெஞ்சுக்குள்ளே நோவு, சுரம் , பேதிச்சல் இதுகள் தீரும்.

திசமூல கிருதம்.

மூன்லை வேர், பாதிரி வேர், வில்வை வேர், சித்த மல்லி வேர், பேராமல்லி வேர், சிறுவழுதலை வேர், கண்டங் கத்திரி வேர், நெருஞ்சி வேர், காட்டு வாழை வேர், பெருங் குமிழ் வேர் இது வகை ஒன்றுக்கு பலம்.ப, இதுகள் கட்டி எட்டு மரக்கால் தண்ணீரிலே போட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு அதிலே பிராழி நெய் வார்த்து கலக்கும் சயிந்த லவணம், சுண்டு பறங்கி, கர்கடா சிங்கி, செவ்வியம், தாளிச பத்திரி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு இது வகை ஒன்றுக்கு விராகனெடை ஒன்று கட்டி சூரணம் பண்ணி அதை நெய்யில் கலந்து மெழுகு பக்குவத்தில் காய்ச்சி வடிச்சுக் கொண்டு குடிக்க விக்கல் சுவாசம் பாரி சூலைகள் குன்ம ரோகம் அளரோகம் மகோதிர ரோகம் இதுகள் தீரும்:

சத்த விபிசி கிக்குழ.

சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபாலை, கோரைக் கிழங்கு, வாய்விளங்கம்; செவ்வியம், கொடிவேலி, ஏலம், திப்பிலி மூலம், தேவதாரி கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள் சுரலவணம், சயிந்தி லவணம், சூலை திப்பிலி இதெல்லாம் ஒரு பங்கு சூரணம் பண்ணி மயிசாஷி பாதியும் அதிலே கட்டி அதுக்குத் தக்க நெய் தேன் வார்த்து பிசைந்து அழிஞ்சிக் கொட்டைப் பிரமாணம் குளிகை பண்ணி தின்ன அஷ்ட குஷ்டமும் அசாத்தியம் முதி விரணம், சுவாசம், அரிசரோகம், பகந்திர குன்மம், பிலிகம், வயிப்புற அளசம் அந்திர விருதி சுரம், சேஷ்சயம் இதுகள் தீரும். மகாதி ராட்சாதி ரசாயனம்

மாஷ்சை பழம் பலம். , பொரி பலம். , சுக்கு பலம். , கொத்தமல்லி பலம். வெட்டி வேர் பலம் , அதிமதுரம் பலம். , சந்தன கிராயி பலம் பருத்திக் கொட்டைப் பருப்பு பலம். , ஏலம் பலம். நெல்லிப் பருப்பு பலம். கோரைக் கிழங்கு பலம். , சீரகம் பலம். , வில்வைப் பத்திரி வேரும் பிஞ்சும் பலம்.எ, சீந்திக் கொடி பலம்.ருய இதுகள் கட்டி பதின மரக்கால் தண்ணீரிலே போட்டு எட்டிலொன்றாக காய்ச்சி வடித்து அதிலே நூம்பது பலம் சர்க்கரை போட்டு நெல்லிக்காய்ச் சாறு நாழி, பயறு கட்டு நாழி, பொரி கசாயம் நாழி கொம்மட்டி மாதளம் பழச் சாறு நாழி, எலுமிச்சம் பழச் சாறு நாழி, வெள்ளை வெத்திலைச் சாறு நாழி, இதுகள் கட்டி இதுக்கு கலக்கும் சுக்கு பலம்.ச, லவுங்கம் பலம்.ச, நாகேசரம் பலம்.க, கொத்தமல்லி விரை பலம்.க, சீரகம் பலம்.க, ஏலம் பலம்.க, திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.க, கொடிவேலி பலம்.க, செவ்வியம் பலம்.க, தாளிச்ச பத்திரி பலம்.க, இதெல்லாம் சூரணம் பண்ணி அந்த லேகத்திலே போட்டு லேகம் பக்குவமாய்க் காய்ச்சி அதிலே நாழித் தேன் வார்த்து கலந்து தின்ன ருத்திரரோகம், அரோசிகம், வாந்தி குன்மம், இருமல், உப்புசம், சுவாசம், அஸிரகம், தீபனமாம்.

மகா கூழ் பாண்ட ரசாயனம்.

பெரும் பூசணிக்காய்ச் சாறு பலம். பாலினிக் கிழங்கு பலம். கரும்பு பலம். , வாழைக கிழங்கு சாறு பலம். நெருஞ்சி இதுக்கு கலக்கும் திரவியம் திராட்சை பழம், கர்ஜூர பழம், கொத்தமல்லி விரை, சந்தனம், சீரகம், அதிமதுரம், ஏலம், லவுங்கப் பட்டை, லவுங்கப் பத்திரி, பஞ்ச மூலம், லவுங்கம், வாய்

இலங்கம், சதகுப்பி விரை, நற்கோலம், பொட்டு தாமரைப் பூ, நாகேசரம்,
நெல்லிப் பருப்பு, வெட்டி வேர், ரேணுகம், ஓமம், மிளகு, கருஞ்சீரகம் இதுவகை
ஒன்றுக்கு மூன்று விராகனெடை இதுகள் கூட்டி சூரணம் பண்ணி அந்த நெய்யில் போட்டு
மெழுகு பக்குவமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு அதிலே தேன் புலம். வாத்திக்
கொண்டு தின்னத் தீரும், வியாதி க்ஷயம், காச்சல், சுரம், வாந்தி, மூர்ச்சை, உபத்
மாரம், காமாலே, ரத்த பித்தம், அசுரகம், அஸ்தி சுரம், யோனியில் மூன்று மாச
மும் நின்று விடுகிற பிள்ளை நிற்கும். கெற்ப்ப மிளி வர்த்திக்கும். சரீரம் புஷ்டியாம்

ரச செந்தூர யோகம்.

ரச செந்தூரம் சுத்தி ரசம் சுத்தி நெல்லிக்காய், கெந்தகம் இரண்டும் சரியான
அளவாகக் கூட்டி பொடி செய்து காசிக்குப்பியில் அரை அளவு போட்டு அந்தக் குப்பி
வாய்க்கு வலப்பக் கல் கொண்டு அடைத்து ஏழு சீலை மண் பூசி வாலுகா எந்திரத்தில்
தீபாக்கினி கமலாக்கினியில் தொங்கமா நாழிகை எரித்து ஆற விட்டு எடுக்க செந்தூ
மாம். இந்த செந்தூரத்தில் தீரும் வியாதி சர்க்கரையுடன் அநுபானம் பண்ணிக் கொடு
க குன்மந் தீரும். முசுமுசுக்கைச் சாற்றில் கொடுக்க சிலேஷ்மம் தீரும். சுர வெங்
காயச் சாற்றில் கொடுக்க ரத்த க்ஷயந் தீரும். கடுக்காய் கஷாயத்தில் கொடுக்
சுவாச காசந் தீரும். திப்பிலியில் கொடுக்க இருதய ரோகந் தீரும். நொச்சில் சாத்
தில் கொடுக்க இருதய ரோகந் தீரும். சர்க்கரையுந் தேனுங் கூட்டிக் கொடுக்க பயித்
திய க்ஷயந் தீரும். நொச்சில் சாற்றில் கொடுக்க காச்சல், குளிர் தீரும். நன்னாரி
வென்னீரில் அரைத்துக் கொடுக்க முறைக் காச்சல் விடும். கொடிவேலி கஷாயத்தில்
கொடுக்க கெடுங் காச்சல் விடும். குப்பை மேனிச் சாற்றில் கொடுக்க முறைக் காச்
சல் விடும். வெல்லத்திலாவது மோரிலாவது கொடுக்க அதிசார சுரந் தீரும். வெண்
ணெயில் கொடுக்க விக்கலும் வாந்தியும் தீரும். பருத்திக் கொட்டையைத் தண்ணீர் வார்
த்து இடித்து பிழிந்து அந்த தண்ணீரில் கொடுக்க வெள்ளை மூத்திரந் தீரும். வென்னீரில்
சங்கு உரைத்து கொடுக்க காமாலை தீரும். நெய்தல் பூச்சாறாவது அதின் கிழங்கு சா
வது கொடுக்க ரத்த பயித்தியந் தீரும். கஞ்சா சாற்றில் கொடுக்க கிராணி தீரும்.
நாயுருவிச் சாற்றில் கொடுக்க மூல வியாதி தீரும். தேள் கொடுக்கு பூண்டு சாற்றில்
கொடுக்க நீர்க்கட்டுத் தீரும். உடம் பெரிப்புத் தீரும். எலும்புத் தண்ணீரில் கொடுக்
நீர்ப் பாட்டுக் கழிச்சல் தீரும். கருங்காலிப் பட்டைச் சாற்றில் கொடுக்க நாலு
நாளைக் கொடுக்கால் கழியிற சங்க கிருமியும் ரத்தக் கழிச்சலும் தீரும். மாவிலிங்கக்
கஷாயத்தில் கொடுக்க அக்கினி மாந்தந் தீரும். சங்க இலைச் சாற்றி கொடுக்க
விஷபாகம் தீரும். தினம் ஒரு கஷாயத்தில் கொடுக்க சர்வாங்க வீக்கமுந் தீரும்.
பேய்க் கரும்பின் சாற்றில் கொடுக்க உமாதம் தீரும். மருதம் பட்டை சாற்றில்
கொடுக்க சுக்கிலப் பிரமியந் தீரும். அதிவிடயம் குடிநீர் பண்ணி வென்னீரில் கொடுக்க
வயிறு கழிச்சல் மேல் எடுத்த வயிற்று வலி தீரும். ரசம் கெந்தகம்

ரசம், கெந்தகம், சொர்ண பசுப்பம், நாபி, வெள்ளி, பசுப்பம், லோ
பசுப்பம், தாம்பிர பற்பம், வங்க பற்பம், நாக பசுப்பம், அப்புரக பசுப்பம்,
காந்த பசுப்பம் இவை எல்லாம் சரியாய்க் கூட்டி நொச்சில் சாறு கரிசலாங் கண்ணிச்
சாறு, சர வென் சாறு பேய்ப் பேத்தி சாறு, ஆடாதோடை இலைச் சாறு, சீந்தி
கொடிச் சாறு, எருக்கிலை சாறு, ஊமத்தைச் சாறு, துளசிச் சாறு, எலுமிச்சம்
பழச் சாறு, கொடி வேலிச் சாறு இதுகள் ஒவ்வொன்றில் ஒவ்வொரு நாழிகை அரைத்
து அதை கடுக உலர்த்தி காசிக் குப்பியில் எடுத்து குப்பி வாய் வலப் பக்கல் அடைச்ச

எழுச்சீலை மண் பூசி வாங்கா எந்திரத்தில் கமலாக்கினி காலாக்கினியில். முப்பது நாழிகை
எரிச்சு ஆறின பிறகு எடுத்து ஊட்டு. பிச்சு எருமைத் தயிர்ப் பிச்சு, கழுதைப் பிச்சு, குதி
ரைப். பிச்சு, மனிதன் பிச்சு, ஜி ------ பிச்சு, மீன் பிச்சு, ஆமையின் பிச்சு, முதலையின்
பிச்சு, பாம்பு. பிச்சு, கோழிப் பிச்சு, பன்றிப் பிச்சு. காட்டுப் பன்றிப் பிச்சு,
புலிப் பிச்சு, நரிப் பிச்சு, நரித்தலையோப் பிச்சு, பின்னையு முண்டான சீவந்துகள். பிச்சு,
எல்லாம். கூட்டி அரைத்து கருகுப். பிரமாணம் குளிகை. பன்னி அறபான விசேஷத்தில் கொடுக்க
குசிக வாயு, முதலாய். அசாத்தியமான ரோகம், சன்னி பாத முதலாய் தீரும்.
கால விறத்தியாளும், தெளிவு கொடுத்தப் போம். அவமிர்த்தியாளும் குணமாம்.

சோதி ரசம்.

ரசம், நாபி, கெந்தகம், அரிதாரம், கௌரி பாஷாணம் தீ தொட்டி
பாஷாணம், லிங்குலிகம், மயில் துத்தம், அப்பிரகம், நேர்வாளம், வெங்காரம்.
நிமிளை, சத்திச. ஷாரம், எவ்வஷாரம், சயிந்தி லவணம், விடலவணம், சமுத்திர
லவணம், காக லவணம், சீனக் காரம், மட்டிக் காரம், கோமூத்திரம் சிலாசித்து
கற்பூர சிலாசத்து, காந்த பஸ்பம், லோக பஸ்பம், தாம்பிர பற்பம், வெண்கல
பற்பம், வங்க பற்பம், நகர பற்பம், சொர்ன பற்பம், வெள்ளி பற்பம், நவரெத்தின
பற்பம், சுக்

சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, சீரகம், கருஞ்சீரகம், கண்டு பரங்கி, அதி
மதுரம், கடுகுரோகணி, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, செங்கல் வகோஷ்டம்,
கற்காட சிங்கி, கார்கோலம், சடா மாஞ்சிஷம், எட்டிக் கொட்டை இது வெல்லாம்
சரியாய்க் கூட்டிக் கொண்டு கொடிவேலி இரும்பிலி வேர், மருள்க் கிழங்கு, பேய்ப் பீர்க்கம்
வேர், கருங்காலிப் பட்டை, கொடிசை பாலைப் பட்டை, அரசம் பட்டை, விசிறிப் பட்டை
தன்னி மிட்டான் கிழங்கு இலவம் பட்டை முருங்கப் பட்டை, முருக்கம் வேர், சித்த முட்டி
பெருமுட்டி வேர் தும்பி வேர், வாழைக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, வெட்டி வேர், தும்பி
சூ வேர், சங்கம் வேர், தாழை விழுது, அமுக்கிறாங் கிழங்கு, முயிலம் வேர், புங்கம்
வேர், நன்னாரி வேர், முருக்கிலை ஊமத்தையிலை, ஆடாதோடையிலை, செம்பருத்தி யிலை,
ஆமணக்கு இலை, சோலை இலை, பேய்ப் பேத்தி யிலை, கோரைக் கிழங்கு, கண்டங்
கத்திரி யிலை, சிவனார் வேம்பிலை யிலை, நொச்சி யிலை, கருநெல் தன்னி முச்சுறட்டை எலைச்
சாறு, வேளை இலை, காட்டுப் பாகலிலை, பிரண்டை பேய்ப்புடல், மணத்தக்காளி யிலை,
முருங்கிலையிலை, நொச்சியிலை, புளியிலை, அமசிப்பை யிலை, வேப்ப மீர்க்கு, உத்தாமணி யிலை
அகத்தி யிலை, கத்தாழை யிலை, காவர யிலை, ஆற்க்கம் பு, சேப்பு நெருஞ்சி நாயுருவி யிலை
கீழா நெல்லி யிலை, வெள்ளறுகு, விஷ்ணு கிரந்தி, கற்சாயிலை, தாமரையிலை,
கொள்ளு இலை, உந்து இலை, தேத்தாங் இலை, சாயிலை, அம்மான் பச்சரிசி
யிலை, பேய்மல்லி யிலை, பற்படாகம், கமுகு யிலை, பிரண்டை யிலை, ஊர்வச லை
யிலை, பூசனி, செரங் கொட்டை பால், சோறையிலை, பெரும் பூசனிக்காய்
எலுமிச்சம் பழம், மாதுளம்பழம், நாரத்தம் பழம், இளநீர், கடுக்காய், தானிக்காய்,
நெல்லிப் பருப்பு, கடலைப் பருப்பு, சதகுப்பி விரை, கொத்தமல்லி விரை, செண்பக
மொக்கு பிராய பால், எருக்கம் பால், ஆலம் பால், சதுரக் கள்ளிப் பால் முன்
சொன்ன வேர் வகை கசாயங்கள் இலைச் சாறு கிழங்குச் சாறு வகைகள் கசாயம்
சாறு யில்லா தெல்லாம் தண்ணீர் வார்த்து பிழிந்து கொள்ளவும். இதுக்கு ஒவ்வொன்றில்
ஒவ்வொரு தாம்பிர தேகம் மீந்த் தேகமாக அரைச்சு உலர்த்தி காசி டிப்பியிலிட்டு
குப்பி வாய்க்கு உரையில்லாமல். பல பக்களிட்டு அடைச்சு ஆறின பிறகு எடுத்துக் கொண்டு

இதுக்குக் கூட்டும் பிச்சு வகைகள். எருமைக் கிடா பூனை, ஆடு, நரி, நாய், கரடி, புலி, குதிரை, கழுதை, மீன் ஆமை பன்னி, காட்டுப் பன்னி, முள்ளம் பன்றி, கோழி காட்டுக் கோழி, மயில் பாம்பு, முயல், முதலை, மனிதன், கோட்டான் (புலி முடத்தி) கடம்பை காட்டெருமை குரிச்சல், ஆனை கோட்டான், கூனி இது முதலான பின்னையு முண்டான சில சித்துகள் பிச்சுக் களெல்லாம் கூட்டி அரைத்து பயறு பிரமாணம் குளிகை பண்ணி கடினமான வியாதிக்கு கற்பூரங் கூட்டி அதுக்கு எத்த அனுபானத்தில் கொடுக்க கைகண்டதியான வியாதிக்கெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் தயிரும், சோறும், மோரும் ஆகும். பிறகு சர்க்கரை, கரும்புச் சாறு பின்னையும் குளிர்த்தியான சந்தனம், கற்பூரம் வெட்டி வேர், குருவேர் இதுகள் ஆகும்.

விரலிட சித்த ரசம்.

ரசம் பதினெட்டு கெந்தகம், பன்னிரெண்டு நிறை, அரிதாரம் ஒன்பது நிறை மனோசிலை நாலு நிறை, தாம்பிர பற்பம், மூன்று நிறை, லோக பற்பம், ஆறு நிறை, காந்த பற்பம், இரண்டு நிறை இது வெல்லாம் கூட்டி மாதளம் பூச்சாத்தில் அரைத்து உலர்த்தி காசிக் குப்பியில் எடுத்து குப்பி வாய்க்கு புரையில்லாமல் பல பக்கல் அடைத்து ஏழு சீலை மண் புசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி கமலாக்கினியில் முப்பத்தென்பது நாழிகை எரிக்க செந்தூரம் போலே ஆம். ஆற விட்டெடுத்து இஞ்சிச் சாத்திலரைத்து குன்று மணிப் பிரமாணம் குளிகை பண்ணி வியாதிக்கேத்த அநுபானத்தில் கொடுக்க தீரும் வியாதி சுரம், சுவாச காசம், பைத்தியம், காமாலை மகோதரம், பாண்டுவம், அலிங்கம், எப்படும், பஞ்ச லோக சன்னி பாதம் இதுகள் தீரும்.

கோழிமுட்டையில் செந்தூரம் போடும் வகை.

கோழி முட்டையை வெச்சம் போக்கி அதிலே இருக்கும் கருவெல்லாம் வாங்கிப் போட்டு ஒரு முட்டைக்கு இரண்டு விராகனெடை ரசமும் ஒரு விராகனிடை கெந்தகமும் பொடி பண்ணி அந்த முட்டையில் அடைத்து அந்த முட்டை கூட்டிலே தானே மூடி காசுக் கட்டி பந்தனம் பண்ணி அதுக்கு மூணு சீலை மண் புசி வாலுகா எந்திரமாக தீபாக்கினி கமலாக்கினி கடலாக்கினியில் தொண்ணூறு நாழிகை எரிக்க செந்தூரமாம். இப்படி ஒரு சட்டியில் நாலாறு போடலாம்.

திரிலோக செந்தூர மணி ரசம்.

நாபி, கெந்தகம், அரிதாரம், அப்பிரகம், சொர்ண பற்பம், பவள பற்பம், வங்க பற்பம், வெள்ளி பற்பம், தாம்பிர பற்பம், லோக பற்பம், வச்சிர பற்பம், முத்து பற்பம், கற்பூர சிலாசத்து இது வெல்லாம் சரியாய்க் கூட்டி கொடிவேலிக் கஷாயத்தில் ஒரு நாள் அரைத்து நொச்சில் சாத்தில் ஒரு சாமம் நாளரைத்து முருங்கைப் பிஞ்சு சாத்தில் ஒரு சாமம் அரைத்து ஆலம் பாலில் மூன்று நாள் அரைத்து எருக்கம் பாலில் மூன்று நாள் அரைத்து சதுரக் கள்ளிப் பாலில் மூன்று நாளரைச்சு பிறகு காசிக் குப்பியிலிட்டு குப்பி வாய்க்கு வல பக்கவிட்டு அடைத்து ஏழு சீலை மண் புசி வாலுகா எந்திரத்தில் ஒன்பது நாழிகை தீபாக்கினி கமலாக்கினியில் எரிச்சு ஆறின பிறகு எடுத்து முன்பு கூறின ரசத்திலே எட்டிலொரு பங்கு காந்த பற்பம் முருங்கையிலை சாத்தில் ஒரு நாளரைத்து உலர்த்தி கொடிவேலி கஷாயத்தில் இருபது நாழிகை அரைப் போட்டு உலர்த்தி இஞ்சிச் சாத்தில் எட்டு நாழிகை அரைப் போட்டு உலர்த்தி அதின் பிறகு கடுக்காய் கஷாயத்தில் மூன்று நாளரைத்து உலர்த்தி எலுமிச்ச

பழச் சாறும், கொம்மட்டி மாதளம் பழச் சாற்றிலேயும் ஏழு நாளரைத்து உலர்த்தி அதின் பிறகு இந்த மருந்திலே நாலத்தொரு பங்கு வெண்காரம் பொரிச்சு கூட்டி முன்பு கூட்டின ரசத்துக்கு சரியாக் நாபி கூட்டி அந்த நாபிக்குச் சரியாய் சுக்கு, திப்பிலி லவுங்கம், சாதிக்காய், இந வகை ஒவ்வொன்று அந்த நாபிக்குச் சரியாய்க் கூட்டி கொம்மட்டி மாதளம் பழச் சாற்றில் அரைத்து பில்லையாக பண்ணி வைத்துக் கொண்டு திப்பிலியிலாவது தேன் வார்த்து இஞ்சி சாற்றிலாவது சுக்கு கசாயத்திலாவது வெல்லத்திலாவது சர்க்கரையிலாவது திப்பிலி வெள்ளரியிலாவது அநுபானத்தில் கொடுக்க க்ஷயம், சுவாச காசம் தீரும். பாண்டு கிருமி முதலியதும் தீரும்.

ஒரு முறிந்து சிதைந்து இருக்கிறது.

வாதத்துக்கு உடல் இரைப்புக்கு மருந்து.

மிளகு விராகனெடை.க, திப்பிலி விராகனெடை.க, சுக்கு விராகனெடை.க, சீரகம் விராகனெடை.க, கருஞ்சீரகம் விராகனெடை.க, பெருங்காயம் விராகனிடை.க, வாய் விளங்கம் விராகனெடை.க, பெருங்காயம் விராகனிடை.க, ஆக வகை ஏழு பெருங்காயத்தை நெருப்பிலே பொரிச்சுக் கொண்டு மெத்த ஆறு வகையும் வறுத்து உரலில் பெருங்காயத்துடனே இடித்துக் கொண்டு இரண்டு விராகனிடை எடுத்து நெய்யிலே குழப்பி அந்திக்கு காலைக்கும் மூன்று நாள் கொள்ளத் தீரும்.

பிரமேயான ரசம்.

ரசம் பலம்.க, கெந்தகம் பலம்.உ, நாபி பலம்.ங, லிங்குலிகம் பலம்.க, மனோசிலை பலம்.ங, வெண்காரம் பலம்.உ, பால் துத்தம் பலம். லோகம் பலம்.க, தாம்பிர பற்பம் பலம்.உ இவை எல்லாம் கூட்டி நொச்சில் சாற்றில் ஒரு நாளரைத்து எருக்கம் பாலில் இரண்டு நாளரைத்து உலர்த்தி காசி குப்பியிலிட்டு குப்பி வாய்க்கு மண் பக்கலிட்டு அடைத்து ஏழு சீலை மண் பூசி வாலுகா எந்திரத்தில் முப்பது நாழிகை கமலாக்கினியில் எரித்து ஆறின பிறகு எடுத்து அதிலே புள்ளி மான் கொம்பு, சந்தனம் பலம்.ரு, நேர்வாளம் பலம்.க, இவைகள் கூட்டி நொச்சில் சாறு இஞ்சிச் சாறு எலுமிச்சம் பழச் சாறு, கொடிவேலிக் கசாயம், எருக்கம் பால் இவைகளிலே ஒவ்வொரு நாளரைத்து உலர்ந்து பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சிச் சாற்றிலாவது நொச்சிச் சாற்றிலாவது கொடிவேலி கசாயத்திலாவது பின்னேயும் உண்டான அநுபானத்தில் கொடுக்கத் தீரும். தீரும் வியாதி கால், கை குளிர்ந்து, முகம் வெளுத்து உடம்பெல்லாம் காய்ச்சலா இருக்கிய விஷ சுரம், தாப சுரம், கோரசுரம், பழைய சுரம், சீத சுரம், முறைக் காய்ச்சல், தனுர் வாதம், நடுக்கு வாதம், போட்ட தாழும் போட்ட கையுமாய்க் கிடக்கிற தண்ட வாய்வு, சகல வாய்வு இவைகள் தீரும். விஷ கடிகள் தீரும். இதுக்குப் பத்தியம் ஆட்டுப் பால், பசுவின் பால், தயிர் மோர், இளநீர், வாழைக் கிழங்குத் தண்ணீர், தேன் சர்க்கரை, குளிர்ந்த தண்ணீர், சந்தனம், கற்பூரம், பாக்கு வெற்றிலை, காந்த நிலாவிலே இருக்கலாம். இதுவெல்லா ஆகும்.

முத்தாள தேச ரசம்.

ரசம் பலம்.க, கெந்தகம் விராகனெடை.க, அரிதாரம் விராகனெடை. மனோசிலை விராகனெடை.ங, நவசாரம் விராகனெடை ஒன்று சத்திசாரம், விராகனெடை. யவாச்சாரம் விராகனிடை.க, காசு கட்டி விராகனெடை.க, வெளையுப்பு விராகனெடை.க, சவுந்திலவணம் மாடையிடை பொட்டிலுப்பு மாடையிடை, கல்லுப்பு

மாடையிலை இது வெல்லாம் பொடி பஞ்சி காசி ஒப்பியிலிட்டு ஒப்பி வாய்க்கு பல பட் கலிட்டு அடைச்ச ஒரு சீலை மண் பூசி ஒரு ஒன்று சட்டி அடியிலே ஒரு மத்தின அகலம் அவரா மிட்டு படிக்கும் போட்டு வாலுகா எந்திரமாக தொண்ணூ நாழிகை கமலாக்கினியில் எரித்து ஆறின பிறகு எடுத்து இஞ்சிச் சாத்திலரைத்துக் குன்று மணிப் பிரமாணம் குளிகை பஞ்சி திப்பிலி சீரகம் வெந்நீரில் கொடுக்கவும்.

சோபத்துக்கு.

சோபத்துக்கு மாஞ்சிறும் விருகார் உலர்ந்திருக்கிறதுக்கு எதிலுண்டா மென்றால் சிரமாங்கிலு மாயிசக்கிறவர் ஒரு பக்ஷங்களாய் மிளித்திருக்கிறவர்களாய் குழம்புச் சாறுகளாய் பொசித்திருக்கிற படியினாலே மருதிக்க வீக்க முண்டாம். வந்த விதம் வடிவினடைய பெத்தத்திலே ஒன்பது பேதமாயிருக்கும். வாத சோபமென்றும் பித்த சோப மென்றும் சொம சோபமென்றும் வாத பித்த சோபமென்றும் சேர்ம வாத சோபமென்றும் அவித்தியத்திலுண்டான சோப மென்றும் விசத்திலுண்டான சோப மென்றும் இப்படி ஒன்பது வகைப்படும். அந்தவிசம் பவிர சோப மென்றும் அகார்த சோப மிப்படி இரண்டு வகைப்படும். அது வல்லியிலே பாரு மென்று உயர்ச்சி யென்றும் அகலமென்றும் மூன்று வகையான வுருவை யுடைத்திருக்கும். இந்த ஒன்பது வகைப்பட்ட வீக்கமானது சாத்திய மென்றும் அசாத்திய மென்றும் இரண்டு வகைப்பட்ட வீக்கங்களும் சகு உள்ளில் அசாத்தியமே தென்னில் அனத்தி அனத்தி சத்தி வீக்கம் வயிறு பொருமுதல் வயிறு கழியும் இது முதலான அனேகம் வகைப்பட்ட உபத்திரியங்கள் கூடிக் காலிலே வீங்கினால் புருஷனுக்கும் ஸ்திரீக்கு கொல்லும் விரிந்த பன்னீர் பாய்ந்து சத்தி நாரும் அதி சத்தமும் மேல் விரிப்பு கைகளோட்டை கூடி யிருக்க வீக்கமும் வீங்கின பம்புகாலும் திரமும் உண்டாகை அந்த வீக்கமும் நரமும் அதிசத்தமும் மேல் விரிப்பு கைகளோடே கூடியிருக்க வீக்கமும் வீங்கின பம்பு காலும் திரமுண்டாக அந்த வீக்கமும் சுரமும் அதிசாரமும் இவைகள் விட்ட போது உண்டான வீக்கமும் அசாத்தியமாம்.

மாதோருக்கு காலிலே சிரசிலே வீக்கம் அரையிலே வீக்கமும் காலிலே வீக்கமும் அவர்கள் அசாத்திய மென்று சொல்லக் கடவன். இதற்கு மருந்து:-

சாரணை வேர், மூக்கம் வேர், பஞ்ச மூலம் இவையள் உள்ளே அசனத்துடனே கட்ட வாதத்திலுண்டான வீக்கமுந் தீரும்.

சாரணை வேர், தேவதாரம், கடுக்காய், சுக்கு இவைகளிட்ட காசயத்தினால் சோபந் தீரும்.

பேய்ப்புடல் லோத பற்பம் திராய் அதிமதுரம் கடுரோகணி கடுக்காய் தேவதாரம் மஞ்சள் சந்தனம்காட்டா மணக்கு வேர் தம்பிட்ட வேர் திப்பிலி இவைகளிட்ட கசாயத்தில் கொடுக்க பித்த சுரந் தீரும். அதிலுண்டான தண்ணீர் தாகம் சுழன்று வருகிறது அது தீரும்.

கொன்னைப் பட்டையும் கீழாநெல்லியும் பாகம் பஞ்சி கொள்ள சேஷ்ம சோபந் தீரும். வெல்லமும் கடுக்காயும், களிப் பாக்கும் சாரணை வேர் மோர் இவைகளிட்ட கசாயம் கொள்ள வீக்கந் தீரும். இஞ்சி நெருஞ்சி கடுக்காய் தேவதாரம் சாரணை வேர் உமிரி வேர் இவைகளாலிட்ட கசாயமாகுதல் குடிக்கத் தீரும்.

செவ்வியம், சுக்கு, திப்பிலி, நெருஞ்சி வேர், அத்தி திப்பிலி, கொடிவேலி வேர் இவைகளிட்ட கசாயத்திலே கொடிவேலி வேர் விழுதி இலை கடுக்காய் பொடி செவிக்க தீரும். வலி அக்கினி மாந்தம், தீரும். ஆகவே ஊமத்தை நீர் முள்ளியிலை பருத்தியிலை முருங்கை இலை இந்த பிளகள்ளி சுட்ட சாம்பல் (முடிவில் இல)

<u>பிளவைக் குணம்:-</u>

முதுகிடை மைந்தாகை முள்ளந் தண்டில் பறிப்பது மாங்காய் போல பிளவையும் பல கன்றும்
மதிவரு மந்திரமும் மத்தள கருவி யாளும் விதிவிசு படிவி தென்ன வேதமா முனிவர் சொன்னார்
செப்புடன் ஒத்த மூச்சு செவிடாயி உழல் சோபம் தப்பிடா நாவறஉட்சி தணிக்கிடா சலத்தின் வாதை
மூப்புர கண்ணே போன்ற முறைமையில் விராதி தான மிப்படி குணங்களெல்லா
மிருளைகப் பிளவையாமே.

மார்பினில் மிரல் தன்னை மறப்படா தென்று கோல் போல்
நேர் படா செம்மையாக நிற்பதே வாயு நெஞ்சில்
கர் செறி குழலிடுளே கருவியர்க் கீறிக் காரம்
பேர் பட கட்டல் பக்கப் பிளவையும் விட்டுப் போமே.

3. முதுகில் புத்துமறபே போல் முள்ளந் தண்டந் தன்னில்
தப்பி விலவரில் மறலயில் லை வெள்ள வேகங் கடைபடு
மென்மைத்திலே மேனி குளிர சுரமுந் தவள் முழலை களிச்சுடைவது தான்
பக்க பிளவை மை தானிலிக் கறியிடே.

4. கார்ரந் தரிக பாஉடாணம் தமைவில் குறைபா மிச்சோ பொடியாயி வெண்ணெயுடன் திரும்பவரைத்த சீலையுடன்
கறத்தடியன் புண் சீலை யங்கும் தள்ளி புண்ணிடை பாரப் பிளவைகரைந்தருளி
பாதி படவன் பறிந்திடுமேசு பிளவைக்குத் தரிநம் சோயம் பறிந்திடும் புண்ணில் காரம்
பங்கயிலார் பறிந்த எறிய வைத்த அமிக்சி கட்டி அவிழ்ந்தவே பார்த்த பின்னே சிறந் தரும் எண்ணை பண்ண தெளிந்த நம் மருந்து சொல்லே.

5. செப்பியே எண்ணெ வைக்கிக சிறந்த துயிரை வேர் நாளி
ஒப்புடன் சடரி புலாமோ சொன்ன அதில் பாதி
எப்பெருஞ் சரக்கு கட்டி யிடை ரெண்டு மிருபதாக
கைப்பு வேம் பாடல் கட்டி கக்குமா எண்ணை வைய்யே.

6. எண்ணையும் சீலை தானும் மிடை விடா பகலை காக்கும்
நன்றுமா விலைதைத் தான் நயக்கவே புரட்டிக் கொண்டு
புண்ணில் மேல் வைத்துக் கட்ட பொருந்தமாம் பிளவை பண்ணென்
உண்மையாய் உரைக்க மன்னேர் உதிமாய்க் கண்டு சொல்வார்.

7. பத்தியம் கண்ட தோர் கறிகாய் பால் நெய் கருத்திலே
உத்த தெல்லாம் கொள்ளிலா குத்த மொன்ற அறிஞர் முனிகள்
முன்னோர் விட்டவர் ஈ தலங்காய் விரும்பிய முருங்கைப் பிஞ்சு
பண்டு மும் பழமோடு பத்தியத் தயிருமாமே.

8. உழலை தலைம் பரிதாப முறை முச்சுரங்கள் நாவறஉட்சி
குழறி வெருவல் குறை கண்டிப் கொள்ள நகைத்தலாய் மிகைத்தல்
அழகு செறியும் கொடியிடையாள் அமரர் வாதை மிக கண்டால்
அளவில்லாத வாதை வென்ற அத தான் மீர்வதறிபோமே.

9. புச்சு மருந்து நெல்லிபுட நிலப்பனந் கிழங்கு தாரம்
நெய் பொரியுமா விரையின் நீண்ட வேரும் சொல்லரிய

வாருவின சொத்திரமாக வீக்கத்தில் மேலே பூச சொல்லி வட்டதோர் பிளவை தனில் காச்சல் குளிர்

ஞ்நந் தெளிந்து வழுக்கஸ்ஸுய் வரு நீர்ப்பாச்சல் மெல்லிய தோர் முலைப் பாலும் கூட்டி வீக்கம் விதனமுடன் வலிதானும் விண்ணும் போமே.

10. பிறகு பூச ஆவிரை அல்லி தெல்லி அதிடன் புலா வேரும்
கோவிலை வெண்ணை தன்னில் குழைத்து வீக்கத்தில் பூச
யாமிருந்தனலே போல் வீக்கம் வேறினை கண்டித்தாலும்
தாவி குழைத்து பூசி வெந்தயிருங் கொள்ளுளார்மே.

11. வஞ்சிக் கொடியாய் முலைப் பாலில் வார இளங் கோடா வெண்ணை
செஞ்சொற்படியே அரைத்தொன்றில் திரும்ப வழித்து அதில் வைத்து
வஞ்சப் பிளவை முகந் தன்னில் மானே விழித்து வழி தப்ப
கெஞ்சி சுரமோடமுல் வீக்கம் கெட்டு பட்டு போயிருமே.

12. பிட்டும் வகை வெண்பால் சுமந்த மென் கொடியும்
வன் குசவை நெல்லுமா சிவந்த அவ்விரையிந் தாது
துலையின் நீரே பெருத்து வால நில்லென்னும்
பிட்டதனபுரே என் கொரும் போது.

<u>பிளவை மேல் தூவ சூரணம்</u>.

சேஉஷ்ரையளப் தொபதி பாக வேவத்து ஈளாய் செயிதா விரைவேர் தன்னியி லரைத்து மேல் பொடிய தாக்சி எவு நீர பிளவை புண்ணில் யின்னமு நெய்யே பூசி தூள் தனை தூவ வத்தி சுசுதியாய் புலரும் புண்ணே.

<u>வெட்டுப் பட்ட புண்ணுக்கு கரப்பானுக்கு மருந்து</u>.

1. வெட்டு பட்ட புண் தனக்கு விரித்து முனரேர் உரைத்தபடி
வட்டப் படவே நின் பழத்தை வரைந்து பாதி ரெண்டாக்கி
சட்டி தனிலே என்ணை விட்டு தழலிறவே மிகக் காச்சி
யட்ட மருகும் மொத்திட்டு வதக்குப் பின்னே என்ணையிடே.

2. யிடவே என்ணையது தனக்கு யிலந்தை தழக்காய் துடரி முட்புல்
படரு நிலத்துக்குமிழ் உட்டு பசித் தயாவாரை வசு வேருங்
கடவா தொருக்க சிறக் கடுக்காய் சரம்பை குரிய நாயுருவி
யடைவேய்வை யின வேர் கொண்டே யிதின் மேல் வை சேர் கடைச் சரக்கே.

3. கோஷ்டம் மதுரம் வெம்பாடியில கொடியின் சிவந்த செவ்வள்ளி
யீட்டுங் கரிய ஒந்திருக்க மியல் சேர் கைப்பு சதகுப்பை
மேட்டில் வளரு மேல் முள்ளி மிகா மருந்த வில்வங்
கூட்டி தூனியடன் செய்து கொள்ளீரென்ணை புண்ணுக்கே.

4. <u>குத்துப் பட்ட புண்ணுக்கு என்ணை</u>. –

குத்துடனே யுடல் உடந்தே யிரத்த கள்ளிதனை
முத்தப் போலே விழு நீரே முறித்து சும்மா வகையது
சுத்துப் படவேஒத்தளவாய் துடைத்து அவர்ந்த சதை தள்ளி
சித்தத் துளங்காய் தேசிக்காய் சிறந்தே என்ணை சுட வொத்தே.

5. ஒத்தே யிட்ட முறைகள் ஒரு பறசலம் உள்ளடியும்
மற்றோர் சிறியோர் தம்பல வேர் மணக்கு முத்தி நல்லரி
சித்த வல மிலவுங்கம் திப்பி கைப்பு வேம்படலும்
மத்தோர் மதுரந் தான் கொன்டு வுடசிலென் றையுடன் தள்ளே.

6. நின் பதிலத்தைச் சொல்லுவது நிலத்தக்கு மிருத்தா ரோடு
வின் பங்கர சன தமிழ்த் தொழு மிக்க தேவிதம் பலேயுங்
கம்பி பிசினி லசைத்தே கொள்கைப்பு மதுரம் வெம்படலம் பூ
முதலாய் வெடியுண்டே யாறு மிவை யோரெண்ணே செய்யே.

7. ஆயுதத்தால் பட்ட வாதக் கரப்பானுக்கு:-

வல்லாயுதங்கள் பட்டவரை மலங்கா யிந்த முடம்புலந்தால்
சொல்லு நிம்ப மதித்தோலே டவே தண்ணீரதிலா றி
மெள்ள விடித்தி வேகென்ன விடவே யிடித்த சிறிபட்ட
நல்லாகு மென்று முன்னோர் நய்ந்தே யுரைத்தபடியாமே.

8. புண்ணும் வெடித்து நீர் விழுந்து போத குத்தி வலி மிகுந்தால்
நன்மை படவே யோடு கொள்ளுங் கொள்ளாதிருக்கிறா ரஞ் செய்யும்
தின்மை படவே யோகை கொள்ளுங் கொள்ளாதிருக்கிறா ரஞ் செய்யுந்
திண்டை படவே செல்வங் கலங்கி யிரத்த மாகில் தீராது
நன்னி கஉ ராயசச்சிய விழுந்து பின்னே நனைத்துச் செம்புண்ணும்.

9. வீங்கி வடித்து உழையும் விடாமல் திமிர்த்து வீங்கி நிற்கும்
மாங்க புண்ணிற் சலம் விழுந்தால் வுந்தி நநடுவுஞ் சோறி செயில்
தீங்கி செல்வந் திருது கெடுகள் படவே பிச்சி நிக்கும்
தேங்காய் புரைத்திட தீரும் வத கரைப்பானிதே.

10. நொந்துதான் கன்னி மிக்கவேவுடன் புண்கள் தன்னில்
வந்து வல்லாயுதங்கள் வடுவுறதை தக்கிடத்தில்
சந்து தான் மொழி பொருத்து தசை வுதானங்களாகில்
வந்து தான் தொடுக்குஞ் சேதி வாதமாங் கரைப்பான் தானே.

11. கொன்றை ஞாத நிலவேம்பு சிமிழ வேர் கடுக்காய் விரை
சென்ற யெண்காய் சூரியனுஞ் சிவனார் வேம்புங் கல்பிரிசு
மொன்று முத்த மாகாளிறு வெட்டு வயுருவி
நன்னே கொள்ள முளகுரை நன்கு பந்துட கூட்டே.

12. கூட்டே யுள்ளி மிளகு மஞ்சள் குலவு மதுரம் வெம்பாடல்
நாட்டி பயிலும் வெள் கொட்டி நலங்கும் சென்ன காம்பழமும்
மாட்டங் காலும் சாதிக்காய் யது கொள் கடுக்காய் தன்னி நெல்லி
கூட்டி ஞாள் செவியை யிட்டு கொண்டே என்னை கொதித்திடுமே.

13. குறிஞ்சா விலேயும் புங்கிலேயாம் கொடி சேர் கழற்ச்சியிலே தாலும்
மறிஞ்சு வராலி கடலாஞ்சி அதுவும் புளிய தேக்கிலேயும்
செறிந்த தறளி வாபட்டை சேரும் பெரிய பூளியிலே
பறந்த பருத்தியிலே தாலும் பாங்காம் வாதக் கரப்பானுக்கே.

14. உள்ளி மிளகு சீரகமுத் உத்த கடுக்காய் திப்பிலியும்
தள்ளுஞ் சுக்கு மோதகமும் சீலேயிலையும் வெங்காரம் பவுங்
கொள்ளுங் கடுகுரோகணியும் கூட்டுதா தின்னி நாழி
கள்ளுஞ் செய்யும் கருஞ்சீரகம் கழஞ்சோ றொன்று தாள்ளியதே.

--

<u>மேக நாத ரசம்: பேதி மாத்திரை:</u>

இங்கிலிகம், நாபி, கெந்தகம், திரிகடுகு, குரோசாணி, ஓமம், வெங்காரம், பெருங்காயம், வாய் விளங்கம், தெகடேந்தி வேர், மஞ்சள், சயிந்திலவணம், இது வெல்லாம் சமபாகம் இதுக் கெல்லாம் சமம் சுத்தி வாளம் கூட்டி கல்வத்தில் போட்டு எதினம் பழச் சாத்தில் நாலு சாமம் மத்திச்சு குன்டு மணி பிரமாணம் குளிகை பண்ணி ஒரு குளிகை அநுபான விசேஷத்தில் வென்னீரிலிடவும்.

<u>ஆனந்த வயிரவம்,</u>

நாபி, இங்கிலிகம், கெந்தகம், வெங்காரம், திரிகடுகு இது சம பாகமாக கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டு நாலு சாமம் மந்த்திச்சு உளுந்துப் பிரமாணம் குளிகை பண்ணி ஒரு குளிகை இஞ்சிச் சாற்றிலிட பின்னையும் அநுபான விசேஷத்திட சகல சுரமும் தீரும்.

<u>கெண்ட பேரண்ட ரசம்.</u>

சாதிலிங்கம் விராகன் ஒன்று, நாபி விராகன் அரை, கடுகுரோகணி விராகன் ஒன்று, இது குளிர்ந்த தண்ணீரிலே சாமம் அரைச்சு பயறு போலே குளிகை பண்ணி இஞ்சி ரசத்திலே ஒரு குளிகை கொடுக்க தனுர் சுரம் தீரும்.

<u>பிரளய சரம்.</u>

ரசம் விராகனெடை.௧, கெந்தகம் விராகனெடை.௧, சுக்கு விராகன்.௨, இங்கிலிகம் விராகன்.௧, வெங்காரம் விராகனெடை.௧, தப்பி விராகனெடை.௧ மிளகு விராகனெடை.௨, வாளம் விராகனெட்ட.௧௰, இது சமஸ்த கூட்டி கரிசலை கன்னி விட்டு மூன்று நாளரைச்சு பயறு போலே மாத்திரை பண்ணி ஒரு மாத்திரை அநு விசேஷத்தில் கொடுக்க தனுர் சுரம், பொட்டென்று நிற்கும். பின்னையுங் குழந்தை களுக்கு பெரியோர்களுக்கு மாந்தை சுரங்கள் அசீரண சுரமானது இதுகள் தீரும்.

சீரகம் பலம்.௧, தாளிச பத்திரி பலம்.௧, சுக்கு பலம்.௧௰, கடுக்காய் பலம். தானிக்காய் பலம்.௨, நெல்லிப் பருப்ப பலம்.௨, கடுகுரோகணி பலம்.௧ சீயக்காய்க் கொழுந்து பலம்.௨, எண்ணை சேர்.௨, பசுவின் பால் சேர்.௧, எலுமிச்சம் பழம் சதுரக் கள்ளிப் பால் பலம்.௫ (செய்முறை மூலில் இலை)

<u>சுரத்தின் பேரில் பகிநேத்திர சன்னி பிறந்தால் செய்யுங் குணம்.</u>

சுரத்தின் பேரில் கண் அதைக்கும். உடம்பு வீங்கும், காது செவிடுபடும். பசி எடாது. தாகம் அதிகமாயிருக்கும். இதுக்கு மருந்து:

தேனிலே கொண்டா அவுஷதம் பண்ணிக்கிலே தேய்க்கவும். தோஷம் வாங்கும். இதுக்கு கசாயம்:- விசிறியிலை, நீர் மொருங் யிலை, முருவி யிலை, சிறு நெருஞ்ச நீர் முள்ளியிலை இது கசாயமிட்டு கொடுக்க தீரும்.

<u>சுரத்தின் பேரில் கண்டங் குப்பி சன்னி பிறந்தால் செய்யுங் குணம்.</u>

சுரத்தின் பேரில் உடம்பு வீங்கும். மேல் தோல் உரியும். கண்டதது மேலே

சலந்தி போலே வீங்கும். நெஞ்சு புண்ணாயிருக்கும். காலுங் கையும் குளிர்ந்து இருக்கும். மார்பு, முதகு எல்லாம் உளைக்கும். மூலா மாலை கொள்ளும். இதுக்கு கசாயம்:

நெய் முன்னை வேர் நல்ல தும்பை வேர், நாய்த் துளசி வேர், சிலந்தி நாயகம் வேர், கொத்தமல்லி விரை, கண்டு பறங்கி கசாய மிட்டு, சுக்கு, திப்பிலி மிளகு கூட்டி கொடுக்கவும். சுரம் விடாமல் காயும். நல்ல சுரம் போன பிறகு உடம்பு, கால் கை எல்லாம் கடுக்கும். உடம்பு வீங்கும். மூலா மாலை கொள்ளும். கண் வளைய மிட்டு இருக்கும். முகம் பள பளத்திருக்கும்.

இதுக்கு மருந்து:-

முருங்கை பட்டை , இஞ்சி முருவிலை இந்த மூன்று சாறுங் கூட்டி சுக்கு, மிளகு, திப்பிலி கூட்டி மூன்று நாள் குடிக்க தீரும்.

சுரத்தின் பேரில் சுறண மூலிகை சன்னி பிறந்தால் செய்யுங் குணம்:-

குரதின் கீழே இரண்டு புறமும் வீங்கும். உடம்பு களை வரும். இதக்கு மருந்து நெய், முன்னை பட்டையும், அயி வகைக் கொடியும் உள்ளி வசம்பு விளக்கெண்ணெயில் ஆக்கி ஒரு காசிடை என்னை எட்டு நாள் உள்ளுக்கு கொடுக்கத் தீரும்.

பைத்தியச் சுரத்துக்குச் செய்யுங் குணம்:-

உடம்பு காயச்சே கால் கை உடம்பெல்லாம் கடுக்கும். வேர்பை காணும். வேர்க்கச்சே உடம்பு அனலாக சுரம் எழும்பும். தாகம் எடுக்கும். அடிக்கடி எழுந்திருப் பான். சுரத்தும் பார்வை பார்ப்பான. வாய் கசக்கும். பிச்சு எடுக்கும். அரோசிகம் பிறக்கும். இதுக்குக் கசாயம்:-

சுக்கு, திப்பிலி, நாகேசரம், சீரகம், பற்படாகம், சிறவழுதலை வேர், நொச்சிலிலை, முசுமுசுக்கை, விஷ்ணு கிரந்தி, சிறு குறிஞ்சான் இது வெல்லாம் கசாய மிட்டு கொடுக்கத் தீரும்.

கெற்ப சுரங்குணம்.

மாரிலே பாரமாயிருக்கும். பிடரி நரம்பை இழுக்கும். இதுக்குக் கசாயம் ஆத்து முள்ளி வேர், தூதுவேளை வேர், சிறுகாஞ்சொறி வேர், துளசி இலை, கஞ்சாங் கோரை, முக்கா வேளை யிது கசாயமிட்டு சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டிக் கொடுக்கவும்.

சன்னி பாத குணம்:

எழுந்திருப்பான். படுத்துக் கொள்ளுவான். தலையைப் பிரட்டுவான். தாகம் அதிக மாயிருக்கும். பிடவையாலே உடம்பைப் போர்த்துக் கொள்ளுவான். பேசான் வாயிலே. இதக்கு எழுலங்கணம் பண்ணின பிறகு முக்கா வேளை செவ்வியம் கொடி வேலி எருக்கம் பட்டை முருங்கைப் பட்டை மாவிலிங்கப் பட்டை நொச்சில் பட்டை வேப்பம் பட்டை விளாம் பட்டை, கஞ்சாங் கோரை, துளசி வேர் கசாய மிட்டு கொடுக்கவும். இதக்கு தினை யரிசி கஞ்சி வார்க்கவும்.

அது சன்னி குணம்.

அது சன்னிக்குக் கண் வளைய மிட்டு இருக்கும். மூலாமாலை கொள்ளும். காலுங் கையும் கடுக்கும். குடச்சல் எடுக்கும். சுவாசம் அதிகமாயிருக்கும். இதக்கு காவட்டம் பு, வசம்பு, விசிறியிலை, நிலையாவரை இவை கசாயமிட்டு ஐந்து திப்பிலி வைத்து அரைத்துக் கொடுக்கவும். கலிக்கம் இடவும்.

புதிகாத் தயிலம்.

அயில்பட்டை பலம் ; முக்கதாரி பலம்.ரு, மிளகரணை பலம்.ரு, சங்கம் வேர் பலம்.ய, ஆதன்டை வேர் பலம்.ரு, நாயுருவி பலம்.ரு, சிறகு முள் பலம்.ரு, வற புலாந்தி பலம்.ரு, கோரைக் கிழங்கு பலம்.ரு, சித்தாமுட்டி பலம்.ரு, பேருமுட்டி பலம்.ரு, சொத்த கிளா பலம்.ரு, தன்னி முட்டான் பலம்.ரு, நன்னரி பலம்.ரு, சிறுவழுதலை பலம்.ரு, கண்டங் கத்திரி பலம்.ரு, உத்தாமணி பலம்.ரு, காட்டு மல்லிகை பலம்.ரு, கீழா நெல்லி பலம்.ரு, வேப்பம் பட்டை பலம்.ரு, கல்லல் முருங்கைப் பட்டை பலம்.ரு, யிசுவா வேர் பலம்.ரு இதக்கு சரி தண்ணீர் வார்த்து ஐந்து நாள் காய்ச்சி வடித்து ஒன்னியாலல் கச்சா ஒன்பது சேர் என்ணை சிறுக சிறுக விட்டு கருகு கானி பத மாஜல் கடை மருந்து சுக்கு பலம். , மிளகு பலம்.க, திப்பிலி பலம்.க, ஓமம் பலம் சதைகுப்பி பலம். , கொத்தமல்லி பலம். , லவுங்கப் பட்டை பலம். , பத்திரி பலம்.வ, சித்திர மூலம் பலம்.க, தம்பருஷ்கம் பலம்.க, செவியம் பலம்.க, கண்டு பறங்கி பலம். , மஞ்சள் பலம். , கஸ்தூரி மஞ்சள் பலம்.வ, வெட்டி வேர் பலம் விலாமிச்சி பலம். , இலைச்ச சந்தனம் பலம்.உ, இதுகள் இடித்து முறத்தில் தெள்ளி சூரணம் பசுவின் பாலில் பிசைந்து சிறுக சிறுக ஆவி மெழுகு பதமாகல் இறக்கி வடிச்சு குடத்தில் ஊத்தி அதில் லவுங்கம் பலம்.வ, கிச்சிலிக் கிழங்கு பலம். , பச்சைப் புனுகு விராகனெடை. , பச்செலை பலம்.ரு, அபினி விராகனெடை. கற்பூரம் பணவிடை.உ, பொடி பண்ணி விடவும். இதக்கு தீரும் வியாதி பீனிசு, தலை நோவு, இரும்பல் கண் பிரிசல், மூக்கு நீர் பாச்சல்; உன்ருக்கு இவை தீரும்.

இலைக் கள்ளி கற்பம்.

இலைக் கள்ளி வேர் உலத்திப் பொடி செய்து இந்தப் பொடியும் கொழு விந்தம் மஞ்சரும் வெள்ளாட்டு நெய்யில் குழைத்து தின்ன யீளை யிருமல் இவை தீரும். இந்தப் பொடி முலைப் பாலில் குடிக்க காமாலை மாறும்.

வேறு

இந்தப் பொடி நெத்தியிலிட்டுச் செல்ல நினைத்த தெல்லா முடியும்.

வேறு

சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.க, தேசாவரம் பலம்.க, சிறு தேக்கு பலம்.க, நாகேசரம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, லவுங்கப் பட்டை பலம்.க, லவுங்கப் பத்திரி பலம்.க, தெத்தாங் கொட்டை பலம்.க, நெல் முள்ளி பலம்.க, இந்துப்பு பலம்.வ, கடுக்காய்.யு தானிக்காய்.ய, சித்திர மூலம் பலம்.க, ஏலம் பலம்.வ, லவுங்கம் பலம்.ல, சாதிக்காய் பலம்.வ, இஞ்சி பலம்.அ சர்க்கரை சேர்.உ, தேன் சேர்.க, குகை நீர் பலம்.க, கெந்தகம் பலம்.உ, பறங்கிப் பட்டை பலம்.உ, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.க, சீரகம் பலம். , கண் டு பறங்கி பலம். பலம். , ரச செந்தூரம், மாடையிடை படிக்காரம் பலம்.க, வெங்காவளி பலம்.க நீரடிமுத்து பலம். (செய்முறை முற் ப் பெறவில்லை)

சித்திரயாதி லேகயம்.

புளியிலை, புளியறல் பிலை பலம்.உயரு, குருப்பிடிச்ச யிரும்பு பலம்.யஉ, வட்டத் திருப்பி பலம் , சித்திர மூலம் பலம்.யஉ, தேவதாரி பலம்.யஉ, சாறட்டை பலம். யஉ, நீர்முள்ளி பலம்.யஉ, முக்காவேளை பலம்.யஉ, எசங்கும் வேர் பலம்.யஉ, செ

கொத்தமல்லி பலம். , கொடிபாலை பலம். கூடப் பழம் பலம். , செவியம் பலம். கொடி திப்பிலி மூலம் பலம். பலம். வில்வ வேர் பலம்.ரு, குமிழம் வேர் பலம்.ரு, தழுதாழை வேர் பலம்.ரு, பாதரி வேர் பலம்.ரு, வாகை வேர் பலம்.ரு, சித்தா முட்டி பலம்.ரு, பெருமுட்டி பலம்.ரு, சிறுவழுதலை பலம்.ரு, கண்டங் கத்திரி வேர் பலம்.ரு, நெருஞ்சி வேர் பலம்.ரு, மாதளம் பழச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு கடை மருந்து வாய் விளங்கம் பலம்.உ, லவுங்கப் பட்டை பலம்.உ, மிளகு பலம்.உ, ஓமம் பலம்.ங, சீரகம் பலம்.உ, ஏலம் பலம்.உ, லவுங்கம் பலம்.க, வெல்லம்
(செய்முறை முடிவு இல்லை)

சுக்கு பலம்.உய, அரத்தை பலம்.அ, திப்பிலி பலம்.ச, ஆனை திப்பிலி பலம்.ச, சீரகம்.உ, ஓமம் பலம்.உ, தாளிச பத்திரி பலம்.க, தெசாவரம் பலம்.உ, அக்கார காரம் பலம்.க, அதிமதுரம் பலம்.க, கோஷ்டம் பலம்.க, செடாமாஞ்சி பலம்.க, சாதிக்காய் பலம்.க, சாதிபத்திரி பலம்.க, லவுங்கம் பலம் .க, லவுங்கப் பட்டை பலம்.க, லவுங்கப் பத்திரி பலம்.க, சிறுதேக்கு பலம்.உ, சிறுநாவல்ப் பூ பலம்.க, பஞ்சலவணம் பலம்.கவ, கடுகுரோகணி பலம்.கரு, கடுக்காய் பலம். தானிக்காய் பலம். , சர்க்கரை பலம்.உய, (செய்முறை முடிவு இல்லை)

கண் பூப்பட்டத்துக்கு மாதளம் பூ கொண்டு வந்து அதுக்கு அரிசியை வாங்கி கலத்திலிட்டு முலைப் பாலில் இழைத்து கண்ணிலிட மாறும்.

வெள்ளெழுத்துக்கு.

புளியம் பூ.ஊஉய, மிளகு வெள்ளாட்டு பாலில் வேக வைத்து எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி எலுமிச்சம் பழச் சாற்றிலிட வெள்ளெழுத்து தீரும். நண்டு தாக்காய் கொடுக்கில் எருமைப் பால் புரிய கயில் பால் தடவி பிடிக்க கொட்டாது.

ஆகாச கெருடன் கிழங்கு கிரணம் விடும் போது பிறந்த வண்ணமாய் பிடுங்கி கொண்டு வந்து நசுக்கி உலர்த்தி இடித்து சூரணம் பண்ணி தட்டத்தினி நல்லெண்ணெயில் கொடுக்க எந்த விஷமு மிள்ளும். சீந்தில் வேர் கிரணம் தீண்டும் போது பிடுங்கி குளிச மாடி யிருக்க வாயெடாது. மதுஊருக்கு இந்த வேர் பாக்குடன் கொடுக்கத் தீரும். கிரிநாகம் குளிசம் வாயெடாது.

கழல் வேர், சீவி நல்லெண்ணெயில் கொடுக்க விஷ மெல்லாம் தீரும். வட்டத் திருப்பி வேர் குளிசம் வாயெடாது. அந்தி மல்லிகை வேர் குளிசம் கையிலிருக்க பாம்பு வாயெடாது. ௭

கெற்பந் தரிக்க.

அரசின் மேல் புல்லுருவி விழுதி வெலை நாயிறு வணங்கி கூட அரைச்சு எழு நாள் முழுங்கத் தரிக்கும். விரை வாதத்துக்கு நிலக் கும்பு வேர் பலம்.வ, வெள்ளைப் பூண்டு திரி ஐந்து முனை வாங்கிப் போட்டு மிளகு ஐந்து அரைச்சு இந்தப் படி ஆறு நாள் கொடுக் கவும். ௨

ஊமை வராத பேருக்கு மருந்து.

கொடுவேலி வேர், புறசி சீவிப் போட்டு பட்டையை இடித்துக் கொண்டு நாழி மோர் தெளிவிலிட்டுக் கொண்டு இந்தத் தெளிவிலே இந்த வேரை ஒரு களிப் பாக்களவு அரைத்துக் கரைத்துச் சர்க்கரையுங் கூடக் கரைத்து குடிக்கவும். இரண்டு நாழிகை மேல்

இரண்டு கொள்ளத் தனே வெண்காரம் பொரிச்சு இளநீரில் கரைத்துக் குளிக்கு வாழை கொடுக்கவும். இப்படி மூன்று நாள் குடிக்கவும்.

வலம் சலம் அடைத்த பேருக்கு.

இரண்டு செவ்விளநீர் முகஉலை திறந்து புதுக் கலசத்திலா த்தி பெருவாயன் லத்தியை கரைத்து வடியிட்டு சக்கரை போட்டு குடிக்க சலம் மலம் விடும்.

கிராணி கழிச்சலுக்கு மருந்து.

நாயுருவி சமூலமும் கரிசலாங் கண்ணி சமூலமும் பொடி பண்ணி வஸ்திர காயம் பண்ணி நாழி பொடிக்கு ஆழாக்கு மொளகு வறுத்தப் பொடி பண்ணி கூடக் கலந்து உண்ட போதெல்லாம் மூன்று விரலாலே யள்ளி தின்னவும். கிராணி கழிச்சல் போம். வெண் காரம் பொரிச்சு தேனில் குழைத்து கொள்ள நீர்க் கடுப்பு நிற்கும்.

உள்மூலம், பிறமூலம் விக்கலுக்கு வெள்ளோக்காளத்துக்கு.

பேய்ப் பீர்க்கங் கூண்டு பொடியாக்கி ஒரு பணவிடை பிரமாணம் தேனில் குழைத்து ஒரு மண்டலங் கொள்ள மூலங் கூண்டோடே விழும்.

விக்கலுக்கு:- மிளகரணை வேர், நெல்லிக்காய் மாத்திரம் பசுவின் பாலில் குடிக்க நிற்கும். சிறு குறிஞ்சா ஒரு பிடி சாறு பசுவின் பாலில் குடிக்க நிற்கும். வில்வப் பழத்து சோறும் சித்தாமணக்கெண்ணெயும் குழைத்து நக்க விக்கல் தீரும். திப்பிலி, மிளகு, நொச்சியிலை இதுகள் பொடி பண்ணி பழம் புளியில் பிசைந்து வாயிலடக்க விக்கல் ஒக்காளம் தீரும். மருளூசிலை திப்பிலி மிளகு மூன்றுங் கூட்டி புளியிலைச் சாத்தில் நசியம் பண்ணவு

ஆலமுசிம் வடசாரம் இரண்டுங் கூட்டி வாயிலிடக்க வாய் தீரும். ஒக்காளமுந் தீரு

அதிமதுரம் திப்பிலி அஞ்சனம்.

நெல்பொரி, கருப்புட்டி பொடி செய்து நெய்யில் குழைத்து முழுங்கிட ஒக்காளம் தீரும்.

ஈரை தலைக்கு தலைப் புண்ணுக்கு:-

புளியம் வேர், பட்டையை அரிசியுடன் இடித்து மாவாகப் புட்டு சுட்டு தின்னவும். நரி விட்டையை அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும். ஈரை போம். கடப்பம் விரையும், பொரிசிலையும் உள்ளி வசம்பு மீதன்டு வார்த்தரைத்து மூக்கிலும் செவியிலும் பிழியவும். தலை வியாதி பொறக்கும். புழு விழும். வேப்பம் பிசின் குங்கிலியம், மஞ்சள் பொடி செய்து சீலையில் திரிச்சு எண்ணெயில் தோய்த்து விளக்கேத்தி அவித்துப் போட்டு அந்தப் புகையை உன்னவும். முகத்தில் காட்டி நாசியில் பிடிக்கவும். தலை வலி நிற்கும்.

சன்னிக்கு:-

முருங்கை வேர் பட்டை, உள்ளி வசம்பு, நருக்கி உச்சந் தலையிலும் புழிந்து நவதுவாரங் களிலும் இடவும். ஈர வெங்காய சாத்திலே மிளகை அரைத்து கண்ணிலிட சன்னி போம். பசு மஞ்சள் சாறு நசியம் பண்ண சன்னி தீரும்.

முருங்கை வேரும், சுக்கும், நருக்கி யிரு நாழி தண்ணீர் வார்த்து உழக்காக காய்ச்சிக் கொடுக்கச் சன்னி போம்.

முக சன்னிக்கு:-

மரிச்சில் காளான் வெங்காரம் துத்தம் வசம்பு உள்ளி குங்கிலியம், கம்பி பிசின்

இதுகள் என்னை பண்ணி யிடவும் முக சன்னி தீரும்.

பல்லுங் கிட்டி கண்ணும் மூடி வில் வலியாக நிமிர்ந்து வலித்தால்:-

குதிரை யிலே, சிறு புள்ளடி இந்த மருந்தில் ஒவ்வொரு வேரில் இரண்டு குளிசமாடி உரி எண்ணெயிலிட்டு குங்கிலியம் பொடி உள்ளி, வசம்பு இட்டுக் கொதிப்பித்து உள்ளுக்கு நக்க ரசியிக்கும் வும் உச்சந் தலையிலு மிடவும். கோழி யிறகை வாயிலே யிட்டு படத்திலும் சேர்த்து வாங்கிப் போடவும்.

காவேளை வேர், கையாந்த கரை வேர், கழல் சத்தை தன்னில் ஒக்க கொண்டு பொன்னரி நாரமுங் கூட்டி அரைத்து காசு போலே உருண்டை பண்ணி புகை உண்ணவும். சிறியாணங் கை சிலப்பு புப் பூக்கிறது அதை சமூலத்தூடனே நாயித்துக் கிழமை நாளில் கொண்டு வந்து குசவன் குளையில் கவுந்து கிடக்கிற புத்தோடு ஞாயிற்றுக் கிழமை நாள் கொண்டு உரைத்து சிறு நீர் குத்தி சாத்துடன் சரித்து சிமிளிலடைத்து வேண்டும் போது பாக்குடன் பாலுடனே யாளும் இரண்டு முறை யிடவும்.

வாத முன்மத்துக்கு.

வேப்பிலைக் கொழுந்து ஒரு கொத்து கொண்டு வந்து உமிக்கரிசி கொண்டு வந்து இது இரண்டுங் கூட கோணியிலே போட்டு தேய்க்க அரிசி வெளுக்கும். அதை இடிச்சு கஞ்சி காய்ச்சிக் குடிக்கத் தீரும். கை கண்டது.

புண் செவ்வுடைக்கு மருந்து.

கெந்தகம் பலம்., நூற்கப் பொடி பண்ணி சாண் சீலையிலே அப்பி இரு பக்கமந்த மருந்துக்குளே வத்தியாக திரட்டி யிலுப்பை வேப்பெண்ணெயிலே அந்தவத்தியைக் நனைத்து கொத்தி சட்டி கீழாக வைத்து அந்த எண்ணெயை வத்தியின் மேலே விட்டு வத்தியிலே யிழிஞ்ச சுடலெண்ணெயை ஒரு குடுவையிலே வைத்துக் கொண்டு உதட்டில் எண்ணை ஒரு கொத்துக்கு அந்திக்கும் வெடி மாறுக்கும் புண்ணுக்கு அலரிப் பால் மெல்லிசு துணியிலே யூட்டிப் போடவும் குணமாம்.

கிரணிக் கழிச்சலுக்கு.

மாம்பட்டை முத்தின மரத்துப் பட்டை பத்து பலம் கொண்டு வந்து மேல் புறணியை சீவிப் போட்டு உரலிலே போட்டு பஞ்சாக யிடித்து அந்த சாத்தை உழக்குச் சாறு பிழிஞ்சு கொண்டு எருமைத் தயிர் உரி, தயிரிலே குழப்பு மூன்று பொழுது ஒரு நேரம் உள்ளுக்கு கொள்ளவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். சோத்திலே எருமைத் தயிர் கூட்டிக் கொண்டு சாப்பிடவும். நொச்சில் கொழுந்து

நொச்சில் கொழுந்து பலம்.க, செருங்கொட்டை மூன்று மேல் புறணியைத் தள்ளிப் போட்டுக் கீழா நெல்லி சனிக் கொழுந்து பலம்.க, மூன்றும் ஒன்று தண்ணீர் படாமல் அரைத்து சர்க்கரை பொடிதைக்கு ஒரு பலம் அந்த மருந்துடனே கூட்டிக் கொண்டு இந்தப் படிக்கு தினம் ஒரு பொழுது எழு நாள் சாப்பிடவும். உப்பு கூட்டலாம். கசப்பு புளிப்பு தவிர்க்கவும். பசுவின் பாலிலேயாவது வென்னீரிலாவது சாப்பிடவும்.

ஒருத் தலை வலிக்கு மருந்து.

பாக விரையை பொடி பண்ணி முலைப் பால் வார்த்தரைத்து காதில் நசியம் பிழியவும்.

புண்ணுக்கு மருந்து:- மஞ்சள் சுண்ணும்பு, துரிசு, ரசம் விளக்கெண்ணெயில் குழைத்து அரைத்து போடவும்.

தேளுக்கு மருந்து:- மனிதன் தலையோடும் கால் எலும்பும் எருக்கம் பாலில் ஊற வைத்து உலர்த்தி கொட்டின வாயில் தடவ நிற்கும்.

கன்னேவுக்கு நுங்கு எருக்கம் பாலில் ஊற வைத்து கொட்டின வாயில் தடவ தீர்ந்து போம்.

<u>விரை வாதத்துக்கு மருந்தீட்டுக்கு.</u>

கழாக்காய்ப் பருப்பு பலம். , திப்பிலி பலம். உள்ளி பலம்.உ, சிறுகீரை வேர் பலம். , கரசலுங் கன்னி கொட்டைப் பாக்களவு நல்லெண்ணெயிலரைத்து அந்திக்கும் வெடிச்சிக்கும் மூன்று உருண்டை கொடுக்கவும். கவுளிக்காயிலையை வதக்கிப் பொத்தியில் கட்டவும். பேயத்திமிலை குளி பொடி மாத்திரம் அரிசி குறிரி தண்ணீர் வார்த்து இரண்டு படியாகக் காய்ச்சி வெள்ளாட்டுப் பால் நாழி, எலுமிச்சம் பழச் சாத்தில் குழப்பிக் கொடுக்கவும். பச்சரிசியும் பச்சைப் பயறும் பொங்கிச் சாப்பிடவும்.

<u>பிள்ளையுண்டாக மருந்து.</u>

கழக்காயிலையை இடித்து உரி, பசறு பிழிந்து என்னை வார்த்து மாத விடாய் வந்து முழுகின மூன்று நாள் மூன்று கட்டு போட்ட நாழியில் வார்த்து அவள் புருஷன் கையினாலே எடுத்து கொடுத்து அவள் குடிக்கவும். அன்று முதல் கொண்டு மூன்று நாளும் புருஷன் பெண்சாதியுடம் கூடப் படுத்துக் கொள்ளலாம்.

<u>சிலந்திக்கு மருந்து.</u>

செருங்கொட்டை சேர்.க, மஞ்சள் சேர். , ஓமம் சேர். , வாய்விளங்கம் சேர். , பனைவெல்லம் சேர். , எள்ளு சேர்.உ, கடை மருந்து எல்லாம் வைத்து ஒன்றாய்க் கட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணி தின்னவும். வயிறு இரைந்து வயிறு கழிஞ்சால் சுக்கு, மிளகு, வசம்பு, உள்ளி அரைத்து நாழி மோரில் கரைத்து நாழியாகக் காய்ச்சி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

சுக்கு, திப்பிலி, சீரகம், தனியா இது நாலும் பலம்.உ இதை கசாயம் வைத்து குடிக்கத் தீரும்.

<u>புண்ணுக்கு எண்ணை பண்ணுகிறது.</u>

நிலக் கடம்பு வேர் பலம். , நரி விளம்பட்டை பலம்.உ, பெரு விளாம் பட்டை பலம்.க, சிறுவிளாப் பட்டை பலம்.க, செங்கத்தாரிப் பட்டை பலம். முளகறணைப் பட்டை பலம்.க, கொடிவேலிப் பட்டை பலம்.க, சிறு குறிஞ்சா பட்டை பலம். , கெந்தகம் பலம்.வ, ஆதண்டைப் பட்டை பலம். இது வெல்லாம் இடித்து எண்ணெயில் போட்டு காய்ச்சி இறக்கிற சமையத்தில் உள்ளி கருஞ்சீரகம், கார்போக அரிசி, வெட்பாலை அரிசி, நீரடி முத்து எல்லாம் ஒன்றொன்றாய் விராகனெடை எண்ணெயில் போட்டு கொதிக்க வைத்து வடிக்க குணமாம்.

<u>தாகத்துக்கு.</u>

சிறுகீரையும், திப்பிலியும் அரைத்து முழுங்க தீரும்.

முத்தங் காசு, ஏலம் பொடி பண்ணி நாழி தண்ணீர் விட்டு உழக்காக காய்ச்சி யிதில் சந்தனமும் ருத்திராட்சமும் உரைத்து கொடுக்கத் தீரும்.

<u>பல் நோவுக்கு பல்லசைவுக்கு மருந்து.</u>

விளா வேர், பனை வேர், முள்ளி வேர் இது மூன்றும் நாழி தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சிக் கொப்பளிக்கவும். இதுவும் மருகாளம் வேர் மருதம் பட்டை கோஷ்டம், கடுக்காய், கருங்காலிக் காய் மூவும் நாழி நீர் விட்டு நாழியாக

காய்ச்சி நாலு நாள் கொப்பளிக்க தீரும்.

அரையாப்புக் கட்டிக்கு.

வறத்தங்கி இலையும், கோவையிலையும் மஞ்சள் போட்டு வேறே அரைச்சு செப்பிலைச் சாத்தில் குழைத்து பிலே பண்ணி கட்டி மேல் வைத்து கட்டவும். இப்படி மூன்று கட்டு கட்டினால் கட்டி கரைந்சு ஓடிப் போம். இது கொதிச்சுக் கொண்டது பொய் அல்ல.

திருக்கத்துக்கு மருந்து.

சீயவிரை மருக்காளம் விரை, நெல்லிப் பருப்பு, மரமஞ்சள் தேனுடன் கொள்ளவும். நீர்க் கட்டுக்கு இளநீர், கண்டு சர்க்கரை, கற்பூரம், சிலாசத்து கூட்டிக் கொள்ளவும் நீரிறியும்.

மைசாஊசி.ரு, சீந்தில் பலம்.க, வேப்பம் பட்டை பலம்.க, பேய்ப்புடல் பலம்.க, நிலவேம்பு பலம்.க, கோரைக் கிழங்கு பலம்.க, திப்பிலி பலம்.க, தேனிலாவது நெய்யிலாவது அநுபானம் பண்ணி உள்ளுக்கு கொள்ளவும்.

கடுக்காய் ஆடு தின்னும் பாலை சாத்தில் ஊறப் போட்டு இடிச்சு இந்துப்பு சர்க்கரை இது இரண்டும் அநுபாவம் பண்ணி உள்ளுக்கு கொள்ளவும். மேக குலை வாய்வு தீரும். இது கை கண்டது. மகா யோகமிது.

விஷ முறிச்சி தயிலம் யோகம் கட்டு வகனம்.

எட்டிப் பழம் பேய்ப் பீர்க்கு மலை வேம்பு செருப்படை கொட்டக் கரந்தை, கரிசலாங் கண்ணி, நொச்சில், ஆடாதோடை, மொடக்கொத்தான், மணத்தக்காளி, நகரை எருக்கிலை, கோழிய வரை, குப்பை மேனிச் சாறு, வெள்ளுக்கொற்றை, கடை கை மருந்து சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், கடுகு, வெள்ள ஜி வெங்காயம், வசம்பு, கடுகுரோகனி, விளக்கெண்ணெ, வேப்பெண்ணெ, புங்கெண்ணெ நல்லெண்ணெ யீர வெங்காயம் க கஸ்தூரி மஞ்சள் தயில யோகம் (செய் முறை முடிவு இல்லை.)

பஞ்சாதினி, பஞ்ச லவணம், வெண்காரம் யவ்வாஊசாரம், நவ்வாஊசாரம், பெருங்காயம், வசம்பு, கடுகுரோகனி சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கடுகு, சாரவேளை, வெள்ளை வெங்காயம் ஆக வகை உயரு தண்ணீர் மேலே விடுகிறதுக்கு:- முளகறளை விஷதி, பிரமிச் சாறு, பிரமி யிலைச் சாறு, ஜீனரி* வேளை கரிசலாங்கண்ணி, புங்கம் பால் இந்த வகை காய்ச்சி மேலுக்கு விடவும். குலை கட்டு விடும். கை கண்டது. கன்

கண்ணுக்கு மருந்து:-

அவரிப் பால் கண்ணிலிட வேதினை எல்லாந் தீரும். செம்பும், கையாந்த கரை சாறு விட்டு செண்பக மொட்டு கொண்டு உரைத்து கண்ணிலிடவும். மணத்தக்காளி இலைச் சாறு பிழியவும். கண்ணில் பூத் தீரும். சுலைக் கொம்பு எலுமிச்சம் பழச் சாத் திலுரைத்து கண்ணிலிட பூ ---- விழும்.

மாலை கண்ணுக்கு மருந்து.

முசுமுசட்டை சாத்தில் கறுத்த முசுமு உரைத்துக் கண்ணிலிட மாலைக் கண் தீரும். கை கண்டது.

நொச்சிலிலையும், உள்ளியும் நரக்கி மூலைப் பாலில் பிசைந்து நாசியிலே பிழியவும்ட்டும் நிற்கும். சிகப்பு வாங்கும். தலை நோவு தீரும்.

வயத்தில் வலிலக்கு மருந்து.

வேலிப்பருத்தி யிலை பலம்.ரு, அழிஞ்சிப் பட்டை விராகனெடை.உ, பெருங்காயம்

விராகனெடை.க, கடுகு விராகனெடை.உ, தண்ணீர் விட கமல் யிலை பதத்தில் அரைத்து பின்பு ஆட்டுப் பாலிலரைத்து மத்திச்சு கொடுக்கிறதுக்கு முன்பான இரண்டு விராகனிடை நல்ல வெல்லம் தின்னக் கொடுத்து பின்பு தலைக்கும் உடம்புக்கும் நல் லெண்ணை மெத்த பிடித்து பின்பு இரண்டு கைப்பட்டைக்கும் இரண்டு சீலைத் துணி கொண்டு கட்டிப் பின்பு மருந்து கொடுக்கவும். குடிச்ச உடனே வாயிலெடுக்கும். சற் நேரஞ் சென்ற உடனே வயித்திலே விடும். இது எந்தப் படி இருக்கு மென்றல் ஆமை போலேயிருக்கும். நல்ல வெய்யில் நாளைக்கு கொடுக்கிறது. குளிர் நாளையில் கொடுக்க வேண்டாம். வாந்தியும் வகுறு மெத்த எடுக்கும். பயப்படாமல் வகுறு கழியுறதும், வாந்தியும் நிற்க வேண்டிஞல் பாசிப் பயறு வேக வைத்து தண்ணீர் இறுத்து கொடுத்த உடனே நிற்கும். பின்பு மோரு சோ ம் கொடுக்க இளைப்பு தீரும். நோவு தீரும். கை கண்டது.

சுரத்துக்கு மருந்து.

கஞ்சாங் கோரை இலை கொண்டு வந்து, சுக்கு, திப்பிலி, மிளகு, கூட பிட்டு இட்டு அந்த நீர் பிழிஞ்சு அந்த மூன்றும்அரைத்து கொடுக்கவும். சுரம் விடும். கை கண்டது.

சுடர்ப்பம் வேர் பலம்.க, சீரகம் பலம்.வ, கோரோசினம் பணவெடை அரைச்சு கொடுக்கச் சுர மாறும்.

வாதத்துக்கு மருந்து.

அரூஉ வாதம் உடம்பெல்லாம் அருந்திஷப் போலே இருக்கும். இதுக்கு மருந்து. ஆமணக்கம் வேர், தும்பை வேர், நல்லெண்ணையில் கொதிப்பித்து இடவும். நீங்கும்.

ஏகபாத வாதம்:- ஒரு புறமெல்லாம் நோகும்.

இதுக்கு மருந்து:- இந்துப்பும், வெண்காரமும் அரைத்து தடவவும். இதுக்கு மருந்து உப்பிலி வேர், மருக்காளம் வேர், உள்ளி வசம்பு அரைத்து இள வெந்நீரில் கொடுக்கவும். நன்ஞரி வேர் நெய்யில் காய்ச்சி தலைக்கு தேய்க்கவும்.

சந்து வாதம்:-

ஒரு புற மெல்லாம் நடுக்கும். இதுக்கு மருந்து: தென்ன வேர், தேங்காய், யெண்ணையில் கொதிப்பித்து இடவும். நீங்கும். அரூஉ வாதம் இடுப்பைக் கடுக்கும். இதுக்கு மருந்து கண் முழித்து ராச்சாலம் தூக்கம் வராது. முலகன்ற ரெத்தம் பாயும். இதுக்கு மருந்து கழநீர், அமலாக வாங்கி சீலையில் பிடிச்சு முதற பார்க்க மூன்று பொழுதில் நிற்கும்.

பூதாங்க வாதம் ஒரு புறமெல்லாம்! நோகும்.

இதுக்கு மருந்து:- திமிர்*

திமிர் வாதம் என்கிறது உடம்வெல்லாம் சொறிந்து திமிருக இருக்கும். பின் கால் கை சேத்தடிக்கும். பின்பு இருமலெடுக்கும். பின்பு கட்டிஎளகக விழும். பின்பு பொடி இருமலாக இருக்கும். பின்பு ரெத்தக் கட்டியளாக விழும். இத

இதுக்கு மருந்து:- கொடுக்கிறது வகை சந்தியஉநாரம், இந்துப்பு விமபனம் கல்லுப்பு தேங்காய் என்ணையில் கொதிப்பித்து இடவும்.

பூதாங்க வாதம்:- ஒரு புறமெல்லாம் நோகும்.

இதுக்கு மருந்து:- முத்தின தேங்காயில் பாதி நாற்த்தேங்காய் அளவு எருமை மோரில் கரைத்து கொடுக்கவும்.

ஏகாங்குலி வாதம் என்கிறது ஒரு விரலை நடுக்கும்.

இதக்கு மருந்து :- பொன்னாங்கண்ணி சாரம், என்ணெயும் கொதிப்பித்து இடவும். நிற்கும்.

அங்கு வாத மென்றிகது வயறு நோகும்.

இதக்கு மருந்து :- கெந்தி, திப்பிலி, சர்க்கரையுங் கூட்டிக் கொடுக்கவும் நிற்கும்.
பீசான வாதம் :- உடம்பு நிறைய பேத்தமாம்.
இதக்கு மருந்து :- மரமஞ்சள், கெந்தகம், பாலிலரைத்துக் கொடுக்கவும்.
தம்பு வாதம் : ஒரு கையை நடுக்கும்.
இதக்கு மருந்து :- சுக்கு, திப்பிலி, கடுக்காய், இது நாலும் அரைத்து கொடுக்கவும்.

அங்குச வாதம் :- மூச்சு கொள்டு வார்த்தை பேசும்.

இதக்கு மருந்து :- திப்பிலி, மிளகு விளக்கெண்ணெயில் கொதிப்பித்து இடவும்.

வலிக்கு : எழு நாழிகை பழ ஞாயிறுக்கு மருந்து.

பாக்களவு கல்லுப்பு நல்லெண்ணெயில் கொதிப்பித்து கொடுக்கவும்.

மொசல் வலிக்கு மருந்து.

தண்ணீர் கண்ட விடத்தில் வலி யெடுக்கும். இதக்கு பன்னி விட்டை உலந்தது சுட்டு சாம்பலாக்கிக் கழுதை மூத்திரத்தில் போட்டு ஊறின தண்ணீரில் ஒரு உருண்டை உரைத்து மூக்கியல் நசியம் பண்ணவும் நிற்கும்.
பித்தத்துக்கு நசியம் பண்ணவும் :- பேய்க் குமிட்டியிலை சாத்திலுரைத்து கண்ணிலிடவும் ஓடும்.

விஷத்துக்கு வெகு மூத்திரத்துக்கு.

விளா அரிசிப் பொடியில் தண்ணீர் விட்டு ஒரு உருண்டை கலந்து கொடுக்கவும்.
முளவு நோவுக்கு அசம தாகம் கூட்டிக் கொடுக்கவும் நிற்கும்.
கண்ணுக்கு மருந்து :- கண்ணோய் சகலத்துக்கும் :-

திமிர போக சகல வெள்ளெழுத்துக்கு இதக்கு முலைப் பாலில் உரைத்து கண்ணி விடவும்.
காசம் தீர மருந்து :- மஞ்சேசிலை துத்தம், திருப் பொடி, வெண்கலப் பொடி இந்துப்பு, நல்ல சங்கு, கடல் நுரை நல்ல சந்தனம், செங்கழுநீர் கோஷ்டம், ஏலம், பச்ச மஞ்சள், மிளகு, மனிதன் தலை ஓடு, கோழி நெஞ்செலும்பு, விலா எலும்பு, கோழி முட்டை, சமூலமும் இது வெல்லாம் வெள்ளாட்டுப் பாலிலரைத்து பின்பு எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி முலைப் பாலிலுரைத்து கண்ணிலிடவும். கசம்பு தீரும்.
பூவுக்கு :-

துத்தம், அரிச பச்சை நாபி, பச்சைக் கற்பூரம், தொருப் பொடி, புங்கம் வேர், சாறு கூட்டிக் கையான் தகரை சாத்திலரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிட தீரும். நந்தியா வட்டம் சாத்திலுரைத்திட தீரும். பனைமட்டை சாத்திலுரைத்திட பூ தீரும். முல்லை பாலிலுரைத்திட பூ தீரும்.

நேத்திர வாய்வுக்கு :-

எலுமிச்சம் பழச் சாத்திலுரைத்திட தீர் மாங்கிஷந் தீரும். முலைப் பாலி லுரைத்திட நீல காசம் போம். நேத்திர வாய்வு என்கிறது தலை இரவில் கண் துடிக்கும்.

சிரேசு வாய்வு என்கிறது தனி நோவாயிருக்கும்.

இதுக்கு மருந்து:- நொச்சில் கொழுந்தும், கடுக்காயும், நருக்கி நசியம் பண்ணவும்.

அரை வாத மென்கிறதுக்கு மருந்து நல்லெண்ணெயும்/ உளுந்து மாவும் தின்னவும் நீங்கும்.

நாயத்தியத்துக்கு மருந்து:- தலை சுழற்றி வரும். இதுக்கு மருந்து. வசம்பு அரைத்து தலையில் தடவவும் நிற்கும்.

சுவில் மடிவாத மென்றிகுதுக்கு மூக்கு வீங்கும்.

இதுக்கு மருந்து: *சுக்கு*அரைத்து*தலையில்*தடவும்*நீ*பிரமியிலைச் சாறு நொச்சில் சாறு எலுமிச்சம் பழச் சாறும் சர்க்கரையும் கூட்டி உள்ளுக்கு கொடுக்கவும். வீக்கந் தீரும். பிரம்பில் வாத மென்கிறது எப்போதும் கோல வலி கொள்ளும்.

இதுக்கு மருந்து: வேலிப் பருத்தி பாலில் பாக்கு வெற்றிலை தின்னக் கொடுக்கவும்.

விருத்த வாதம் நாவும் நெஞ்சும் முதுகும் கழுத்தும் முழுதும் வீங்கும். சிவந்து இருக்கும்.

இதுக்கு மருந்து:- ஆட்டுப் பால் எருக்கன், வசம்பு, சுக்கு அரைத்து எண்ணெயில் கொதிப்பித்து விடவும். வயட்டி வாத மென்கிறது எப்போதும் கொட்டாவி கொள்ளும். மேல் பத்தது புத்து மண் காய்ச்சி கொடுக்கவும். உடம் பெல்லாம் சொறி எடுக்கும்.

இதுக்கு மருந்து:- நாய் பிப்பிடிச்ச தலையை கிள்ளிப் போட்டு நல்ல வெல்லத்தில் உள்ளே மூடி உள்ளுக்கு கொடுக்கவும்.

வியாத்தலை வாதம் மத்து மாகிலும் பிருந்த தேமலும் உண்டாகுமாகில் வெண்மை உண்டாகும் குருங் கூட்ட முண்டாகும். கிஞ்கூட்ட ஊர முண்டாகும். தலைகளாக உடம்பு, கை கால் எல்லாம் வீங்கும். வலி எடுக்கும். இதுக்கு ஐந்து வகையுங் கட்டிக் காண்பிச்சது கெண்டம். இதிலே ஒரு வகை தப்பிறல் பிழைப்பான்,

<u>இவ்வகைகளுக்கு_மருந்து</u>:-

செங்குட்ட கொட்டை இரண்டு விராகனெடை உழக்கு நல்லெண்ணெயில் எரித்து போன நேரமான பிறகு இரத்தக் கொடுக்கவும்.

சுந்த வாதம் உடம்பெல்லாம் வேர்க்கும்.

இதுக்கு மருந்து:- வெந்தயம், மொடக் கொத்தானிலைச் சாத்திலரைத்து உடம்பில் பிடிப்பிக்கவும். நீங்கும்.

திலவாத மெக்கிறது உடம்பிலே எவடத்திலே யாகிலும் அம்பு சொருகிறப் போலே இருக்கும்.

இதுக்கு மருந்து நொச்சிலிலை, கெந்தகம், சீகு அரிசி, சூரணம் பண்ணி வெந்நீரில் கொடுக்கவும்.

நிச்ச வாதம்: ராவைக்கு கடுக்கும்.

இதுக்கு மருந்து: நாயுருவி வேர், பூனைக் காஞ்சொறி வேர், கோவை வேர் பசுவின் பாலிலரைத்து குடிக்கவும் நிற்கும். கருவேலம் வேர் பட்டை முலைப் பாலிலரைத்துக் கோரோசனையுங் கூட்டிக் கொடுக்க நிற்கும்.

<u>மூலத்துக்கு_உஷ்ணத்துக்கு_ஜெம்புருக்கிக்கு_மருந்து</u>.

பூல் திருகுங்கி இலையும், கருங் குருவை அரிசியும் இடித்து நல்லெண்ணெயில் தின்னவும். மூலந் தீரும்.

உஷ்ணத்துக்கு கல்நார், கல்லுப்பு, சீரகமும் அரைத்து எண்ணெயில் குழைத்துக் கொடுக்கவும். குவளை இலையும் எண்ணெயுங் குழைத்துக் கொடுக்கவும். மந்தத்துக்கு நீர் வேளை வேர் பட்டையும் எண்ணெயுங் கூட்டி கொடுக்கவும். பின்னையைப் புதைச்ச இடத்தில் மஞ்சள்

சீலை எடுத்து வந்து ஈபங் கொடுத்து பிடவையில் சேர்த்து இந்தப் பிடவையைக் கட்ட பிள்ளையுண்டாம்.

உஷ்ணத்துக்கு மருந்து:-

பொடுதலை இலைச் சாறும், எண்ணெயுங் கூட்டிக் கொடுக்கவும். ஆரையும் மோரிலரைத்துக் கொடுக்கவும். எருமைப் பாலில் எலுமிச்சம் பழச் சாறு விட்டுக் கொடுக்கவும். கரிசலாங் கண்ணி சாறும், மோரும், பனை வெல்லமுங் குடிக்கவும். எண்ணெயில் சேர்த்து தண்ணீர் விட்டு குடுக்கவும். வெள்ளை வெங்காயம் நல்லெண்ணெயில் அடிக்கவும். மிளகு, மீர வெங்காயச் சாத்தில் குடிக்கிறது. இதுக்கு பத்தியம் சப்பிலி சோறு.

பிள்ளை விழ மருந்து.

நாகப் பாம்பு வெத்திலையில் மடித்து உள்ளுக்கு கொடுக்க பிள்ளை உடனே விழும். அரசந் தோலும், எலும் அரைத்து இள வென்னீரில் கொடுக்கவும் பிள்ளை விழும். கை கண்டது.

அருக்கிரு வேர், வடக்கே போற வேர்இ ஒம்மல் பிருங்கி ஊசி மாடித் ஈபங் கொடுத்து தலையிலெறக்கிக் காலின் கீழே போட்டு மெதிக்கவும். பிள்ளை விழும்.

வேப்பெண்ணை மந்திரிச்சு கொடுக்கிறது:-

மந்திரம். ஓத்தி ஒருக்கி சத்தே ஏத்தி சொழல் சுவாகா. கண்டது.

அருகடுப்பிக்கு மருந்து:-

பொல்தகாய் பலம்.க, காச்சிற விதை பலம். , நெல்லிப் பருப்பு பலம்.க, சடாமாஞ்சி பலம்.வ, கோரைக் கிழங்கு பலம். , நல்ல மூசிலி பலம்.வ, தெல்ல நுச்சி முசிலி பலம்.வ, சல்ல கெண்ட பலம். , நெலாதாடி கெண்ட பலம்.கு, பூருக மங்க பலம்.க, இதை வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி வென்னீரில் உள்ளுக்கு கொள்ளவும். கழிச்சல் நிற்கும். பினி எந்த மருந்திலும் நில்லா தென்றால் தேமனக் கெண்ணெயும் மூலைப் பாலுங் கூட்டி குழைத்துக் கொடுக்கவும். இதுக்கு அரகடுப்பு முதலானது நிற்கும். கை கண்டது.

புண்ணுக்கு மருந்து:-

முத்தம், துரிசு, வெள்ளைக் குங்கிலியம், சுண்ணாம்பு, குப்பை மேனிச் சாறு, விளக் கெண்ணெயில் கலம் செம்பு கொண்டு ஒரைத்து கோரோசனையும் சத்து கூட்டி உரைத்து சீலையில் பிடித்து போடவும் ஆறும். கை கண்டது.

பிள்ளை விழ:-

நாயுருவி இலையும், குப்பை மேனி இலையும், கருங் குருவை அரிசியும் இடித்து தின்னவும். மூன்று நாழிகையில் பிள்ளை விழும். கழுதை லத்தி எடுத்து ஆழாக்கு சாறு பிழிந்து இதில் காடியுங் கல்லுப்பும் நல்லெண்ணெயுங் கூட்டி மந்திச்ச வயித்திலெறங்கப் பூசவும். ஒரு நாழிகையில் பிள்ளை விழும். சிவதுளா இலையும், தாமரை வளையமும் நறுந்தாழை இலையும் காடியில் கொடுக்கவும் பிள்ளை மபபோடே விழும்.

பிள்ளைப் பெத்த பெண்டுகள் வயித்தில் ரத்தங் கட்டினால். கருக்கும்:

வாழைச் சருகு சுட்ட சாம்பல் உழக்கும் வட்டத் துத்தி வேர் சங்கங் கொழுந்து கூட்டி நறுக்கி பிட்டு பிட்டு சாறு பிழிந்து கொண்டு இந்தச் சாத்தில் மிளகு சுக்கு, திப்பிலி, அசமதாகம் கூட்டி இவ்வகை எல்லாம் அரைத்து சாம்பலுங் கூட்டி பசுவின் நெய்யில் சத்தே எண்ணை சத்தே கூட்டிக் குழப்பிக் கொடுக்கவும். ரெத்தம் விழும். கை கண்டது. கழுதை வண்டும் அரிசியும் சுண்ணாம்பிலிட பிள்ளை விழும்.

அழுக்கிரு கற்பம் :-

அழுக்கிரு செடிக்கு முழு சிவலம் வந்து வடக்கு போற வேர் பிடுங்கிற போது ரீகிருஉஞ்ன பகவானே என்று சொல்லிப் பிடுங்கி வந்து நல்லெண்ணெயிலரைத்து குழப்பிக் கீழ் நாக்கத் தடவவும்.

பிறந்தியில் ஒருவருடன் பேசாமலிருந்து தடவவுடனே விழுமாம். விழுந்த உடனே ஏற பூசவும். அல்லாத வேளைக்கு தோச்சுப் போடவும். அழுக்கிரு வேர் வடக்கு போற வேர் பிடுங்கி குளிசமாடி இந்தக் குளிசத்தை தலையிலறக்கி காலின் கீழே போடவும் பிள்ளை விழும். பின்பு எறப் பூசி விடவும். சிவந்த அலரி வேர் காஞ்சரொறி வேர் நீரிலரைத்து யோனி ஓதட்டில் தடவ உடனே பிள்ளை விழும்.

முலைப் பால் சுரக்க மருந்து :-

கோரோசினையும் வெல்லமும் பசுவின் பாலில் கரைத்து குடிக்கவும். பால் சுரக்கும்.

மல பிள்ளைக்கு முண்டாகும் :- மாந்துளிரை அரைத்து முலையிலேயும் மாரிலேயும் பூசவும் முலை எழும்.

மந்திரம் :- எரி சின்னது செந்தி-பொரி சின்னது சூலம்-திரி சின்னது சக்கரம்-எரி எரி, பொரி பொரி வெந்த நீர் வத்தி கீழுயிருந்த குழி வத்தி புள் வத்தி புனல் வத்தி உதிரப் பால் வத்தி வத்த வத்த சுவாகா.

குருப் புண்ணுக்கு :-

கடல் நுரையும், அரிசியுஞ் சுட்டு நோக அரைத்து கண்ணில் போட குருப் புண் கரையும். கை கண்டது. சோதினை.

சிறந்திக்கு எண்ணை :-

எண்ணை சேர்.ங,-க்கு கார்போக அரிசி பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, நீரடிமுத்து பலம்.க, வெட்பாலரிசி பலம்.க, வெங்காவளி பலம்.உ, வசம்பு பலம்.க மஞ்சள் பலம்.க, ஓமம் பலம்.க, மிளகு பலம்.க, சித்திர மூலம் பலம்.உ, கீழ் காய் சாறு மாவிலிங்கப் பட்டை பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, சதிரக் கள்ளி பால் பலம்.க, இது வெல்லாம் கொதிக்க வைத்து உள்ளுக்கு கொள்ளவும். சப்பிலி சாப்பிடவும்.

கண்ணோவுக்கு மருந்து :-

சுத்தம் அரிசி சவுக்காரம், கடுக்காய், படிக்காரம், நாயுருவிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து நிழலில் உலர்த்தி முலை பாலில் நனைத்து கண்ணில் புதிய மாறும்

ஒருத் தலைக்கு வாழைத் தண்ணீர் குத்தி வசம்பு உரைத்து இடவும். அடப்பங் கொட்டையை ஆட்டுக் கோமியத்தில் அரைத்து மறு பக்கமாக இடவும்.

மூலத்துக்கு, மாலைக் கண்ணுக்கு :-

குதிரை குளம்பும், சாதி பத்திரியும் இடித்து சூரணம் பண்ணி புகை ஆசனத்தில் பிடிக்க மூலங் கரையும். கை கண்டது.

தும்பை இலையைக் கையில் கசக்கி பிழிந்து நெருப்பில் தேய்ச்சு பதமாக கண்ணிலிட மாலைக் கண் மாறும்.

வெள்ளெழுத்துக்கு :- புங்கங் கொட்டையை வெள்ளாட்டுப் பாலில் ஊற வைத்து அந்தப்

பால் வார்த்தரைத்து உருண்டை செய்து நிழலிலுர்த்தி முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிட வெள்ளெழுத்து போம். கை கண்டது.

ஒருத் தலை நோவுக்கு மருந்து :-

கண் இடிக்கிக் கொண்டு குத்தூப் போலே இருக்கும். இதுக்கு மருந்து உப்பிலி, இலை, ஆமணக்கெலையில் சுருட்டி புடமிட்டு ஆமணக் கெலை பூத்து பறந்து போம். அப்போ அந்த எலை கரி போல வரும். இந்தக் கரி விராகனெடை இள வெந்நீரில் கொடுக்கவும் ஒரு தலை நோவு தீரும். கை கண்டது.

கண்ட மாலைக்கு அச்சரத்துக்கு :-

அழுக்கிரு வேர் கொழுந்து கொம்பு மிளகும், கள்ளி வேர், புங்கம் பால் நொச்சிலிலைச் சாறு கொதிப்பித்து உரை உரை தடவவும்.

கோழிய வரை இலையும், இலுப்பைப் புண்ணாக்கும் அவைத்து கட்ட தீரும்.

வீக்க மென்கிறது சகலத்துக்கும் இந்த பத்து இடவும் :-

மீசதம், நாபி, எட்டிக் கொட்டை, அபினி, சரியாய்க் கூட்டி இலைக் கள்ளி சாத்திலரைத்து பூசப் பூச ஐந்து பொழுதில் சுமாம். கை கண்டது.

மிளகு பொடியும் நவாச்சாரமும் எருக்கங் கொப்பில் தொட்டு இப்பொடியுந் தொட்டு உண்ணுக்கில் வளையமாக சுத்தவும் தீரும். கை கண்டது. மருந்து இட்டவுடனே புண்ணும்.

பூண்டும், அரிசியும் ரெட்டே சுட்டு தின்னக் கரையும். காது குத்து சீழ் வடியும்.

கண்ணக் கிறந்திக்கு காதுக்கு :-

நெஞ்சில் சொழுந்தம் ஓட மல்லிக் கொழுந்தம் நசுக்கிக் காதில் பிழியவும்.

கண்ணக் கிறந்தி கண்டத்தக்கு மேல் பட்ட வீக்க மென்கிறதுக்கு :-

அபினி, நாபி, நவாச்சாரம், எருக்கம் பால் கூட்டி கோழி முட்டைக் கருவில் இதையெல்லாங் கூட்டி நோக வரைத்து சுத்திலும் பூசவும். கண்ணங் கிறந்திக்கு மருந்து இடத் தீரும். கை கண்டது.

கல்ப்ப விபரம் :-

முத்தங் காசு.ஐ, கோரைக் கிழங்கு குமரி.ஐ, கத்தாழை சாறு, வேளை கன்னியா குமரி.ஐ, சத்தி (சாறுள்ள) கரசலங் கண்ணு, கையாந்த கரை.ஐ, வேலிப் பருத்தி, உத்தாமணி, அனைக் கண்ணனி, அத்தி ஆனை வணங்கி, நெருஞ்சி, திரி பாலை, கடுக்காய், நெல்லிப் பருப்பு, திரிகடுகு, திப்பிலி, மிளகு, சீரகம், குதமாவது ரசம், லோபமாவது அரப்பொடி, இருவேலி, சித்திர மூலம், கந்கடா சிங்கி, கடுக்காய்ப் பூ, வாளம், நேர்வாளம், பேயன் பழம், வாழைப் பழம், அசம நாகம், ஓமம், சீலை மஞ்சிலை, எலிப்பகை, எலிப்பாசாணம், சிறு தேக்கு, கண்டு பறங்கி, அற்ப சிலம் சூத்திரம், தாழைக் கொன்றை வாழை, குத பிலை மாவிலை, கடுகுரோகணி, வடபத்திரம் ஆல மரம், நீரிர் திரிபும் ஆகாசத் தாமரை கோழி முட்டைத் தோல் பற்பம், பெருங்காயம், சத்தி சீரகம், தாமரை இதில் சுத்தி நீர் ஓண்டி நொச்சில் பிரிங்கா மோடி நெல்லி விதை முசுட்டி அல்ப செந்தாந்தி அழுக்கிறுய் புதிக்கை, ஆயில்ப் பட்டை, சிங்கம், சதுரக் கள்ளி, தொட்டால் மலரி, கள்ளி, அரக்க எருக்கு, நிம்பழம், எலுமிச்சம் பழம், நத்தை சூரி, மூடி மேல் மூடி

28.12.62.

சுக்கன், கல்லு சுண்ணம்பு,

தாமாலைக்கு_மருந்து :-

வாயில் நல்லெண்ணை வார்த்து வாயிலிருக்கையில் அடப்பங் கொட்டையை எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கன்னிவிடவும். வாயிலிருக்கிற எண்ணை பச்செலைச் சாறு போலே வரும். இரண்டு நாழிகையில் உமிழ்ந்து விடவும். ஐந்து நளிப் படிக் கலிக்கம். பின்பு எலுமிச்சம் பழத்துக்கு அரப்பொடி விராகனெடை.க, சுக்கு விராகனெடை.க; அசமதாகம் விராகனெடை.க,. இத்திட்டம் கை கண்டது.

தலை_மயிர்_புழு_வெட்டுக்கு:-

காட்டெரு முட்டை கொண்டு இரத்தம் பிறப்பிடம் தேய்த்து பின்பு அம்மான் பச்சரிசி சமூலம் நருக்கிச் சாறு பிழியவும். ஒரு சாமத்தில் புழுப் பிறப்பரும். பதலமாக பார்க்கவும். பத்து நாளையில் மயிர் முளைக்கும். மைரேசனையும், பெருசாளி மயிரும் சுட்டு எண்ணையில் சரித்து தலையில் தடவவும். மயிர் முளைக்கும். சீந்தில் இலை கசக்கி பிழியவும்.

கண்ணில்_புழு_வெட்டுக்கு_மருந்து :-

துத்தம் விராகனெடை.க, பொரிச்சு கலத்தில் வைத்து முசுமுசுக்கை இலைச்சாறு வார்த்து செம்பு கொண்டு உரைத்து பசுவின் வெண்ணையும் போட்டு அரைத்து கண்ணி லிடவும் புழு வெட்டு பிரிசல் தீரும். கை கண்டது.

வயித்தில்_வியாதிக்கு_சூரணம் :-

மிதுரம் இரண்டு, கெந்தகம் விராகனெடை.உ, பொன்னரிதாரம் விராகனெடை .உ., நேர்வாளம் பருப்பு விராகனெடை.உ, இவ்வகைகளுக் கெல்லாம் செம்பு சரி யாய்ச் கூட்டி ஒரு சட்டியில் வைத்து ஒரு பங்கு பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி விராகனெடை பிரமாணம் தேனில் அந்திக்கு சந்திக்கு பத்து நாள் கொள்ளவும். இதுக்கு பத்தியம் பாலும்_சோறும் பின்பு அழிஞ்சிலிலை போட்டு தண்ணீர் காய்ச்சி உடம்புக்கு விடவும் நோவு தீரும்.

சீத்திர மூலம் பலம்.க, சண்டங் கத்திரி பலம்.ங; தாழுவேளை பலம்.ங, சங்கம் வேர் பலம்.ங, மாவிலிங்கப் பட்டை பலம்.க, சதகுப்பை பலம்.க, வெள்ளெருக்கு பலம்.ச, வெள்ளறுகு பலம்.ரு இது வெல்லாம் பொடி செய்து ஒரு பங்கு பறங்கிப் பட்டை கூட்டி தின்னவும்.

சுக்கு பலம்.க, சதகுப்பை பலம்.க, வெள்ளெருக்கு பலம்.ச, வெள்ளறுகு பலம்.ரு இது வெல்லாம் பொடி செய்து ஒரு பங்கு பறங்கிப் பட்டை கூட்டி தின்னவும்

சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, மிளகு பலம்.ச அசமதாகம் பலம்.க, குரோசாணி ஓமம் பலம்.க, (செய் முறை முற்சப் பெறவில்லை பதினெட்டு வகை வாதம் சூலைவலி எனப்பட்ட மொடங்கள் கபால சூலை நோவு முதலா னது தீரும்.

கடுக்காய் பலம்.க, தான்றிக்காய் பலம்.க, கடுகுரோகணி பலம்.க, கிராம்பு பலம்.க, சாதிக்காய் பலம்.க, சாதிபத்திரி பலம்.க, நாய்க் கடுகு பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, அரத்தை பலம்.க, செவியம் பலம்.க, இது வெல்லாம் ஒரு சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து எரிவிட பதினைந்து நாழிகையில் பதமாம். இவ்வகை சரியாகக் கூட்டிக் கையாந்த கரை சாத்தில் சாம மரைத்து தலேளைப்

பழம் பிரமாணம் உருண்டை செய்து கையாந்த கரைச் சாத்திலரைத்து குடிக்கவும் வயித்தில் நோக்காடு தீரும். கை கண்டது.

<u>மூலத்துக்கு மருந்து :-</u>

புல் லுடங்கியிலையும், கருங் குருவை அரிசியும் இடித்துத் தேன் வார்த்து தின்னவும். ஊ மூலம் உடம்பு கண்டிப்புகளும் தீரும். கை கண்டது.

<u>உபய சத்தி வாதம் :-</u>

ஒரு கண் நீர். இரண்டு கண் நீர் வடியும். இதுக்கு மருந்து மாசேனி கிழங்கும் துரிசியும் அரைத்து கண்ணிலிடவும் உடனே தீரும். கை கண்டது. அமுக்கிருக் கொழுந்து நறுக்கி கண்ணில் பிழிய "ன்வெள்ளை தண்ணீர் பாயுறதும். மாட்டுக்கும், ஆட்டுக்கும்' பண்ணிக்கு கண்ணுக்கு மூன்று நாள் நாளொன்றுக்கு மும்மூன்று துளி குத்தவும். கண் ஆகாது. என்ன கண்ணும் திறக்கும்.

<u>காமாலைக்கு மருந்து :-</u>

குப்பை மேனி இலையும், ஈர வெங்காயமும் எருமை சாணியும் நறுக்கிக் கண்ணில் பிழியவும். காமாலை தீரும்.

<u>உள்ளுக்கு மருந்து :-</u>

எலுமிச்சம் பழங் கொண்டு வந்து அரப்பொடி திரிச்சு புடமிட்டு கையாந்த கரை சாத்திலரைத்து புட மிட்டு இப்படி இருபது முப்பது புடமிட்டு உள்ளுக்கு கொள்ளவும். காமாலை நோவு தீரும். கை கண்டது.

காமாலைக் கண்ணுக்கு வெள்ளை சாட்டறணை முத்தின வேர் பிடுங்கி வந்து தும்பை யிலைச் சாறு பிழிந்து இடித்தரைத்து கண்ணிலிட மாலைக் கண் தீரும்.

<u>நீரழிவுக்கு மருந்து :-</u>

முத்தின தேங்காய் கொண்டு வந்து அதின் கண் திறந்து அதிலே அபினி விராகனெடை .க, சாது கட்டி விராகனெடை.க, களிப்பாக்கு விராகனெடை.க, கடுக்காய் பொடி விராகனெடை.க, நாவிக்காய் பொடி விராகனெடை.க, ரச செந்தூரம் விராகனெடை.க, இது வெல்லாம் பொடி செய்து தேங்காயில் போட்டு சாணி திமிர்ந்து புடமிட்டு நீர் வத்தின பிறகு உடைத்து வருக வருத்து அந்தி சந்திக்கும் ஒரு விராகனெடை.க, இது வெல்லாம் பொடி செய்து தேங்காயில் போட்டு சாணி மிர்ந்து புடமிட்டு நீர் வத்தின பிறகு உடைத்து உள்ளுக்குக் கொள்ளவும். இதுக்கு பத்தியம் சப்பிலி சாப்பிடவும்.

<u>மேக வாய்வுக்கு மருந்து :-</u>

நிலாத்சனம் பலம்.க, ரெசாஞ்சனம் பலம்.க, தேள் கொடுக்கு சாத்திலரைத்து ஒரு சீலையில் பிடிப்பித்து நிழலிலுலர்த்தி பறங்கிப் பட்டை பலம்.ய, கொண்டு வந்து இடிச்சு சூரணம் பண்ணி ஒரு சால் கொண்டு வந்து பிளியன் பட்டை நெருப்பாக்கி இந்த சாலில் போட்டு இந்த சூரணத்தை பிட்டு இட்டு ஒரு சட்டியிலே மூடி அடியிலே சில்லிட்டு சருத்தியாலே ஊதலிடவும். எட்டு நாளைக்கு மறத்தில் கொட்டி நல்லெண்ணை உழக்கு கொண்டு வந்து விளக் கேத்தி அந்த விளக்கெண்ணையில் பிறட்டவும். பின்பு உள்ளுக்கு கொள்ளவும் மேக வாய்வு தீரும். கை கண்டது.

<u>இரும்பலுக்கு :-</u>

சுக்கு, திப்பிலி, மிளகு, பொடி செய்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு வெல்லம்

போட்டு தேனில் சாசிடை உள்ளுக்கு கொள்ளவும் இருமல் கவை தீரும். கை கண்டது.
நெட்ட பேமுறட்டை சாறும் இதிலே வெல்லமும் ஓமமும் லவங்கமும் நெய்யும் வார்த்து வேகமாக பக்குவத்துக்கு கொண்டு வந்து உள்ளுக்கு கொள்ளவும். உப்புசம் தீரும். கை கண்டது. **உடம்பு உலர்ந்து போற பிள்ளைகளுக்கு:**

நாழி விளக்கெண்ணெய்க்கு தகரை யிலைச் சாறு சாணத்தி இலை, கொடிப் பாலை இலை இது மூன்றும் உரி பிழிந்த வெங்காய சாறு நாழி கட்டி கொதிக்க வைத்து சிவக்க வேக வைத்து கடுகு பதத்தில் இறக்கி இருத்து பிள்ளைக்கு உள்ளுக்கு கொடுக்கவும். ஒரு விராகனெடை கொடுக்கவும். உடம்பு பருக்கும். கை கண்டது. நார்த்தம் பழச் சாறு எருமை சாணத்தில் வார்த்து மத்தித்து பூசவும். சிங்கு மாறும். கை கண்டது.

குண்டிலாதி லேகம்: யோகம்:-

சங்கம் வேர் கண்டங்கத்திரி வேர், வில்வ வேர், தழுதாழை வேர், நெருஞ்சில் வேர், கொடி முன்னை வேர், நொச்சில் வேர், ஆடாதோடை வேர், ஈசுர வேளை வேர், முக்கா வேளை வேர், நாய் வேளை வேர், நீர்முள்ளி வேர் எருக்கம் வேர் முக்குறட்டை வேர் இது வகைக்கு நா க்கு.க, சிறுகாஞ்சொறி வேர். நா க்கு. செம்பிளிச்சங் கொட்டை நா க்கு. முருங்கை பட்டை பலம்.உ பிரண்டை வேர் பலம்.ரு சிற்றாமுட்டி வேர் பலம்.ரு, குப்பை மேனி வேர் பலம்.உ, தேள் கொடுக்கு வேர் பலம்.உ, கரிசலங்கண்ணி பலம்.உ, துளசி பலம்.ங, உத்தாமணி வேர் பல.இ. பொடுதலை பலம்.ங, இது கசாயம்.

கடை மருந்து:- பழ வெல்லம் பலம்.ய, சிறு தேக்கு பலம்.ங, கடுக்காய் முறடு பலம்.ங, ஓமம் பலம்.ங, மிளகு பலம்.ங, சடாமஞ்சி பலம்.ங, திப்பிலி பலம்.ங, சீரகம் பலம்.ங கருஞ்சீரகம் பலம்.க, ஏலம் பலம்.தெ, லவங்கப் பட்டை பலம்.தெ லவங்கப் பத்திரி பலம்.தெ, சிறுநாவல் பூ பலம்.தெ, தாளிச பத்திரி பலம்.தெ, ஆனை திப்பிலி பலம்.ங, சுக்குளம் பலம்.க, இல்வாலுவாரம் பலம்.க, பூரண சந்திரோதயம் விராகனெடை.க, கோஷ்டம் பலம்.க, சாதிக்காய் பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, தேன் படி.ங, லோக செந்தூரம் பலம்.க இது யோக வகை (முடிவு இல்லை)

கண்ணில் பூவுக்கு மருந்து:-

குளவன் முதுகும், குதங் கந்தன் பல்லும் மானத்தின் மீறும் மலை உறவாறன் கையும் மீறிம் இனத்தின் கொம்பும் இருளரி வாசனைச் செறும்பும் மலை கொறத்தி முலை பால் வார்த்து உரைத்திட கண்ணில் பூ விடுத்து விடும். கண்டது. சாதிக்காய் சாதிபத்திரி லவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, படிகாரம், நத்தம், தூரிசி, கடுக்காய், எலுமிச்சம் பழம், முலைப் பால், பசுவின் வெண்ணை இது கண் மருந்து. யோகம்.

இதுக்கு விபரம்:- குன்ன முழுகு, நுமையோடு, குறங் கந்தன் பல், கழுதைப் பல், மானத்தின் மீறம், வெள்ளி மலை உறவா நங்கையும், புலி நகம், ஏனத்தின் கொம்பு, பன்றிக் கொம்பு, இருளரவான் நெற்செலம்பு, கோழி நெற்செலம்பு, தேன்,

வில்வாதி லேகியம்:-

வில்வ வேர் பலம்.ள, சித்தா முட்டி நெல்லுப் பொரி, சுக்கு, காட்டு முன்னை, கொத்தமல்லி, எலுமிச்சம் வேர், சந்தனக் கட்டை, சிறு குறிஞ்சா, முருங்கை, கோரைக் கிழங்கு, பற்படாகம், சாறட்டை, நிலப்பனைக் கிழங்கு,

நிலவேம்பு, சீந்தில் கொடி, பேருமுட்டி, தழுதாழை, கண்டங் கத்திரி, சிறவழுத லை, பாதிரி வேர், வெரி வேர், காட்டாமணக்கு நெய் சட்டி புள்டு ளா தலேவோ வட்டத் திருப்பி, நன்னாரி வேர்; கடுக்காய், பருத்திக் கொட்டை, நரிப் பயற பேய்ப்புடல் இ லோம் பழம், முசுமுசுக்கை தானிக்காய், நெல்லிப் பருப்பு, செம்பிளிச்சங் கட்டை, தண்ணீர் மிட்டான் கிழங்கு, அரத்தை முசுகிலிலை கொள்ளை வேர், மரமஞ்சள் இது வகைக்கு பலம்.ய, கடை மூலம், கருஞ்சீரகம் பலம்.வ, குரோசாணி ஓமம் பலம்.வ, கருள் நாவல் பட்டை பலம். , கடுக்காய் பலம்.வ, மிளகு பலம்.ச, சுக்கு பலம்.ச, திப்பிலி பலம்.அ, திப்பிலி மூலம் பலம்.உ, செவியம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, நாகேசரம் பலம்.க, சித்திர மூலம் பலம்.க, பற்படாகம் பலம்.க, அரத்தை பலம்.க, சித்தேக்கு பலம்.க, நிலவேம்பு பலம்.உ, ஆனைத் திப்பிலி பலம்.உ, இஞ்சி பலம்.அ, கொம்மட்டி மாதளம் பழம் இரண்டு, தானிக்காய் பலம்.வ, நெல்லி பருப்பு பலம்.உ, எலுமிச்சம் பழம்.சய, பழைய வெல்லம் பலம். சீரகம் பலம்.க, அதிமதுரம் பலம்.தெ, ஓமம் பலம்.க, காச்சூர பழம் பலம்., தாழி பழம் பலம். சாதிக்காய் பலம். , சாதிபத்திரி பலம். , லவங்கம் பலம். , ஏலம் பலம். , பஞ்ச லவணம் பலம். , ருத்திராச்சம் பலம். , கோரோசனை பலம். , அரப் பொடி பலம்.ச, வெண்காரம் பலம். , தேன் சேர்.உ, நெய் சேர்.க இது மகா வில்வாதி லேகியம்.

குழந்தைகளுக்கு மாந்தை உப்பு மாந்தைக்கு மருந்து:-

பாவட்டை வேர், நன்னாரி வேர், சூரணம் வேர், ஓடைக் கொடி, கத்தாழை மடல், வெங்காவளி வசம்பு, கருஞ்சீரகம், நீரடி முத்து, கம்மட்டிக் காய் வறுத்த முத்து எண்ணெய் சேர்.ந, இதில் எண்ணெயாக்கி கொடுக்கவும். விளக்கெண்ணையும் வெள்ள வெங்காயமும் மொட்டக் கொத்தான்இலையும் கோழி முட்டையும் காய்ச்சி வார்க்கவும். உப்பு மாந்தை தீரும்.

நபி நமூஉந்டி லேகம்:-

வெங்கார எளி சேர்.உ, சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.க, ஓமம் பலம்.க, நெசாவரம் பலம்.க, அரத்தை பலம்.க, பெருங்காயம் பலம்.க, கோஷ்டம் பலம்.க, தேத்தாங் கொட்டை பலம்.க, கடுக்காய் பலம்.க, அக்கார காரம் பலம்.க, நாக சிந்தூரம் பலம். , இது யோக வகை.

ஏலம் பலம்.உ, மிளகு பலம்.க, திப்பிலி பலம்.க, சுக்கு பலம்.க, அதி மதுரம் பலம்.க, சாதிக்காய் பலம். , சாதிபத்திரி பலம். , லவங்கம் பலம். அரத்தை பலம்.க, சிறு தேக்கு பலம்.க, சர்க்கரை பலம்.ரு, தேன் பலம்.ய, செந்தூரம் பலம்.க, இது யோக வகை.

பெரு வேழ்க்கைக்கு மருந்து:-

கழக் கொடி கொழுந்து, கோழிய வரை கொழுந்து, கெருட பட்சி இலை, உள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு இம்மட்டும் சிறு நீரில் நசியம் பண்ணவும். கோது புட்ட வாசலிலே உரைச்சுப் போடவும். கை கண்டது.

அத்தி பிஞ்சு நெல்லுமாய இடித்த நெல்லரிசியை ஊறப் போட்டு மாவிடித்து இரண்டும் ஒன்றாய்க் கலந்து பிசிச்ச மோரிலே குழப்பி போடவே தீரும். கை கண்டது.

நாசியில் கட்டு மருந்து:-

தழுதாழை இலை விழுதியிலை, குருண்டம் வேர்ப் பட்டை இடித்து மோரிலாவது காடி

துளசி சமூலமும் வேரில்லாத கொத்தான் சமூலமும் உள்ளி, வசம்பு, சுக்கு மிளகு அரைத்து காடியிலாவது மோரிலாவது போடத் தீரும்.

யிலாவது போட தீரும்.

முன்ருக் கிழுவைப் பட்டையை இடித்து காடியிலாவது பாலிலாவது போடத் தீரும்.

மிளகு, சீரகம் எடுத்து அரைத்து வெந்நீரில் கரைத்து போடவே தீரும். சீந்தில் ...டு சமூலமும் ஆ...வேளை சமூலம், நரிஞ்சில் பட்டை, கழக்கொடி சமூலமம் திருகுக்கு ...ந் கொருந் ...கை கொண்டு வந்து எல்லாந் அவைத்து கருக்காய் கூட சிறு நீர் குறனி வார்த்து பிழிந்து வடியிட்டு சிறு ஒன்றாக எரியிட்டு காய்ச்சி உப்பாக விளைந்த உடனே எடுத்து அந்த உப்பில் உத்தம நன்சோ மத்திச்சு அந்த நோவுக்கு நாவிலே விரா கனெடை மூன்று நாள் ஆறு பொழுது நாவிலே தேய்க்க விசமி நிற்கும். இது காட்டி கை கண்டது.

<u>தொண்டை வர்ளை விப்புருத்திக்கு மருந்து</u>:-

கொள்ளையிலையை தலைக்குப் பொய் வறையாக வைத்து ஆறு நாளைக்கு கட்டவும். நன்னரி வேரை அரைத்து ஒரு கொட்டைப் பாக்கு மாத்திரம் பசும் பாலிலே கொடுக்க இந்தப் படி மூன்று நாளாறு பொழுது கொடுக்கவும். வெள்ளை சா... வேளை வேரும் நாய் வேளை வேரும் இடித்து வஸ்திர காயம் பண்ணி மூன்று நாளைக்கு பசுவின் பாலிலே கல்லமே கொடுக்கவும். ரத்தமும் சீழும் வலத்துடனே பிரிந்து போம். இதுக்கு பத்தியம் வெந்நீருஞ் சோறும். கை கண்டது.

<u>குமர கண்ட வலிக்கு</u>:-

. ஏப்பை மேனிச் சாறும் ஒருக்களை வெள்ளைப் பூண்டும் நசுக்கி மாறு தன் மாறு மூக்கும் நசியம் விடவும். வியாதி தீரும். கை கண்டது. கௌரி பாஷாணம் ஒன்று மணி மாதிரி ஊமத்தங்காயில் வைத்து புத்து மண் சீலை மண் செய்து நாயுருவி விற கில் சுட்டு எடுத்து இந்த படி ஊசுல்*குளவி*கூ சுட்டு முத்து*கல்லி* எடுத்து பேய்க் கருப்பன் சாறு விட்டு மெய் அழுக்கும் கூட்டி அரைத்து உருண்டை பண்ணி இடவும் பிரியாது. கை கண்டது. இதுக்கு மாத்து தயிரும் சோறும்.

<u>கண்ட மாலைக்கு</u>:-.

<u>அல்வ கெந்தாதி தூரணம்</u>:-

பாவட்டம் வேர், முன்னை வேர், குமளம் வேர் இது மூன்றும் அரைத்து பசுவின் பாலிலே குடிக்கவும். ஏலிப் பருத்தி வேர் பிடுங்கி வந்து வெங்காயமும், வசம்பும், அமுக்கிரா பலம்.உய,அரக்கு பலம். திப்பிலி பலம். மிளகு பலம். ஊசிக் காந்தம் விராகனெடை. நாகேசரம் பலம்.உ, சீந்தில் கொடி பலம். , கோஷ்டம் பலம் .க, அரத்தை பலம்.உ, சித்திர மூலம் பலம்.உ, நெல்லிப் பருப்பு பலம்.உ, சீரகம் பலம்.உ, தேவதாரி கட்டை பலம்.க, கடுகுரோகணி பலம். , கருஞ்சீரகம் பலம்.க, இது யோகம்.

<u>பூதிக் கர தயிலம்</u>.

ஆயில் பட்டை பலம். அரத்தை பலம். சித்தாமுட்டி பலம்.ரு, பேராமுட்டி பலம்.ரு, வில்வ வேர் பலம்.ரு, தழுதாழை பலம்.ரு, பாதிரி வேர் பலம்.ரு, கண்டங் கத்திரி வேர் பலம்.ரு, சிறு தெக்கி பலம்.ரு, நொச்சில் பலம்.ரு, கருநொச்சில் பலம்.ரு, பெருங்காயம் பலம். கிரந்தி காரம் பலம்.க, சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.க, காட்டாமணக்கம் வேர் பலம்.ரு, கோஷ்டம் பலம்.க

சாம்பிராணி பலம். மஞ்சள் பலம்.ச, பால் சேர் பலம்.ச, எலுமிச்சம் பழம் ப எண்ணெ சேர் பொன்னாங்கண்ணி சாறு.உ, கரிசலாங் கண்ணி சாறு, நொச்சில் சாறு, பிரமிச் சாறு, துளசிச் சாறு இது யோக வகை.

நாசிகா பரணம்.

பொன்னரி தாரம் பலம்.வ, ரு கன்னும் கல்லில் சுத்தி பண்ணி உப்பை மேனி சாறு, வேளை சாறு, பொடுதலை சாறு, கொட்டைக் கிரந்தி சாறு, திருக்கு ஐந்து நாழி அரைத்து நாசிகா பரணம் பண்ண சில தோஷம் சிரோபாரம், சுர தோஷம் இத்தனையும் மாறும். கை கண்டது.

அப்பிரகம் பலம்.வ, கடுக்காய் பலம். , தானிக்காய் பலம், சுக்கு பலம். திப்பிலி பலம். மிளகு பலம். , நெல்லிப் பருப்பு பலம். கோஷ்டம் பலம். , அமுக்கிரா பலம்.க, சீந்தில் பலம்.க, நிலப்பூசணி பலம்.ச, நிலம்பனை கிழங்கு பலம் கொட்டைக் கிரந்தை பலம்.க, நெருஞ்சில் காய் பலம்.க, வாலுழுவைக் கிழங்கு பலம்.ய, தண்ணி முட்டான் கிழங்கு பலம். காச்சுருவ விரை பலம். , நீர்முள்ளி விரை பலம். சாதிக்காய் பலம்.உ, சாதிப் பத்திரி பலம்.வ, லவங்கம் பலம்.வ, லவங்கப் பட்டை பலம்.வ, லவங்கம் பத்திரி பலம்.வ, முந்திரி பழம் பலம்.ச, பேரீச்சம் பழம் பலம்.உ, கசகசா பலம். , சாரைப் பருப்பு பலம். , சர்க்கரை சேர்.உ, கஞ்சா பலம் உ, எள்ளு பலம்.க, உந்து பலம்.க, கோரைக் கிழங்கு பலம்.க, சித்தாமுட்டி பலம்.க, கச்சோரம் பலம்.க, நெத்ப்பு பலம்.வ, கற்காட சிங்கி பலம்.வ, சிறு தேக்கு பலம்.வ, ஏலம் பலம். , சீரகம் பலம். , கல்கண்டு பலம்.க, நெய் சேர்.க, தேன் சேர்.க, இது யோக வகை

அர்த்த நாரீசுபர ரசம்.

நாபி விராகனெடை.உ, கெந்தகம் விராகனெடை.உ, ரசம் விராகனெடை.உ, சாதிலிங்கம் விராகனெடை.உ, இது வெல்லாம் நொச்சில் சாற்றுடன் ஒரு நாளரைக்கவும். மணத்தக்காளி சாற்றில் ஒரு நாளரைக்கவும். செருப்படைச் சாற்றில் ஒரு நாளரைக்கவும். அரைத்துக் குன்று மணி அளவு குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி ஒரு குளிகை வெல்லத்தில் கொடுக்கவும். பசுவின் பாலில் ஒரு குளிகை கொடுக்கவும். ஒரு புறம் காயும். சுரம் விட வேண்டினால் ஒரு குளிகை வெந்நீரில் கொடுக்கவும். இதற்கு பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். இதற்கு பாலும் சோறும்.

இந்த மருந்துக்கு- நாபிக்கு சுத்தி கோமூத்திரம், கெந்தகம், சுத்தி பாலில் பத்திர தாளக்கம் சுத்தி சுண்ணாம்புக் கல், மருக்கொழுந்து சுத்தி அன்றும்பு, நேர்வாளம் சுத்தி அவரைச் சாறு, ரசம் சுத்தி மஞ்சள் பொடி, செட்டறை செங்கல் பொடி, ஒரு நாழிகை தேய்க்கவும். சாதிலிங்கம் சுத்தி முலைப் பாலில் ஒரு நாழிகை ஊறப் போடவும். இது சுத்தி வகை இந்தப் படி கட்டினால் அர்த்த நாரீசுபர ரசம்.

கெண்டாத்திரி சூரணம்.

இஞ்சி சாறு பலம்.மய, மேபுரி சர்க்கரை பலம்.மய, மிளகு பலம்.கதை திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.க, சாதிக்காய் பலம்.தெ, ஏலம் பலம்.தெ, சித்திர மூலம் பலம்.தெ, லவங்கம் பலம்.க, இஞ்சி மேல் புறனி சீவி குறுக நறுக்கி பசுவின் நெய்யில் வறுத்து இது களெல்லாம் கூட இடித்து சர்க்கரையுங் கூட்டி கலந்து கொள்ள

கொள்ளவும். தேன் நெய் வெந்நீரில் கொள்ளவும். வியாதி தீரும்.

இருமலுக்கு.

பொன்னரி தாரமும் மனோசிலை, மயில் துத்தம், மிளகு இது நாலும் எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்த துணியில் திரியாக திரிச்சு புகை பிடிக்கவும் இருமல் தீரும்.

கெண்டா ஷுமல் லேகம்.

இஞ்சி பலம்.உள, நெல்லிக்காய் சாறு குணி, ரெண்டுங் கலந்து காச்ச இது க்கு கடை திரவியம்: தாளிச பத்திரி பலம்.தெ, மிளகு பலம்.தெ, சீரகம் பலம்.தெ கருஞ்சீரகம் பலம்.தெ, இந்துப்பு பலம்.தெ, சித்திர மூலம் பலம்.தெ, ஏலம் பலம் தெ, லவுங்கப் பட்டை பலம்.தெ, லவுங்கப் பத்திரி பலம்.தெ, சிறு நாலல் பூ பலம் தெ, முகை நீர் பலம்.தெ, தேவதாருகம் பலம்.தெ; திப்பிலி மூலம் பலம்.தெ, சடா மாஞ்சிஷ்டம் பலம்.தெ, செவியம் பலம்.தெ, சுக்கு பலம்.தெ, கொத்தமல்லி பலம்.தெ, முந்திரி பலம்.தெ; திப்பிலி பலம்.தெ, அதிமதுரம் பலம்.தெ, லவுங்கம் பலம்.தெ, சாதிக்காய் பலம்.தெ, இது வெல்லாம் சூரணம் பண்ணி பசுவின் நெய் சேர்.க, விட்டு பதத்திலிறக்கி உள்ளங் கை கொண்டது கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி ஊமை வாதம் க்ஷயரோகம், ஷுமல் பித்தம், மந்தாக்கினி, ருத்திர வாய்வு, வாத சேஷ்டப்பம், பயித்திய குன்மம், மூர்ச்சை வாய்வு, காமாலை, பாண்டு விஷ தோஷம், விக்கிந்தி மேகம்.உஷ்ண, மூல வாய்வு இது முதலான நோய்வு தீரும். கை கண்டது.

நாசிகா பறனம்.

காட்டெரு முட்டை சுட்டு வஸ்திர காயம் பண்ணி எருக்கம் பால் விட்டு ஏகமாய் கலந்து நிழலிலுலர்த்தி நாசியில் ஏறப் பார்க்கவும். நாசிகா பறனம்.

ஆனந்த வயிரவர்

சாதிலிங்கம் நாபி வெங்காரம், மிளகு, திப்பிலி இந்த வகை ஐந்தும் சமபாகமாக கட்டி இதுக்கு சரி சுத்தி பண்ணின நேர்வாளம் கட்டி எலுமிச்சம் பழசா விட்டு இரண்டு சாமம் அரைத்து சிறு குன்று மணி அளவு குளிகை பண்ணி நிழலுலர்த்தி இஞ்சி சாத்திலிடவும். துளசிப் பாலிலிடவும். சுக்கு கஷாயத்திலிடவும். சீத சுரம், தோஷ சுரம், எந்த தோஷமும் விடும்.

புரவலக்கு.

மரவட்டை உலர்ந்தது கொண்டு வந்து நன்றாய் பொடி பண்ணி புண்ணில் பொடி போட்டு அதின் மேலே வெள்ளை சீலை மூன்று மடிப்பாய் மடிச்சு மேலே போட்டு கட்டவும். மத்த நாள் அவிழ்த்துப் பார்க்கவும். புழு விழும். அந்தப் பொடி நல்லெண்ணெயில் போட்டு வசம்பு வெள்ளுள்ளி போட்டு சூரிய புடம் வைத்து புண்ணில் பாகை சீலை போடவும். தீரும்.

சகல பிரிசத்துக்குபடுவலக்கு.

மைறெள்ளெண்ணெ வெள்ளுள்ளி பூண்டு ஒன்று, மிளகு இருபது, சுக்கு ஒன்று, மஞ்சள் ஒன்று, வசம்பு குன்றியளவு, நல்ல வேளை வேர் ரெண்டும் சூரிய புடம் ஒரு நாள் வைக்கவும். பத்தியம் உப்பு அரைவாசி தவரம்பருப்பு, மிளகு நீர் அரைக்கீரை முருங்கைக் காய் இலை இது பத்தியம். வாழைப் பழம் புண்ணில் வைத்து கட்டவும். மத்த நாள் கொள் கா வேளை இடித்த கட்டி சிறுநீர் வார்த்து ஈரம் உலராமல் வார்க்கவும்.

அரபது நாழிகையில் பார்க்கவும் புழு விழும்.

ஈயம் எட்டிக் கொட்டை, சிவனார் கிழங்கு கூட விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்து இடவும்.

<u>கண்ணுக்கு பூவுக்கு ரணத்துக்கு:</u>

செங்கொட்டை சுட்டு குப்பிலில தரிசு நாலிலொன்று கூட்டி அரைத்து இந்தப் பொடி கண் புழு வெட்டு தீரும். காசம் பூ தீரும்.

<u>புழுக் கடிக்கு:-</u>

எண்ணெயிலரைத்து இடவும். எருக்கம் பால் மெல்லிசு சீலையிலாட்டி எருமை வெண்ணெயில் குழைத்து கலப்புஞ் செய்து கை சிமிழிலடைத்து கண்ணிலிட பிரிஞ்ச கண் முதலானதும் தீரும். கடுக்காய் இடித்துக் கொட்டையுடன் கரிவேப்பிலை கூட்டி நாழி தண்ணீரில் காய்ச்சி உரியாக்கி கோது எடுத்துப் போட்டு காச்சத் தைலமாம். இந்த தயிலம் கண்ணோடு புழு வெட்டு நேத்திர வாய்வு நீர் முட்டுதல் சிரப்பு வலிப்பு, இது முதலான பல குத்தமும் தீரும்.

<u>மேக நாதகுளிகை.</u>

சாதிலிங்கம், வெண்காரம், சுக்கு, மிளகு, சயிந்திலவணம், சிவதை வேர், வசம்பு, காட்டாமணக்சம் வேர், பெருங்காயம், வாய் விளங்கம் வகைக்கு விராகனெடை .க, இதுக்கு சரி நேர்வாளங் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து நாலு சாம மரைச்சு இரண்டு குண்டு மணி பிரமாணம் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு இந்தக் குளிகைக்கு தீரும் வியாதி பஞ்ச குன்மம், சேஷ்பமும் பாண்டு காமாலையும் குசிர அசிரணமும் எண்பத்து நாலு வாதமும் அசமாம். கை கண்டது.

<u>நீலகண்ட ராமரசம்.</u>

ரசம், கெந்தகம், லோகம், நாபி, சித்திர மூல வேர், பத்திர தாளக்கம் வாய் விளங்கம் ரோகணி முத்தங் காசு, ஏலரிசி, கிறந்திக் காரம், நாகசநாகேசரம், திரிகடுகு, திரிபாலை, நேர்வாளம், தாமரை பக்கம் இந்த யிருபதும் சரியாய் கூட்டி இதுக்கு ரெட்டிப்பு கூட்டி நன்றாய் அரைக்கவும். இது கடலைப் பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்கத் தீரும் வியாதி காசம், சுவாசம், சதய குன்மம், பிறமியம், விஷ சுரம், விஷன தோஷமும், சிலேஷ்ம நோவு, பாண்டுரோகம், மூத்திர கிரிச்சு, வாத ரோகம், அஷ்டரோகம், மந்தாக்கினி, பீனிச ரோகம், அதிசாரம், வெள்ளை குஷ்டம் சேஷ்மம், முக சன்னி, காந்து சுடலை, விக்கல், முறத்த வாதம், உமாதம், அந்திர வாதம், சன்னி பாதம் இது முதல் எந்த ரோகமும் தீரும். இதுக்கு மிஞ்சினது இல்லை.

அகஸ்தியர் வாகடம்: திருஷ்டி சகாயம் உண்டானதாகவும்-தேவி சகாயம்.

<u>ஆனந்த பயிரவம்.</u>

சாதிலிங்கம், அரிதாரம் நவியும் தரித்த திப்பிலி காரம் சமனேறு பீதயிந்த தோரகம் புல் சாறுடன் மிக வரைத்து மூகென உண்டை கொள்ள போதிலந்த நொச்சில் சாசியும் பொருந்த கோடை கரசனுங் கண்ணியும் காந்தையு மதை யிட்டு சாத்திலே கருகு ரெண்டு தண்ணியிலே நீதி யந்த சுரம் சன்னி பாதமும் நீங்கி குலைந்து விட்டோடுவது உண்மையே.

ஆதி ஆனந்த பயிரவம்.

ஆதி ஆனந்த பயிரவம்.

நாபி, ரசம், மனோசிலை, கெந்தகம், சாதிலிங்கம், வெண்காரம் சமனொரு நிதில் நீர் பழ சாத்திலரைத்திட ஆக மிந்தனை அவ்வுரை செய்திடும். கூவுகின்ற சன்னி சன்னி வாதமும் தனக்கிரு கோலமான சடங் கத்திலிட்டிடு. மேல, கிச்ச குளிர் யிஞ்சி சாத்திடும் மிக்க சன்னி முலைப் பாலில் தேத்திடு ஆவி தன்னை தனரும்மல் காத்திடும் ஆதி ஆனந்தனட விதே.

பிரளைய கால வயிரவம்.

பொன்னு மத்தை வித்து, பூசினி, வசம்பு, சுக்கு தம்மொத்த காரம் நாபி தம்பல புருதன் நாரி நிம்பத் தமபழ சாத்தில் நேரரைத்து உருண்டை பண்ண உருந்தென பருமன் சேர்த்து உரைத்திடும் சோத்து நீரில் குளிர் சுரம் தண்ணீர் தாகம் குலை முலைந் தோடு மென்னே.

சிரனி ஆனந்த வயிரவம்.

நாபிலிங்கம், திரிகடுகு, நல்ல விடையம் சமன் சுட்டநீதி நிச் பழ சாத்திலரை நேரே வயத்தளவுண்டை செய்து யிஞ்சி சாத்தில் இரண்டு உருண்டை யிடவே தாப குளிர் சுரம் போம். பித்த சுரத்துக்கொரு உருண்டை பேணியிடவே முலைப் பாலில் உடம்பு கடுத்தால் இரண்டு உருண்டை உரைத்தே முலைப் பால் தன்னிலிடு. சிரனியான பெருக்கு கிளர்ந்த விடையம் சாதிக்காய் தயிர், தேன் தண்ணீர் கொள்வோர்க்கு சுரங்கு சிரனி தான் போமே.

பிரளைய கால பயிரவம்.

காந்தம், மிரதம், மரிதாரம், கடுரோகனி, நாபிட்டு லைசவனே நிச் பழ சாத்துடனே அரைத்து கடுகு போலே உருண்டை பண்ணி யிடு குமரி சா தன்னில் யில்லா திருக்கில் முலைப் பாலில் வியந்து வெச்சன வச்சிடவே விடாத சுரமும் விட்டிடுமே நாளு நாளிலே விடும். அழகிய சொக்கன் சோதி சுட முக்கனி முகந்தகம் காய திப்பிலி ரோகனி அய்ந்துடன் பாதி க்சர் நேர் பாளங் கூட்டியே பாகல் பச்சிலை சாத்திலரைத் திவை நிழலில் உலர்த்தியே மேதியாக யிடு சுர மாளவே பேர்கள் தெரோகம் அழகிய சொக்கன்.

பிரதாப விர்ப்க்கு பரன்.

கத்தாழை கோமயம் புளியிலைச் சாத்தில் சுத்தி பண்ணிய நேர்வாளங் கடுரோகனி ரசம், கெந்தகம், மிளகு பழம், வெண்காரம், சவன் இதற்கு சவன் பஞ்சதாரை கூட்டி மீன் பிச்சில் ஒருதல் முதல் மீன் பிச்சில் மூன்று நாளரைத்து சிமிழில் வைத்து சுரங்களுக்கு இஞ்சி சாத்தில் சுக்கு சாத்தில் மூன்று நாள் இடவும். அப்படன் மாத்திரை யிட்ட பின்பு காச்ச தண்ணீர் மிக ஆத்தி கொடுக்கவும். பத்தியம் மோரும் சோறும் இடவும். இதற்கு பித்த சுரம், உஷ்ண சுரம், சேத்தும சுரம் இவைகள் தீரும்.

திருமூர்த்தியார் ரசம்.

சாதிலிங்கம், அப்பிரகம், காரீய பற்பம் சமனாக கூட்டி நாவல் பட்டை சாறு விட்டரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி சர்க்கரை அநுபானத்திலிடவும். இதற்கு தாப சுரம் விடும். சீதளமாம். பத்தியம் மோரும் சோறும், கறி சிறு வழுதலைக் காய் கத்தரிக்காய் ஆகும். தாகம் உடலை உடனே நீக்கும்.

சுக்கிரி குமாரன்.

ரசம் இரு கழஞ்சு, தாம்பிர பற்பம் இரு கழஞ்சு, நாபி நாற் கழஞ்சு, திரி கடுகு பனிரெண்டு கழஞ்சு, திரி பலம் பனிரெண்டு கழஞ்சு இவை யெல்லாம் அம்மியிலிட்டு நொச்சில் சாறு கையாந்தகரை சாறு சுண்டங் கத்திரி சாறு ஒவ்வொரு சாற்றில் ஒரு நாளரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி கொடா சாலை அநுபானத் திலிடவும் சுரம் போம்.

அர்த்த நாரீசுரம்.

ரசம், அப்பிரகம், தங்க நாகம், வெங்காரம், அரிதாரம், சாதிலிங்கம், தாம்பிர பற்பம், சல்நார், ஒரு திங்குப் பாலை வேர், பேரீச்சம் பழம் தன்னில் சமன் கூட்டி வாத்தரைத்து பொடியாக்கி காலமே கால் பணவிடை வெந்நீரில் இட்டால் வலப்புறம் சுரம் விடும். குளிர்ந்ததண்ணீரிலிட்டால் இடப்புறம் சுரம் விடும். எல்லா சுரமுந் தீரும். பத்தியம் தகரை சாறு, முருங்கை சாறு, நொய் அரிசி கஞ்சி கூழும்.

நமாந்திரி காசம்.

ரசம் கழஞ்சு, கெந்தகம், இரு கழஞ்சு, அரிதாரம் முக்கழஞ்சு நேர்வாளம், நாற் கழஞ்சு இவை கட்டாஞ்சி வேர் காசயத்தில் மூன்று நாளரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி சர்க்கரை வெந்நீரில் ஒரு குளிகை கொடுக்க வாத பித்த சேத்தும சுரம் ஒரு சாமத்தில் விடும் பத்தியம் நொய் அரிசிக் கஞ்சியாம்.

ரசம் என் கழஞ்சு, நாபி அரிதாரம், கெந்தகம், வெங்காரம், நேர் வாயம் ஒரோன்று ஆறு கழஞ்சு இவை யெல்லாம் நின்னத் தருமலாக பற்பம் முத்தோன்று எல்லாம் கூட்டி திரிபாலை விரையும் கொடி வேலியும் கசாயமிட்டு பக்குவத்தில் இறக்கி அந்த நீர் வார்த்தரைத்து பொடியாக்கிகுன்றியிடை குளிகை பண்ணி இளநீர் சர்க்கரை இந்த அநுபானத்திலிட சர்வ சுரமும் சன்னியும் தீரும்.

சன்னி சுரத்துக்கு கலிக்கம்.

சுக்குடன் திப்பிலி தய்ய கெந்தகம் ஒக்க ரேகனி சேந்த மிளகுடன், தக்க நீர் பழசாற்றுடன் நேரரை அக்கு முண்ட ஆனந்தன் அஞ்சனம் இது எல்லா சுரத்துக்குமாம்.

நேர்வாளம் இருபது, மிளகு முப்பது இந்திர கொப்பூழ் நாலு இவை மூன்றும் கூட்டுக் கிடா பிச்சிலும் இஞ்சி சாற்றிலும் எலுமிச்சம் பழச் சாற்றிலும் அரைத்து சிமிழில் வைத்து கண்ணிலிட இதக்கு சன்னி சுரம், பிசாசு போம்.

பிரதாப லிங்கேசு பரன்.

ரசம் கழஞ்சு, மிளகு கழஞ்சு, சங்கு பற்பம் இரு கழஞ்சு, லோக பற்பம், முக்கழஞ்சு, நாபி நாற் கழஞ்சு, கெந்தகம் ஆறு கழஞ்சு, அப்பிரக செந்தூரம் என் கழஞ்சு, காட்டெருமுட்டை பற்பம் என் கழஞ்சு இவை யெல்லாம் சுக்கு கசாயத்தில் அரைத்து குன்றி பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி சகல சுரத்துக்கும் சுக்கு கசாயத்திலிடவும். உரி சன்னிக்கு உள் முருங்கை சாற்றிலிடவும். பெத்த சன்னிக்கு இஞ்சி சாற்றில், சுக்கு சாற்றிலிடவும். கொள்ளுக் கசாயத்திலிடவும். அதிசாரத்துக்கு அதிவிடையம், சாதிக்காய், காசுக் கட்டியிலிடவும்.

தாப சுரத்துக்கு

ரசம் கழஞ்சு, கெந்தகம் கழஞ்சு, நேர்வாளம் இரு கழஞ்சு அப்பிரகம் கழஞ்சு இவை நாலும் வெத்திலை சாறு வார்த்தரைத்து குன்றி பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி முலைப் பாலிலிடவும். பத்தியம் மோரும் சோறும் இடவும்.

ராமகாம ரேலா.

வெள்ளைப் பாசாணம் ரசம், அரிதாரம், வெண்காரம், திரிகடுகு இவை சமன் கூட்டி இதுக்கு சமன் நேர்வாளம் சுத்தி பண்ணிக் கூட்டி முருக்கிலை சாத்திலரைத்து கடலை பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி இஞ்சி சாத்திலிடவும். பத்தியம் பொரிக்கஞ்சி குடிக்கவும். குளிர் வாதம் விடும்.

களமென மிடறை நொந்து கதறிட வயிற்றை நொந்து மிடற் பட உடம்பு வத்தி யிறங்கிய தோஷமாகில் வடிவுடன் வாத சேத்தும மென்று வயித்தனர் கண்டு தானே.

கிறுகிறு என்று யிங்கே செவியுங் கண் தலையுஞ் சுத்தி வெகு வெகு விரலிலேட்டே வேண்டிய மயக்கங் காட்டில் படியென சத்தி தோணில் பித்தத்தின் கூறுதானே.

இதற்கு மருந்து :-

நிக்கம் தனியே விளாவிலை சுத்த மல்லிகை சுட்டிடத் தீருமே. நில வெள்ளரி சிக்கமுனிரோடு கோலமான குமம் பயத்தங் கஞ்சியில் ஏல் மேற் பொடி யிட்டுக் குடித் திட சாலவந்தனை சத்தியுஞ் சத்தியுஞ் சாயுமே. ஏலம், வெத்திலையில் காம்பு, எலுமிச் சம் பழத்து வித்து தோல் போக்கி நா றி குளித்து வெந்நீர் கொள்டு அருந்திட கஞ்சி பின்பு அளித்து சத்தி கெட்டு வெடிந்திடு விடு விடென்று விடை கொண்டேகுமே.

செம்பொத்த மேனி தன்னிட முலையிலுள் உம் பொர்த்து நெய்யில் குழைத்து முழுங் கிட வெம் பொத்த மேனியில் வத்திடு விக்கலார் திக்கிடப் போமே-திசை திசை ஓடியே

சந்தனத்தோடு சர்க்கரை, நெல்ப் பொரி, அஞ்சனத்தொடு அமந்த விலாமிச்சை வெந்த நீரில் குழப்பி செயி உண்டிட நெஞ்சில் நில்லாது நிறைந்த ஒக்காளமே.

நவாச்சாரம் கழஞ்சு, கரிசலுங் கன்னிக் கொழுந்தொரு கழஞ்சு, அரைத்து முழுங்க ஒக்காளமும் விக்கல் தீரும்.

வாழை சருகு ஒரு சட்டியிலிட்டு சுட்டு அதிலே தண்ணீர் நாழி விட்டு ஊறின பிறகு வடித்து பனை வெல்லம் பாக்களவு கரைத்து கொடுக்க வெள்ளோக்காளமும், சத்தியுந் தீரும்.

பூசினை இலையும், பூவும் பொருந்திடு சுக்குத் தேறும் தாறனி மாதர் பாளம் வாறனியும் மலர்க் குழலாயி மறவாமல் அமுக்கிரு வேரும் சாறு வேளை வேரும் பொடி செய்து தேனிலிட விக்கல் தீரும்.

கொடிவேலி வேரு கழஞ்சு, மருவாதியும் ஒரு புண்டு வெள்ள வெங்காயம் சுண்ணாம்பு தண்ணீர் வார்த்தரைத்து நெய்யில் குழப்பி நக்க விக்கல் சத்தி மாறும்.

மயிலிற் கொம்பு விராகனெடை ஒரு பலம் நெய்யில் கறண்டியிலிட்டு உருக காய்ச்சி மூன்று வேளை நக்க விக்கல் ஒக்காளம் தீரும். இது கை கண்டது.

அசீரண வாந்தி:-

சோறு செரிக்கிற நேரம் எடுக்கும். அதுக்கு எலுமிச்சங் காயளவு எருமை வெண்ணெயில் கழஞ்சு, புது விக்கலம் மரைத்து கெசம் சீரா மூன்று வில்வைக் கனி பிஞ்சு சுழந்த சுட்டி அரைத்து வெண்ணெயில் முழுங்க சத்தி மாறும்.

மல்லொத்த தோழி மார்பிலும் காலிலும் மரம் கல்லெர்த்த புண்கள் கழகன் கணைந் திடில் நெல்லித் தன் சு இய்யின் நாரை தான் சுடு பல்லடை பன்னி வாசட்டை கட்டுமே.

ரசனத்துக்கு.

குதிரை யவள் சிறுகுறிஞ்சி மஞ்சள் கொறுவிய நத்த ஒரு கிழமையிலிட குரி மேக வல்லன் அதி வருமியை நல்லெண்ணெய் நாழி அரைத்தவனள் கலந்து பிடுவிறகில் உதிரம் விழும். ஒழிய நீர் புண்ணோகே ளெல்லாம் ஒரு கிழமை யிட நீர் போல் உலர்ந்து போமே.

விக்கல் ரணத்துக்கு.

விக்கலுக்கு திண்டாடவே நசியம்:-

செய் நாக்கினை சுட்டு நாத மிக்குளம் விக்கு திப்பிலி சுத்த மதுநறும் பா த்தி நன்மூலை பாலுடன் கூட்டியே மூக்கில் வார்க்க முறிந்திடும் விக்கலே. ஈர வெங்காயம் நறுக்கி மூக்கில் வார்க்க விக்கல் தீரும்.

முருகன் கொடி புதல்வன் முத நடவுடன் தருவுள் பேருஞ்சி ஆலின் சாரம் மருவினிய நற் காடியும் கலந்து நல்லெண்ணெயில் கொடுத்தால் எக்காலும் புண் ஆறக்கிதம்

முத்த சாறணை முறு மஞ்சள் இந்துப்பு அத்தை யகவ அரைத்திடு தேனிலே உத்தப பாயப் பொருதொரு புண்களும் சத்து பண்ணும் வித்திடு ஆமே,

செங்கீரை தண்டு சிறுக நறுக்கி கருக்கி வசந்து சுள்ளும்பில் உழைத்து கழலைக்கு பூசி காரியத் தகடு வைத்துக் கட்ட கரையும். சாக இந்துப்பு, சுக்கு அரைத்து பூச கழலை கரையும்.

அரையாப்பு:-

கருதைத் தும்பை எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து பூச அரையாப்பு விக்கந் தீரும். எருக்கம் பாலில் மஞ்சள் உரைத்துப் பூச தீரும். கொடி வேலி வேர் ஒரு பச்சைப் பாக்களவு அதில் பாதி வடி சுண்ணம்பு கலந்து பொட்டணம் கட்டி சட்டியில் நல்லெண்ணெய் வார்த்துக் காய வைத்து இதமாகக் கட்டி மேல் ஒத்த வீக்க நீரும்.

ரசம் ஒரு கழஞ்சு, ஊமத்தை சாத்தில் முறிச்சு மூன்று நாள் பூச வீக்கந் தீரும். இதுக்கு எண்ணெயாக்க:-

நல்லெண்ணெய் உரி., வெள்ளை குங்கிலியம் நாற்கழஞ்சு, கெந்தகம் நாற் கழஞ்சு, மிளகு இரு கழஞ்சு கூட்டி பதத்தில் எரித்து வெள்ளை சீலை தோய்த்து தீ போட புண்ணும் சீலையும் தவும் வஞ்சியும் மாறும்.

சந்தனாதி, கை எரிவு, கண் எரிவு, பித்தம்.

ஆனசந்தனம், அதிமதுரம், அனியார் முத்தம் காரி சோபம், கோஷ்டம், செங்கழுநீர், கிழங்கும், கடும், முந்திரி பேரிஞ்சி பிரப்பைப்பூ, விலாமிச்சம், நெல்லிப் பருப்பு இலையுடனே பொடி செய்து

சர்க்கரை சரி கூட்டி புதிய கலசத்தில் வைத்த பின்பு காலத்தாலே கழஞ்சு பொடி கழுநீருடனே கொள்வோர்க்கு கை கால் எரிவு, கண்ணெரிவு, கலந்த பித்தம் தனை போக்கும். தலை சுழல், பிறமியம் பித்தம் போம். சந்ததுதி கொள்வோர்க்கே.

பஞ்ச தாரை நாற்கழஞ்சு, பருத்த மதூரம் நாற் கழஞ்சு இந்த திப்பிலி நாற் கழஞ்சு ஏலா சீரகம், ஒரு கழஞ்சு ஐந்தங் கூட்டி பொடியாக்கி ஆவின் பாலில் அருந்த வீராய். மிஞ்சலந்த தலைவலிகள் வெள்ளோக்காளம் உள் நடுக்கல் ஐந்த பித்தம், நாற் பதம் போம். அடவி தேடி அடங்கிடுமே.

உமாதம் பித்தம்.

ஐத்தம் கழஞ்சு, அருசி இரு கழஞ்சு இரண்டும் பாகலிலைச் சார வார்த்தரைத்த சீலையில் பிடித்த உலர வைத்த அதில் இரு விரல் சீலை கிழிச்சு பிளிச்சக் காடியிலாகுதல் எலுமிச்சம் பழ சாத்திலாகுதல் பசுவின் பாலிலாகுதல் பிசைந்த கொடுக்க எடுக்கும். பத்தியம் பயத்தங் கஞ்சி சாய்ச்சி ஆத்திக் கொடுக்க பொரிக் கஞ்சி கொடுக்க மாறும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பிறகு கடுக்காய் பருப்பு கழஞ்சு வெள்ளைக் கார்க்குளன் விரை கழஞ்சு, திப்பிலி கழஞ்சு இவை பாகிலைச் சார வார்த்தரைத்து ஒரு சாமமரைத்து கடலை பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்த தாமும் விழுது வாட்டிப் பிழிந்து இவை பாகிலைச் சார வார்த்து ஒரு சாமம் அரைத்த உழக்கு சாத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். இப்படி கால் மண்டலங் குடிக்கவும். இது கொடுக்கும் போது இரண்டு நேரமும் நூத்தொரு குடம் தண்ணீர் எலுமிச்சம் இட்டு சொரியவும். பின்பு இந்த மருந்து எட்டு நாள் எருமைத் தயிருடனே பேயன் பழம் எலுமிச்சம் பழச் சாறும் புளியும் பிசைந்து தலையிலே தப்பி ஆமணக்கு இலை போட்டுக் கட்டவும். மத்தளுள் தண்ணீர் சொரியவும் பின்பு சளி பிடிச்ச பின்பு பவந்தி பழமும் முலைப் பாலும் நசியம் பண்ணவும். சளி முறியுந் தனியும் நித்த மொருக்கால் நசியம் விடவும். பிறகு எலுமிச்சம் பழ சாத்திலே மிளகு ஊற வைத்து எட்டு நாள் வைத்த எடுத்த அந்த மிளகு எலுமிச்சம் பழ சாத்திலரைத்து கண்ணுக்கு அஞ்சனம் இடவும். பின்பு கத்தாழை சரகு உலத்திப் பொடி செய்து சீலை வடி கொண்டு அதக்குச் சரி சீனியும் ஒரு பலம் சீரகமும் பொரிச்சக் கூட்டவும். நித்தம் ஒரு கழஞ்சு கொள்ளவும். பசுவின் வெண்ணெயிலாகுதல் பாலிலாகுதல் கால் மண்டலம் கொடுக்க ***மீச்சீர்*தீர்*பெருக்*துசின்*காசி பத்தியம் பசுவின் பால் நெய் பொன்குங்கன்னி சிறு பயறு நீர் பெரும் பசிளிக்காய் இவையாம்.

தலைக்கு எண்ணெ.

நல்லெண்ணெ, நெய் பசுவின் பால் எலுமிச்சம் பழம், நாழி சார கழஞ்சு, திரு மஞ்சன திரவியம் எல்லா மரைத்த கலந்து கொதியிட்டு மெழுகு பதத்தில் வடித்த நித்தம் தேய்த்து எலுமிச்சம் பழம் சீயக்காயிட்டு முழுகவும்.

பெரு வியாதிக்கு.

காட்டு மன் சொறி சிரங்கு குலில் புளிப்பு கடுவிய சிவநூர் வேம்பு தின்றிடவே கள்ளிக் கொழுந்தும் பனை வெல்லம் கழி மாம்பழங் கராட்டுப் பால் வெள்ளிக்கிழமை நாளாக வியாதியின் படியே வெல்லீராய். அன்ன தன்ன பிடிமாவில் துவளப் பிசைந்து தின்பீராய் வெள்ளை குஷ்டம் இவை தான் போம். வேண்டுங்காலே விரும்பீரே.

வெள்ளை குஷ்டம்.

மடசாலை பட்டை ஆறு பலம் திப்பிலி மூப்பலம் நிலவேம்பு இரு பலம், திப்பி

மூலம் ஒரு பலம் இலை கூட்டி சூரணம் பண்ணி நித்தம் ஒரு கரண்டி பிரமாணம் தேனில் கொள்ளவும். இப்படி ஒரு மண்டலம் கொள்ளக் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.
பெரு வியாதி குஷ்டம் குணமாம்.

அம்மான் பச்சரிசி சமூலமும் எலுமிச்சங் காய் அளவு அரைத்து உள்ளுக்கு பசுவின் பாலில் கொடுக்கவும். இப்படி நித்தம் ஒரு மண்டலங் கொள்ளவும் குஷ்ட வியாதி குணமாம். உப்பு, புளி தவிர்க்கவும். பதினெட்டு குஷ்டமுந் தீரும். பத்தியம் பசுவின் பால், நெய் முருங்கைக் காயும் இலையும் கீரையுமாம். சித்தின்பம் தவிர்க்கவும்.

எழு வியாதிக்கு வியாதிக்கும் மோதிர வகை எண்ணை வழக்கிறது.

செங்கொடு வேலி பத்துக் கழஞ்சு, சிறந்த நாயுருவி சமூலமும் முத்திருக்கஞ் செடி சமூலமும் வெள் வள்ளத் திசு மூலமும் இலை ஒக்கக் கொண்டு அரைத்துக் கட்டி பிசைந்த நல்ல செம்புளுர் கழஞ்சு நசுக்கி வைத்து வட்ட ஓலைக்குள்ளே இந்த மருந்து பூசி திரி கட்டி ---திரை அறிந்து தூலாலத் செய்து உருகின பிறகு இந்த மருந்திலே முப்பது தரம் தோய்த்து தட்டி காய்ச்சி இதுக்கு சத்தாகம் பண்ணி வைத்த மனிதனுக்கு எண்ணை பண்ணுகிறதிலே சத்து இட்டு எரித்த நல்லெண்ணை ஒரு படிக்கு சாதிக்காய் பத்து மயிலடி குருந்தம் வேர், ஒரு அம்மானை அளவு மஞ்சிட்டி நாற் கழஞ்சு குங்கிலியம் நாற் கழஞ்சு திரும்பு ஏலம், அசமதாகம், அதிமதுரம் தேவதாரம் வெட்பாலை கடல் இஞ்சிப் பட்டை ஒரொன்று இது கழஞ்சு அரைத்து எண்ணையில் கலந்து பதத்தில் வடித்து நாளொன்றுக்கு ஆழாக்கு எண்ணை உள்ளே கொள்ளவும். இந்தப் பிரகாரம் வேண்டின எண்ணை குடிக்க வடிக்கவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். இதுக்கு தீரும் வியாதி பவித்திரம், சிலந்தி விப்புருதி பெரும் பாடு தீரும்.

சிலந்திக்கு எண்ணை பண்ணுகிறது.

நிலவுமிழும் வேர் அரைத்து எண்ணையில் எரித்து புண்ணுக்குப் போடவும்.

நசிர கண்ட மாலைக்கு:- கன்னருகே பிறக்கிற நாத்தி புண்ணுக்கு:-

சித்தா மணக்கெண்ணை உரி, ரசம் கழஞ்சு, வெள்ளைக் குங்கிலியம் கழஞ்சு, துத்தம் தூரிசு கழஞ்சு, வங்காளப் பச்சை கழஞ்சு, சவ்வாங்கம் புளிய மக்கா எலுமிச்சங் காய் அளவு கூட்டி அரைத்து எண்ணையில் குழப்பி சூரிய புடம் இட்டு புண்ணுக்கிடப் போம் நாள் சென்ற புண்ணுள்ள தெல்லாம் போம். எந்த வகை புண்ணுக்குமாம்.

அரையாப்பு விப்புருதிக் கட்டி கரைய:-

ஆகாச கெருடன் கிழங்கு என்ற நல்ல வெல்லமும் கடுகுரோகணியும் கூட்டி இடித்து அரைத்து குளிகை நித்தம் ஒரு பாக்களவு கொடுக்கவும். கருவேப்பிலையும் கடுகுரோகணியும் ஆட்டுப் பாலிலரைத்து வீக்கத்துக்கு பசவும். புண்ணுக்கு பசவும்.

உள்ளுக்கு கருவேல இலையாய் பேசாமல் இரண்டு கையிலும் பறித்து ஒரு கையிலே போட்டு ஒரு கையிலையை வெள்ளாட்டுப் பாலில் எலுமிச்சங் காய் அளவு அரைத்து குடிக்கவும். இப்படி பதினைந்து நாள் குடிக்க கட்டி கரைப்பு கரையும் குணமாம். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

பிளவை வீக்கத்துக்கு.

எருமைத் தயிர் சீலையில் கட்டி மத்த நாள் எடுத்து சூரிய சுண்ணாம்பு கூட்டிப் பூச கட்டி கரையும். புண்ணால் தயிரும் சோறும் மூன்று நாள் கட்டவும். பின்பு சூரிய பறிய கார்த்திகைக் கிழங்கு அரைத்து வைத்துக் கட்டக் கரையும்.

சிரங்கு சுரம் பிரபுத்த வித்திரம்.

புண் தீர எண்ணெய் ஆக்க மருந்து.

வெண்டைக் கொழுந்து வேலிப் பருத்திக் கொழுந்து விடத்தேரிக் கொழுந்து சுண்டைக் கொழுந்து ஐந்தும் அரைத்து எண்ணெயில் கொதிப்பிச்சு வைக்கச் சதை வளரும் தடவ.

கருக்கு பத்தாஉஷி இலை கருக்கி பொடி செய்து போடப் புண் தீரும். வெள்ளை யிண்டந் தழை அரைத்து நல்லெண்ணெயில் கொதிப்பித்து கட்ட எட்டு நாளிலே ஆறும். பிரண்டைக் கொழுந்து அரைத்து அடை பிடித்து புண் வாயில் வைத்து பிரண்டை இலையைப் போட்டு கட்டவும். வில்வ இலை ஒரு ஒரு சிரங்கைக்குள் தளை மெத்தனவே வெண்ணெயில் அரைத்துப் பூச சிறு சிரங்கு கழுதிய வண்ணம் மேல் பட்டம் சிவந்து இருப்பனவும் நாக ரோகம் மறவளையும் குசிரப்பு வங்க தலை புத்து வல்புடைய வாளை தக்கொன்ற மத்தும் தருதி கேள். சொறி உள்ள திவு தீரும்

பெரும் பில எலுமிச்சம் பழ சாறோட குழம்பு முலைப் பாலிலரைத்துப் பூச சிரங்கு சொறி தேமல், வங்கு கருதளையும் போம்.

மயிர் வெட்டு :-

அமுக்கிரு வேருடன் அலறி தாரும் பொன்னாவாரை முருசிலிலை கள்ளிச் சாறு மூன்று நாள் வெந்த எண்ணெ மேலில் பூச சிறு சிரங்கு, சொறி, தேமல் சிறனியும் விட்டுடனே தீருமன்னே.

ஆயில் பட்டை அரைத்து பூசி வைத்து சாடியில் கழுவிப் போட மயிர் முளைக்கும்

பலிந்திரத்துக்கு நசியம் :-

நில இலைப் பட்டையும், மருதம் பட்டையும் சமன் கட்டி உலர்த்திப் பொடி செய்து ஒரு பணவிடை பொடி எண்ணெயுடன் முறக்கி மூக்கிலும் நசியம் விடவும். குன்று மணி பருப்பும் பாஷாணமும் நல்லெண்ணெயில் குழப்பி எரித்து பூச புழு வெட்டுத் தீர்ந்து மயிர் முளைக்கும்.

பெண்டுகளுக்கு குன்ம வியாதிக்கு :-

இந்த வியாதின் குணம் :- தோளும், கழுத்தும் மேல் வயிறும் முதுகும் நொந்திருக்கும் சோறு செரியாமல் வாந்தி பண்ணும். சிறு நீரும் மலமும் திரிந்து விழும்.

வாதத்தின் குணம், பித்தத்தின் குன்மம் :- வயிறும் முகமும் எரியும். அருசி உண்டாம். சிறுநீரும் மலமும் கடுத்து விழும். உடல் வெதும்பி ஆகார மந்த நெஞ்செரிப்பு கண்கருசி நீரும் மஞ்சளாயிருக்கும். அறவும் நோவாயிருக்கும். சோற்றின் மேல் இச்சை யில்லாமலிருக்கும். உடல் இளைப்பு போலே இருக்கும்.

சன்னி குன்ம குணம் :- மூன்று குணம் உண்டாயிருக்கும். இரத்த குணம் குன்மம் வயிற்றில் ரத்த பந்தமாய் பிள்ளை பெற்றாருக்கு விழுகிறப் போலே விழும். பூ விலக்கமாயிருக்கும். உதிரம் போதப்படும். அவளுக்கு உதிரம் கரைந்து சத்துவம் கெடும். மத்தல செவியும் அப்போது வயத்தில் உதிரம் கட்டும் பட்டு பிள்ளை உண்டானப் போலே முகன் கறுத்து பால் பீறோடும். பன்னிரெண்டு மாதம் சென்றால் உடம்பு நொந்து உரம் போலே போகவுமாம் அல்லது குடல் போலே விழுந்து போகவுமாம். இப்ப குன்ம குணம் வியாதி குணம்.

அறியப்பட்ட பரியாரிகள் அறிந்து பரியாரம் பண்ணுகிறதுக்கு மருந்து :-

<u>அறியப்பட்ட பரியாரிகள் அறிந்த பரியாரம் பன்றுகிறதுக்கு மருந்து :-</u>

கருவேளைக் கிழங்கு நாழி, வெள்ளை வெங்காயம் நாழி, சத்தி சாறு, வேளை கிழங்கு நாழி, கருஞ்சீரகம் பலம்.க, சீரகம் பலம்.உ, ஈர வெங்காயம் பலம். நெய் ஐம்ச பழம். மிளகு பலம்.உ, இது வெல்லாம் பதத்தில் கடுகாக்கி சுட்டிக் கொள்ள மாறும். இதுக்கு குடி நீர் :- அரிஞ்சாரம் நாயுருவி நா விரையும் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி கால் மண்டலம் குடிக்க குன்மம் குணமாம்.

<u>ரச செந்தூரம்.</u>

ரசம், அரிதாரம், கெந்தகம், சாதிலிங்கம், மனோசிலை இவை ஐந்தும் சமன் கட்டி அம்மான் பச்சரிசி கீழ நெல்லி, குப்ப மேனி மூன்றும் வேறே ஒன்று ஒரு சாமம் மர்திச்சு மூன்று சாமமும் மர்திச்சு காசி குப்பியிலிட்டு ஒரு கொண்டு அரைந்து சீலை மண் செய்து வாலுகா எந்திரமாக தொண்ணூறு நாழிகை எரிக்கவும், செந்தூரமாம். இந்த செந்தூரம் தேனில் ஒரு பணவிடை ஐந்து நாள் இடவும். இப்படி நாற்பதெட்டு நாள் இடவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். இது சகல வியாதிக்குமாம்.

குன்மம் காணும் பொல்லாது. கொடிய கடிய வியாதி கண்டீர் கன்மங் காணும் ஒட்டாது கள்ளிப் பாலும் இந்துப்பும் தென்னங் காயில் உள் போட்டு தீய்ச் சுட்டுச் சிறப்பாக்கி பொன்னுங் காடி அளவு கொள்ள பொல்லா குன்மம் போய் விடுமே.

முருக்கம் வேர்ப் பட்டை, புளியம் பொருக்கு, நாயுருவி, சதிரக் கள்ளி பேரண்டை கொடிவேலி, ஒரொன்று நாலு பலம் சட்டி காய வைத்து அதில் இரண்டு பலம் காரியம் கருக்கிப் போட்டு உருக்கிறத்திலே நிறுத்து யிருக்கிற மருந்தெல்லாம் சட்டியிலிட்டு கரியாமளவும் வறுத்து இறக்கிப் பின்பு பீயம் எடுத்துப் போட்டு அந்தக் காரீயத்தை பொடி செய்து அந்தப் பொடிக்கு சமன் கருவேல யிலை உலர்த்தி பொடி யாக்கி அவுரியிலை உலர்த்தி பொடி செய்து கரி பாதியும் இரண்டு பொடியும் அதில் பாதியுங் கூட்டி நித்தம் கழஞ்சு பொடி சும்மா தின்னலாம். அல்லது வெந்நீரில் குடிக்கலாம். இது ஐந்து குன்மத்துக்குமாம். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ஆவாரம் வேர்ப் பட்டை நாண் பதக்கு கொண்டு வந்து இடித்து புது முடா மூன்று முடாவில் இட்டு நீர் வார்த்து உறைப் போட்டு சூரிய புடத்தில் வைத்து கையைப் போட்டு நித்தம் எட்டு தரம் கீழ் மேல் துழாவிக் கொடுக்கவும். இப்படி சூரிய புடத்தில் வைத்து இரவுக்கு எடுத்து வைக்கவும். இப்படி ஆறு நாள் வைத்த பின்பு எல்லாம் ஒரு முடாவில் விட்டு நித்தம் இரண்டு நேரமும் உரி உரி மதியாரம் குடித்து வரவும்.

அந்திரு அசனத்துக்கு முன்னே ஒரு கிராகனெடை வெந்தயம் பொடி செய்து பச்சை நெல்லில் சீலிதும் காவேளை வேரும் கசாயம் வைத்து அதில் வெந்தயம் பொடி போட்டு கொடுக்கவும். பின்பு பத்தியம் பசுவின் நெய், வெள்ளை, துவரை பருப்பு நீர் இப்படிக் கால் மண்டலம் கொடுக்கவும். வாந்தி குன்மம் தீரும்.

பித்த குன்மத்துக்கு ஆவின் பாலும் இளநீரும் அடுத்த பூசனிச் சாறுடனே மேவுன் பசுவின் பால் நாழி சுவை கொள்ளக் கவும் கோஷ்டம் அதிமதுரம் கொள்ளும் பச்சிலை கச்சோலம், பாலும் ஏலம் லவங்கம் பன்னீர் கழி நீர்த் தாமரை வளையு மேவும் திரி கனி விழல் சுக்கு, வெந்த பதத்தில் வடித்து நக்க தாபசுரமும் தனியவளவும் கொயநறுளே முறையில் லே கொள்ளீர் பூசனி நெய்யிதுவே.

எழும்புருக்கி காமாலை:-

பழு வெளுப்பு காமாலை வரட்சி பிரமியம் எழும்புருக்கிக்கு நெய்:
நீரத்தி வேர், நீர் முள்ளி வேர், நீர் புல்லாந்தி வேர், குமிழ் பாலை, பொன்னாங்
கண்ணி வேர், பெரு குரும்பை வேர், தாமரை வளையம், தண்டையான் கிழங்கு, மிள
வேலி, விலாமிச்சம், அதிமதுரம், சாத்திர பேதி, ஏலம், லவுங்கம், கோஷ்டம்,
செண்பகப் பூ, சாதிக்காய், நரம் பிசின், செஞ்சந்தனம், கடுகுரோகணி, இவை ஒன்று
இரு கழஞ்சு கட்டி பசுவின் நெய்யில் கொதிப்பித்து உள்ளுங் கொண்டு தலைக்கு தேய்க்க
வெளுப்பு மாறும்.

பித்த சுரத்துக்கு எண்ணெய்.

சீதேவி செங்கழுனி சமூலமும் சித்தாமுட்டி சமூலமும் சீந்தி தண்டு இருவேலி இவை
பதக்கு நீரிலிட்டு இரு நாழி சுண்ட வடித்த கற்கம் செவ்வள்ளிக் கொடி அதிமதுரம் பெரு
குரும்பை, அவைச்சிகை முத்தக் காசு, நல்லெண்ணை ஆழாக்கு விட்டுப் பெருங்காயம் மூக்
வார்த்த திப்பிலி, மிளகு, சுக்கு, ஏலம், ஓமம் பொடி நூறு பலம். பொடி தூவி
பதத்திலிறக்கி பாக்களவு தின்கவும்.

சாவு பிள்ளை பெத்தவருக்கு மருந்து:-

ஸ்ரீ... பிரண்டை நறுக்கி அரை மாகாணி நொச்சிஇலை சாறு எலுமிச்சங்
காயளவு அக்குத் தோரெண்டு உள்ளிப் பூண்டு கடுக்காய் மூன்று பூ ரெண்டு பாக்களவு
அசமதாகம் பலம்.௧, அரைத்து சாறு கொடுக்க தீரும்.

கிரந்திக்கு:-

சாதிக்காய், சாபத்திரிசிறும்பு, குரோசாணி, ஓமம், அபினி இலவம் பிசின்
அக்கார காரம், சாதிலிங்கம், சமுத்திர சேவி கலந்த வெளிசிப் பிசின் நீர்முள்ளி விரை
திஜட்டி விரை, நத்தைச் சூரி விரை ஆக பதினொரு வகை மருந்தும் கூட தேங்காயில்
குள்ளே போட்டு உருந்த மாவாலே பூசி மூடி சீலையில் தடவிப் பூசி பசுவின் பாலில்
வேக வைத்து கவறின உடனே எடுத்து தண்ணீரால் அரைத்து சுண்டைப் பிரமாணம் உருண்டை
பண்ணி யிட சர்வ கிரந்தியும் போம்.

ஊசி போலே குத்தகிறதுக்கு:-

தபோக்கிய தன்லெடுத்து சட்டியிலிட்டு யிட்டை பொன் நா ரம்பல் உரல் கொள்
டத்தை கயித்த ளாமி தெம்பத் பொடியைத் தூவி திடமாமி புகையில் விட்டுப் போபே

முடக்கொத்தான் உரி நல்லெண்ணை யிரவும் எழுதியாத வேர்க் கொம்பு வசம்பு
உள்ளி பெருங்காயம் திக்கைத் தகடு உடனே யிந்துப்பு சீன சாலை சிதாரி தேவதாரம்
சதகுப்பி வகை ஒன்னுக்கு கழஞ்சு அடுகிட்டரைத்து கழஞ்சொன்று அரைத்து வதில் வாலா
கலக்கி அடவாக வெந்திறக்கி அரு திணமும் கொள்ள கெடு கிட்டு மிக வலித்து வரும்
நிதம் ப சூலை நிச்சியமாய்த் தீருமென்று நெத்ததிலுல் முனைவன் தானே.

வெள்வெங்காயம் முருங்கப் பட்டை, சுக்கு, கொள்ளு, ஆ படி தண்ணீர் விட்டு
நாழியாக காய்ச்சி கொடுக்கவும். இப்படி எட்டு நாள் கொடுக்கவும். இதற்கு தீரு
வியாதி ஊசி போலே குத்தறதுக்கும், சூலையும் நிற்கும்.

செவுடு காசம்:-

பெருங்காயம் அவரைக் கொட்டைப் பிரமாணம் தண்ணீர் வார்த்தரைத்து ஒன்று
க்

ஊட்டி சட்டி காய வைத்த கையாந்த கரை நெல்லிக்காய் கருமம் சார அமுரி மெய்யார் என்னே அம் உழக்கம் மதித்த பாகும் அரநாழி செய்யாம் மதாம் மீரா சேர உருக்கித் தலையில் வார்க்க அம்மிரல் வந்த கா காசம் அடைத்த செவிடுந் தீர்ந்திடுமே..

2.1.63. **ரத்தக்கு என்னெய்.**

அமுக்கிரா, நன்னாரி, கோஷ்டம், கடுகுரோகணி, ஏலம், லவங்கம், தாமரை வளையம், கத்த இலை ஒரோன்று கழஞ்சு என்னை நாழியில் கட்டி வடித்த உள்ளுக் கொடுத்து மேலுக்கும் பூச பித்த சுரமுந் தீரும்.

விஷ சுரத்துக்கு:-

அமுக்கிரா வேர் பதினைந்து பலம் இடித்து பதக்கு நீரிலிட்டு நாழியாக காய்ச்சி வடித்து அதில் நாழி காடியும் இருநாழி என்னையும் கலந்து கற்பம் பத்து பலம் அமுக்கிரா வேர் அரைத்து கலந்த நாற் கழஞ்சு கடுகு ரோகணியும் நாற் கழஞ்சு பெருங் குரும்பையும் வேலிப் பருத்தி வேரும் இட்டு மெழுகு பதத்தில் வடித்து உடம்புக்கிட்டு பிடித்த உள்ளுங் கொடுத்து கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

சமுத்திர பாலை விரை:-

இந்த விரையை தண்ணீரில் உரைத்துக் கொடுக்க நீர் பாடும் வாந்தி பன்னுகிறதும் வயிறு கழிச்சலும் நிற்கும். குளிர்ந்த நீரில் உரைத்துக் கொடுக்க ரத்தக் கடுப்பு மூலக் கடுப்பு மூலத்திலுத் தடவ தீரும். குளிர்ந்த நீரில் கொடுக்க எரி குன்மம் தீரும். முலைப் பாலில் கொடுக்க தலை சுத்து தீரும். நினைவு தப்பி இருக்கிறவர்க்கு கொடுக்கத் தீரும். தலை வலிக்கிறதுக்கு நெத்தியில் பூசவும். தண்ணீரில் உரைத்து கண் சுத்தும் பூசவும். கண் வலி தீரும். வீக்கத்துக்கு சிலந்திக்கு அதிலிருக்கிற குளிக்கும் குளிர்ந்த தண்ணீரில் உரைத்துப் பசவும். போதிமென்றால் களிப் போடவும். உள்ளுக்கும் அல்லுள் வீக்கத்துக்கும் தடவவும். விஷ நீருக்கு எலுமிச்சஞ் சாத்திலாகுதல் காடியிலாகுதல் உள்ளுக்கு கொடுத்து நசியம் பன்னவும். கடி வாயிலும் கடிவாய் கீறி ரெத்தம் வாங்கவும். சிலந்திக்கும் உடைஞ்ச புண்களுக்கும் கத்தரிக்காய் சாத்தில் உரைத்த தழும்பு போலே பூசி அதின் மேலே கத்தாழம் போட்டுக் கட்டவும். ஒரு தலை வலிக்கும் முலைப் பால் எலுமிச்சம் பழம் அரைத்து தடவி நசியம் பன்னவும். மெத்தக் கடினமாயிருக்கும். சீலையைக் காய வைத்து தலையிலே ஒத்திடவும். வியாதி இந்த தலை தலை களத்திலும் தமிரிலேயாகிலும் உரைத்து கொடுக்க மலத்திலுலே எடுத்த கழிச்சலும் உவன்னத்திலுலே எடுத்த ரத்தமுந் தீரும். பசுவின் பாலில் உரைத்து கொடுக்க சுரமும் வாயில் புண்ணும் நீர் இறங்காததும் எலுமிச்சம் பழ சாத்தில் உரைத்து சீரகம் வறுத்து பொடி பன்னி சர்க்கரையுங் கலந்து கொடுக்க பயித்திய சிலேத்துமந் தீரும். ஐந்து நாள் காலமே கொடுக்கவும். கொடுத்த முட்டாங்கு போட்டு மூடி வைக்கவும். உடம்பு முலைக்கு பறங்கிப் பட்டை பொட்டணங் கட்டி இளம் பதத்தில் காய்ச்சிக் கொடுக்கவும். அந்த கல்லை தண்ணீரில் உரைத்து ஒரு நாளைக்கு மூன்று தரங் கொடுக்கவும் தொண்டை வீக்கந் தீரும்.

பொன்னாங்கண்ணி கிழங்கை, நன்னாரி ஒரிலைத் தாமரை லவங்கம், மரமஞ்சள், குவேலி, விளாமிச்சை, ஏலம், அதிமதுரம், செண்பகப்பூ, சீரகம், செங்கழுனி, காஷ்டம், செங்கழுனி கிழங்கு, முத்தங் காசு, நெல்லி காவிக்காய், சந்தனம் வை ஒன்று மூன கழஞ்சு கட்டி இடித்து இளநீர் முன்னியில் பாதியாகல் வடிச்சு காய்ச்சி நத்தில் இறக்கி பத்தம் தூரிசி மிளகுத்சினம் பித்த ரேசினை சந்து வெங்கலம் அரை ரைக் கழஞ்சு, பச்சைக் கற்பூரம் பரிவுடன் சேர்த்த பானி தன்னில் பாங்குடன்

சேர்த்து வைத்து கஷ்லிட கலங்கும் வியாதிகள் பித்த காசம்; நிலகாசம்; வறண்ட காசம், குமார காசம், புகைச்சல், எரிப்பு, நீர் முட்டு, வெள்ளெழுத்து பிரிசில் புண் பாடும் பலம், திமிர் வலிப்பு இறண்ட சுக்குறன், ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி விழி கண்டு குருடு பலவுந் தீரும்.

ஏலாதி கிருதம்:

ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், சடாமஞ்சி, சிறுநாகப்பூ, கற்காட சிங்கி, லவுங்கப் பத்திரி, கொத்தமல்லி, செவியம், சிறு லவுங்கப் பட்டை, விலா மிச்சை கோரைக் கிழங்கு, நெல்லி முள்ளி, தாளிச பத்திரி, வாய் விளங்கம், கஸ்தூரி மஞ்சள் ஆக மருந்து வகை இருபத்தொன்று வகை ஒன்றுக்கு பலம்.உ, சர்க்கரை பலம். கட்டிக் கொடுக்க சகல வியாதிக்குமாம்.

உடம்பு பருக்க, பயித்தியத்துக்கு, பின்ளை யுண்டாக இருக்கு மருந்து:-

தண்ணி முட்டான் கிழங்கு, அமுக்கு வள்ளிக் கிழங்கு, நிலப்பனங் கிழங்கு, பூசணிக் காய் சாறு, நெல்லிக்காய் சாறு, தேங்காய்ப் பால் வகை ஒன்றுக்கு சாறு நாழி டித்த பாகுலே பதமாக காய்ச்சி கடைச் சரக்கு ஏலம், லவுங்கம், லவுங்கப் பட்டை, அதிமதுரம், முந்திரிப் பழம், இலுப்பைப் பூ, அமுக்கிறா கிழங்கு, ஓரிலைத் தாமரை, முள்ளி விரை, திரிபாலை விரை சீனி இவை பலம்.ல வகைக்கு பலம். திப்பிலி, சுக்கு ஓமம் எல்லாங் கூட்டி இடித்து சீலை வடி கொண்டு உலர்ந்த நாழி பூனைக் காலி விரை நாழி காய்ச்சி கசாயம் ஒக்க விட்டு முந்த வடிச்ச கசாயமும் கூட்டி லேகம் பண்ணி பொடி தூவி கிண்டி நாழி நெய் விட்டு நாலு பலம் தேனும் விட்டு நாலு பலம் சர்க்கரையும் போட்டு பேயன் பழம் சாறு உரித்து புதுப் பானையில் போட்டு இரு பலம் சர்க்கரையும் போட்டு மூடி வைத்து மத்த எடுத்துப் பார்க்க தண்ணீர் விட்டிருக்கும்.

அந்த நீரைக் குழம்புடனே விட்டு பின்பு பொடி தூவிக் கிளறி வாய் குவிச்ச கலசத்தி லெடுத்து செம்பிட்டு ஒரு மண்டலம் தானிய புடம் புதைத்து வைத்து எடுத்து ஒரு பாக்களவு காலமே கொள்ளவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். மூன்று நாளையிலே வறட்சி தீரும். பலமுண்டாம். பத்து நாளையிலே மஞ்சள் தெளியும். முப்பது நாளையிலே மலடி பிள்ளை யுண்டாம். அல்லியும் புருஷனுவான். ரத்த பித்தம் எலும்புருக்கி பாண்டுவ ரோகம் காமாலை, இருமல் மூத்திரம் அதியம் பிரமியம் பெரும்பாடு தீரும்.

சன்மம், எலும்புருக்கி, காமாலை, இருமல், மூத்திரம் பெரும்பாடு அந்திர வாய்வு:-

அழிஞ்சில் பருப்பு, நேர்வாளம் பருப்பு விராகனெடை, உள்ளி பலம்.க, பெருங் காயம் பலம்.ல, புழுங்கல் அரிசி தவுடு பலம். இ இலுப்பைக் கட்டி பலம்.ல, ரச கற்பூரம் பலம். இது அரைத்து தூதுவேளைக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி ஆறு நாள் கொடுக்கவும். பத்தியம், பால், நெய், பருப்பு இளங் கீரையாம்,

பெரியவர்களுக்கு:-

ரசகற்பூரம் பலம். , செந்தூரம் பலம்.உ, திப்பிலி பலம்.க, ஓமம் பலம் .உ, வாய்விளங்கம் பலம். , வெல்லம் பலம்.உ, இது பொடி பண்ணி பிசைந்து பதி னெட்டு உருண்டை பண்ணி தினம் இரண்டு நேரமும் கொள்ளவும். பத்தியம், பால், நெய் வெல்லங் கூட்டவும்.

வாயில் கட்டினால் கருவேலம் பட்டை காய்ச்சிக் கொப்புளிக்கவும். இதுக்கு சூலை சன்மம், அந்திர வாய்வு தீரும். விளக்கெண்ணெய் வார்த்து முழுகவும்.

வெண்மத்துக்கு உப்பு பலம்.உ, வெள்ளுப்பு பலம்.உ, நாயுருவி என்கிற செந்தை புளியம் பட்டை எருக்கம் பூ சூரணம் பண்ணி தின்னவும்.

__வாதமேகச்சம் என்பது வாய்வுக்கும்:-__

நாபி, கெந்தகம், சூதம், காந்தம், அப்பிரகம், வெள்ளி தங்கம், தாம்பிரம், வங்கம், நாகம் இது வெல்லாம் சமன் கட்டி கையாந்தகரைச் சாத்தில் எழு நாள் அரைத்து குளிகை பண்ணி உலர்த்தி காசி குப்பியில் சீலை மண் செய்து மக்கிட புடமிடவும். ஆறின பிறகு எடுத்து சூடாகோடை சாத்தில் கொடுக்கவும். இதுக்கு தீரும் விபாதி உதரம்ப வாய்வு, காஞ்ச திரதம்ப வாய்வு, சூல வாய்வு, தமர் வாரிவி, வாத சூலை, உமாத வாய்வு இவை தீரும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

__அஷ்டசத திரளிக்கு ரசாயனம்:-__

பெருங்கிழங்கு சமூலம் பத்து பலம், நாலு மரக்கால் காடியில் போட்டு ஒன்றியாகக் காய்ச்சி இதுக்கு சரியாகப் பசுவின் பால் விட்டு நாலத்தொன்றாய்க் காய்ச்சி பதினாறு பலம் சர்க்கரை போட்டு பாகு பதமாய்க் காச்ச பிறகு திரிகடுகு, திரி பாலை ஏலம், லவுங்கம் பத்திரி, விலாமிச்சம் வேர் அமுக்கிரா வேர், வாய் விளங்கம் சங்கு நீர் லவுங்கம் சிவதை வேர், பொன் முசுட்டை வேர், கோரைக் கிழங்கு, நரிவாம் பொரி அரிசி ஆதிரம், சிலந்தி அரிசி, வெட்டி வேர் இது வெல்லாம் சர்க்கரைக்குச் சம ஆக கொண்டு சூரணம் பண்ணி அந்தப் பாவிலே போட்டுக் கிண்டி நெய் நாழி விட்டு சிக்கென பதத்திலிறக்கி நெல்லிக்காய்ப் பிரமாணம் ஒரு நேரம் கொள்ளவும் தீரும். பிலி பல விருத்தியுண்டாம். சுவாசம், செயமும் அரோசிகம் வாங்கும். தலைவலி வாங்கும். தொண்டைக் கட்டும், கிறந்திரும் தீபனமுண்டாம். மல சுத்தியாம். எரிச்சல் தீரும். சீத சுரம் வாங்கும். மூலமும் வாங்கும். சுவாசம் பயித்தியம் அதிசாரம் தீரும். ஒரு வருஷத்து சுரம் முதலாய்த் தீரும்.

__அசீர்ண வாய்வுக்கு.__

சாதிக்காய், சாதிபத்திரி, குரோசாணி, ஓமம், அதிவிடையம், பொன் முசுட்டை சுக்கு, திப்பிலி, சீரகம், ஓமம், வெட்பாலரிசி, திப்பிலி மூலம், நெல்லிப் பருப்பு, சீரகம், வாய் விளங்கம், ஏலம், காசுக் கட்டி, கோஷ்டம், கருஞ்சீரகம், கற் கடக சிங்கி, கடுக்காய் இலவம் பிசின் விளாம்பிசின், மாங்கொட்டை, புளியங் கொட்டைத் தோல், நல்ல அத்திக்காய் பொன் மெழுக்கு பெரு மரப்பட்டை வில்வ ஒடு மூத்தம் பருத்திக் கொட்டை பருப்பு கடலழிஞ்சி பட்டை, சுவாரம் விரை கஞ்சா விரை அபினி அதிமதுரம் இது வெல்லாம் பொன்னிறமாய் வறுத்து பொடி செய்து எருமைத் தயிரில் தேனில் ஒரு விரல் கொண்ட மாத்திரம் இருபது நாள் கொள்ள வயிற் நோவு, கிராணி, குன்மம் தீரும்.

__உதக வாய்வுக்கு கசாயம்.__

முசுக்கிலை கொத்தமல்லி, சீந்தில், சுக்கு, சிறு முத்தமோடு நிலவேம்பு, சித்தா முட்டி பறங்கிப் பட்டை, திரிபாலையும் பஞ்சு நீரில் பக்குவமாய் எட்டொன்றாய் பருகிராய் பிறகு கொஞ்சு நாளும் உழலை ரத்தக் கட்டு சுவித்தியமும் வாந்தி விக்கல் தீரும். எங்கிலா உதகத்தில் வாய்வாலே எடுத்த தோர் பிணை எல்லாம் எழுந்தாரே.

__விஷ தோஷத்துக்கு கசாயம்:-__

எருக்கம் வேர், மரமஞ்சள், ஆனைவேலை, முசுமுசுக்கை நெருஞ்சில் நொச்சில்

யியல்பான மரமஞ்சள், நிலவேம்பு சுக்கு, கருக்க மரம் சாறட்டை வேர் தா ளவே ளை வசம்பு, அரத்தை தா ய திப்பிலி மூலம் செவியமும் வருக்கமாம் கண்டங் கத்திரி, கொ வேலி, வகையுடனே இலைகள் வைத்துக் கட்டி நருக்கியே நாழி நீர் உழக்காய்க் காய்ச்சி, நன்றாக நீ யதனை நயந்தீடிரே.

நயந்திடுங் கசாயந் தன்னை நன்றாக யிதனைக் கொள்ள உய்ந்த தோர் சங்கக யாவும் உயிர் இன்ன தோஷம் எழும் நயந்த தோர் சூதகத்தின் நடபதின்ன வாய்வு எல்லாம் பயந்த தான் ஒடும் சொன்னேம் பயந்த தான் முனிவர் தானே.

சூசிக வாதம்.

திப்பிலி பலம்.உ, சர்க்கரை பலம்.ரு, வாய் விளங்கம் பலம். , சிறதேக்கு பலம்., சீரகம் பலம். , சுக்கு பலம். , மிளகு பலம். , திப்பிலி பலம். , மோடி பலம். , செவியம் பலம். , லவுங்கப் பட்டை பலம்.வ, லவுங்கப் பத்திரி பலம்.வ, ஏலம் பலம்.வ சித்திர மூலம் பலம்.வ, கையாந்த கரை பலம்.க, சாதிக்காய் பலம். , எல்லாம் சூரணம் பண்ணி தேனில் லேகியம் பண்ணி கொடுக்க சூதக வாய்வு தீரும். இருமல், அக்கினி மாந்தம் ஈளை தீரும்.

பிள்ளை நக்கு விழாவிட்டால்:-

பழனி பண்டாரம் செல்படி இதக்கு கசாயம்:-

முருங்கைப் பட்டை கண்டங் கத்திரி வேர், மாவிலிங்கம் பட்டை, பெரு மரப் பட்டை, நஞ்சறுப்பான் சனப்பம் விரை, திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, முக்கா வேளை கண்டு திப்பிலி இது கசாயம் வைக்க மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

வாய்வு சூலைக்கு நெய் லேகம்மபண்ணுகிறது:-

வில்லை பிஞ்சு மேவும் சங்கு கொடிவேலி வேர், கூர்க்கும் பெருங்காயம், வெந்தயம், வசம்பு, வெட்பாலரிசி, அதிவிடையம், ஆனைக்கா வேளை, செவியம், திப்பிலி, செம்முள்ளி, சராகம், கவியரோகணி, கார்க்கும், வெள்ளுள்ளி, பஞ்ச லவுணம் பாயிலாக்ஷாரம், கடுகு, திரிபாலை, கடுகு சூரணம், வெந்நீர் தனிலே மேலிடு கழக் கொள்ள அண்ட வாதம் ஆமணக் கெண்ணெயில் கொள்ள தீரவின வியாதி திடமுடன் கொள் மூலகாசமும் முகந் திட்ட குன்மமும் சங்க கிரகணி தன் பெரும்பாடும் பிரமியம் இருபதும் சர்வ சுரமும் தனவாயி அரிசியும் உதிர மத்த வாய்வும் உள்ளண்ட வாதம் ஆம் சூலையும் ஆமக் கிரணியும் கந்தன் கயில் வேல் கண்ட காஞ்சு மலிஞ்சும் போல வியாதி ஆறமே.

(எடு இல்லை)

குன்மம் இருபதுக்கும் மேகாதி குளிகை பண்ணுகிறது.

ரசம், கெந்தகம், வெங்காரம், எண்ணரி தாரமும், மனோசிலையும், மருவும், தாம்பிர பற்பம், வன்மை, திப்பிலி, திரிகு, லவுங்கம், ஒருமை நொச்சில் கண்டங் காலியும் ஒக்கும் ஆடாதோடைபிலை பெருளும் சாறுடன் தானரைத்து பின்னும் பயறளவு உருண்டை பண்ணி செய்த உருண்டை தேனில் நெய்யில் சிறந்த சக்கரை தனில் கொள்ள அய்யும் ஆச்சுவாசம் ஆனை யீளை இருமலுடன் சுரமும் மெய்யும் குன்ம மிகுவதுடன் மிகுத்த சுர வகை தனை அனைத்தும் உய்ய ஒரு யிடமில்லாமல் ஓடிப் போகுங் கண்டீரே.

தாளிச்ச வடகம்.

தாளிச்ச மாத்திரை சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, திப்பிலி பலம்.க, செ

செவியம் பலம். , சித்திர மூலம் பலம். , சங்கு நீர் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, சிறுநாகப்பூ பலம்.க, ஏலம் பலம். , லவுங்கப் பட்டை பலம்.வ, பத்திரி பலம்.வ, ஓமம் க, கிராம்பு பலம்.ப , சாதிக்காய் பலம்.ப , சாபத்திரி பலம். கோஷ்டம் பலம்.வ, எலுமிச்சம் வேர் பலம்.வ, தாளிச்ச பத்திரி பலம்.க, சர்க்கரை பலம்.அ, பசுவின் பால் நாழி புட்டு கட்டி சூரணம் வைத்து வடகம் பண்ணவும்.

<u>பரங்கிலாதி ரசாயனம்.</u>

பரங்கிப் பட்டை பலம்.ய, திரிகடுகு, திரிபாலை, ஏலம், சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, லவுங்கம், சிறு லவுங்கப் பட்டை பத்திரி, சிறுநாகப்பூ, வால் மிளகு, முந்திரிகைப் பழம், சங்கு நீர் வகை ஒன்றுக்கு பலம்.வ, கோஷ்டம் இதிமதுரம் வகைக்கு பலம்.க சர்க்கரை பலம்.ய, பசுவின் மோர் நாழி இப்படி புட்டு கட்டி ரசாயனம் பண்ணவும். கடுகு, புளி வாழைக்காய் ஆகாது.

<u>மந்தார காசத்துக்கு கண்டாத்திரிகம்:-</u>

தூய தோர் நாசி தன்னில் தும்பலு மிகவுண்டாகும் நோய் நீர் விழுந்து நெஞ்சில் நொந்தடைத் தீளையாகும். மாய மந்தார காசத் தடவிது தானே என்று மாய மாமுனிவர் சொன்னார் வண்மையைக் கண்டு கொள்ளே. யிடுப்புடன் முள்ளந் தண்டு யிருபுறம் விலாக்கள் நெஞ்சு நடுக்கியே குளிரும். வெப்பு நைய்யவே கொதித்துக் குத்தும். அடுத்திடும் உதிர நோவும் மயக்கமோடி நிமல் செய்யும். குடி கொள யிருந்து தெவ்வல் கூவும் விப்புருதி தானே. யிந்த நோய் நின்ற நாளில் யிருமியே செயமுமண்டாய் வந்து தான் ஆனி வத்தி மயக்கிடும் கோபமாகும். முந்தவே அய்யும் பித்தம் முடுக்கிடா ளிர்ச்சி வெப்பும் முகசிலை வத்திடில் மரணந்தானே.

<u>கண்டாத் திரிகம்:-</u>

இஞ்சி பலம்.ய உ, உரிச்சு கடலைப் பிரமாணம் அரிஞ்சு, நெய்யில் வறுத்து பொடி செய்து மிளகு பலம்.க திப்பிலி பலம்.தெ, திப்பிலி மூலம் பலம். , சித்திர மூலம் பலம்.க, சீரகம் பலம். , சிறுநாகப்பூ பலம். , லவுங்கம் பலம்.வ, காட்டாத்திப் பூ பலம்.வ, சாதிக்காய் பலம்.ஞ, சடாமாஞ்சி பலம்., அதிமதுரம் பலம்.வ, சர்க்கரை பலம். , இஞ்சிச் சாறு உழக்கு, பால் உழக்கு, இதுவுடன் சர்க்கரை போட்டு காய்சி பதத்தில் கடை சிலவு போட்டு வேறே சட்டி வைத்து உழக்குத் தேனும் விட்டுக் கொள்ளவும். தீரும் வியாதி ஆம்பல் பித்தம், சத்தி மார் வலிக்கிறது கிறேனி அசீர உதிரம்வியாதி மூக்கும் வத்திப் போறது தீபவமுண்டாம். க்ஷயரோகம் வாயில் ரத்தம் விழுகிறது காமாலை லீககந் தீரும்.

<u>சுரம் காமாலைக்கு லவுங்க சூரணம் பண்ணுகிறது:-</u>

லவுங்கம் ஒன்று, சீரகம் இரண்டு சிறுநாகப்பூ இரண்டு, ஏலம் நாலு மிளகு எட்டு, திப்பிலி சுக்குஉ, அமுக்கிரா சர்க்கரை சூரணம் பண்ணி சட்டியில் பீரழி பால் வார்த்து புட்டு கட்டி அந்த சீலையில் சூரணம் வைத்து பதமாக வெந்தவாறே எடுத்து புட்டு உதிர்த்துக் கொண்டு பாக்குப் பிரமாணம் கொள்ளத் தீரும் வியாதி சுரத்தின் காமாலை, பாண்டு விஷ பாகம், யிருமல், மந்தாக்கினி, உப்புசந் தீரும்.

<u>காயத்துக்கு சுத்தி:-</u>

அமுக்கிரா கற்பம் அமுக்கிரா வேர் பொடி செய்து பத்து பலம் பசுவின் பால் நெய் தேன், சர்க்கரை கூட்டி பிசறி வைத்து ஒரு கடிப் பிரமாணம் ஏழு நாள் கொள்ள

ஸ்ரீபோகமுண்டாம். பதினைந்து நாள் கொள்ள அபிரக்குள்ள அழகுண்டாம். ஆறு மாசம் கொண்டால் தெய்வமோழி மருவுடுதே வென்றம் நரை திரை மாறும் ஆனைக் குள்ள பல முண்டாம்.

கண்டா நெல்லி குழம்பு ஸ்தம்பனம்.

சர்க்கரை பலம். நெல்லி ரசம் சமபாகம் புதுப் பானையில் போட்டுப் பிசைந்து மது பாகம் கூட லேகியம் அடுப்பில் வைத்து சிறுக எரிச்சு பாகு பதமாக இறக்கி இதில் தாளிச பத்திரி, மிளகு, செவியம், கொத்தமல்லி, பேரீச்சம் பழம், முந்திரி பழம், சுக்கு, சனப்பம் விரை சங்கு நீர், வாய் விளங்கம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், மலக்காய் பொடி, லவங்கம், சிறுநாகப்பூ, ஏலம், சீரகம், கடுகு, வெள்ளைக் கடுகு, தாமரைக் கிழங்கு மிதழ், செங்கழு நீர் கிழங்கு, தக்கோல பொட்டு தன்னி முட்டான் வகை ஒன்றுக்கு பலம்.க, சூரணம் பண்ணி சிறுக சிறுக தூவிக் கிண்டி வைத்து தினம் பாக்களவு இரண்டு நேரமும் தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி ஆம்பல் பயித்தியம், பித்த பயித்தியம், சுவாத பித்தம், பயித்திய குன்மம் தீரும். இது சிரந்த படி கை கண்டது.

பித்தாதிக்கு இதுக்கு மருந்து:

கடுக்காய்.எ, ஆறு மாசத்தே காடியில் பத்து நாள் ஊறப் போட்டு பதினோரா நாள் காடி ஊத்திப் போட்டு வேறே காடி விட்டு மூன்று நாள் ஊறப் போட்டு பதிமூரா நாள் காடி ஊத்திப் போட்டு வேறே காடி விட்டு மூன்று நாள் ஊறப் போட்டு வேறே**காடி*வி* நாலா நாள் ஊத்திப் போட்டு கடுக்காய் ரெண்டாய் ரெண்டாய் பிளந்து விரை வாங்கிப் போட்டு நிழலில் உலர்த்தி அந்தக் கடுக்காயின் நாலத்தொன்று உப்புப் போட்டு பசுவின் மோர் குன்னி குழம்பாக வார்த்து மெள்ள மெள்ள எரிவிட்டு நாழி மோர் இறுகக் காய்ச்சி இதுக்கு திப்பிலி திப்பிலி மூலம், செவியம், கொடிவேலி இது மூன்றும் பலம். விடு இந்துப்பு பலம்.தெ, ஓமம், சுக்கு பலம் எல்லாம் பொடி செய்து கடுக்காயில் தூவி இஞ்சி சாறு உரி எலுமிச்சம் பழச் சாறு உரி விட்டுக் கிளறி ஒன்று விட்டொரு நாள் வெயிலில் வைக்கவும். காலமே ஒன்றரைக் கடுக்காய் கொள்ளவும். தின்ற குணம். இதுக்கு தீரும் வியாதி குன்மம் மூலம், அக்கினி மாந்தம், உதிரரேகம், அருசி ஒட்டிய ரேகம், சுவாச காசம் கிரணி அசீரண கழிச்சல் பாண்டுரேகம், ஆம சூலை பிழு தீரும்.

செவியம், சித்திர மூலம், திப்பிலி மூலம், இந்துப்பு, தாளிச பத்திரி, கொத்தமல்லி சதகுப்பி, கோஷ்டம், அரத்தை வகை ஒன்றுக்கு பலம்.க இடித்து சூரணம் பண்ணி தேன் பலம் விட்டு கிளறி பாக்களவு இரண்டு நேரமும் கொள்ளவும். தீரும் வியாதி இருமல் சுரம், சயித்தியம், வெட்டை இவை தீரும். பிள்ளை பெத்த அறையில் ‹

பிள்ளை பெத்த அறையில் சுரம் வந்தால்:-

வெள்ளை போளம் ஒரு பலம் கட்டி சூரணம் பண்ணி கொள்ளவும். வயிறு பேதியில்லாதிருந்தால் பறங்கிப் பட்டை பலம்.யரு, சித்திர மூலம் பலம்.உ தந்தி வேர் பலம். குளாத்தி வேர் பலம்.க, கட்டிப் பிலா வேர் பலம்.உ, சாம்பிராணி பலம்.உ, வெண்காரம் பலம். இவைகள் சில்லி சட்டியில் போட்டு புடம் போட்டு எரிக்கவும். சட்டி மூடி புகை மூடி எரிக்கவும் தீரும் வியாதி கால் பிடிப்பு, மேகம், மாந்தம் தீரும்.

வாசா பறங்கி கிருதம்.

ஆடாதோடை சாறு, கரசலுங் கன்னி சாறு நாழி பசுவின் கோமியம் நாழி பால் நாழி இதுக்கு கலக்கம் திப்பிலி, நெட்டி நாழி, சித்திர மூலம், அரத்தை தாளிச பத்திரி வகைக்கு பலம்.ஙு, சூரணம் பண்ணி அந்த நெய்யில் போட்டு மெழுகு பக்குவத்தில் வடித்து குடிக்க மேல் சுவாசம் அஸிமுகம் பாண்டு மூல ரோகம் சோபை பிலிகம் சுரம், அக்கினி மாந்தம் மூக்கில் விழுகிற நாசியில் ரத்தம் பித்தம் வாந்தி தீரும்.

[illegible]றவாத கிருதம்.

சங்கம் வேர், நெய்தல் கிழங்கு, தாமரைக் கிழங்கு, மஞ்சிஷ்ட்டி, ஏலம், மருள் கிழங்கு, வெட்டி வேர், கோரைக் கிழங்கு, சந்தனம், திராட்சை பழம், அதி மதுரம்வகை ஒன்றுக்கு பலம். சூரணம் பண்ணி இரு நாழி நெய்யில் போட்டு அறுகம் வேர் சாறு இரு நாழி இதில் அந்த சூரணம் போட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்துக் கொண்டு குடிக்க தலைக்கிட நசியம் பண்ண ரத்த வாந்தி பயித்தியம் காமாலை தீரும்.

மகாவாச கிருதம்.

ஆடாதோடை சாறு நாழி, நெய் நாழி, பால் நாழி இது கூட்டி கலக்கம் நிலவேம்பு கொடி சப்பாலை பட்டை, அதிமதுரம், சந்தனம், வெட்டி வேர், இருப்பைப் பூ, கொத்தான் நன்னாரி வேர் நெல்லிப் பருப்பு, தாமரைக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, மாதளங் கா கொழுந்து வகை ஒன்றுக்கு பலம். சூரணம் பண்ணி அந்த நெய்யில் கலந்து பதமாய் காய்ச்சிக் கொண்டு ஒரு பலம் சர்க்கரையும் உழக்கு தேனும் கலந்து கொடுக்கத் தீரும். பா

பாடாதி கிருதம்.

வட்டத் திருப்பி வேர், இலவம் பிசின், மாதிளங் கொழுந்து, பெரு மரப்பட்டை கோரைக் கிழங்கு, ராட்சை பழம், சந்தனம், மாங்கொட்டை, நாவல் கொழுந்து, நிலப் பனைக் கிழங்கு வாழைக் கிழங்கு வகை ஒன்றுக்கு பலம். நாழி பாலில் அரைத்து நெய் வார்த்து பக்குவமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்கத் தீரும் வியாதி அஸ்திசுரம், பெரும்பாடு சூலை தீரும்.

ஊருகி கிருதம்.

நிலப் பனைக் கிழங்கு பலம்.ள, நாவல் பட்டை பலம்.ள, கருங்காலி பட்டை பலம்.ள, பலாசம் பட்டை பலம்.ள, பதினாறு மரக்கால் தண்ணீரில் கசாயமிட்டு நாலத் தொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு பசுவின் நெய் நாழுழி வார்த்து புளியாரைச் சாறு நாழுழி தண்ணி முட்டான் சாறு நாழுழி நாழி பால் விட்டுக் கலந்து கலக்கம் விளா ஒடு சடாமாங்கிஷம் கொத்தமல்லி வட்டத் திருப்பி வேர் மாங்கொட்டைப் பருப்பு, திரி பாலை, கச்சூரம், சுக்கு திராட்சை பழம், செம்மரம், இலவம் பிசின், தாமரைப் பூ, நாகேசரம், கொடிச பாலை பட்டை, கொத்தான் சூர்க்கம், அதிமதுரம், மாதளங் கொழுந்து, அதிவிடையம், கோரைக் கிழங்கு, வில்வப் பழம், திப்பிலி, அமுக்கிரா நன்னாரி வேர் வெட்டி வேர் வகைக்கு பலம்.ஃ சூரணம் பண்ணி பாலில் கரைச்சு நெய்யில் கலந்து பக்குவத்தில் காய்ச்சி வடித்து உழக்கு தேன் கூட்டிக் குடிக்க யோனியில் பிறந்த ரோகமெல்லாம் விசிறி பாகமாய் தேஜஷசம் மருந்து காலத்திலே நீல வர்ண மாய் கிருச்சி வர்ணமாய் பாண்டு வர்ணமாய், ஜெப்பு வர்ணம், பச்சை வர்ணம் விழுகிற ரோகம் சுவாசகாசம் அஸிமுகம் மேக பாண்டு காமாலை தீரும்.

கண்ட_காலி_கிருதம்.

கண்டங் கத்திரி சாறு நாழி, நெய் நாழி, சுக்கு, மிளகு, திப்பிலி, மாதுளங் கொழுந்து இந்துப்பு எவாச்சாரம், வாய் விளங்கம், கோஷ்டம், கடுக்காய் வகைக்கு பலம்.கு, சூரணம் பண்ணி நெய்யில் கலந்து வடிச்சு குடிக்க இருமல் உப்புசம் நெஞ்சு நோவு ஆமம் ஆம வாதம் தீரும்.

திசமூல_கிருதம்.

முன்னை வேர் பாதிரி வேர், சித்தாமல்லி, பெருமல்லி வேர், சிறவழுதலை, கண்டங் கத்திரி, நெரிஞ்சில், காட்டு வாழை, பெருங் கிழங்கு வகைக்கு பலம்.ய எட்டு மரக்கால் தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அதில் படி நெய் விட்டு கலக்கும் இந்துப்பு, கண்டு பறங்கி, கற்காட சிங்கி, செவியம், தாளிச பத்திரி, மிளகு கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு வகைக்கு பலம்.ᵕ, சூரணம் நெய்யில் கலந்து பக்குவத்தில் வடித்து குடிக்க விக்கல் சுவாச காசம் பாரிச சூலை குன்மம் குத்திரரோகம் தீரும்.

மைசாக்ஷி, சுக்கு, மிளகு, திரிபாலை, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், செவியம், கொடிவேலி, ஏலம், திப்பிலி மூலம், தேவதாரம், கோஷ்டம், மரமஞ்சள் வளையலுப்பு சயிந்து லவணம் ஆனை திப்பிலியெல்லாம் ஒரு பங்கு சூரணம் பண்ணி மைசாக்ஷி பாதியும் வேப்பம் பட்டையில் புட்டு வைத்து கோ விட்டு சாமம் எரிச்சு எடுத்து உரலில் நய்ய இடித்து அதுக்குத் தக்க நெய் வார்த்து சூரணம் விட்டுப் பிசைந்து பாக்களவு தின்ன குஷ்டம் வாதம் ஆரோசிகம் குன்மந் தீரும்.

குஷ்சிப்_பழம்,_கோழி_முட்டை_செந்தூரம்.

ரச செந்தூரம் சுத்தி பண்ணின ரசம் சுத்தி, கெந்தகமு மூன்றும் கூட்டி பொடி செய்து காசிக் குப்பியில் அரையளவு போட்டு வாய்க்கு பல பக்கல் யிட்டு மூடி எழு சீலை மண் பூசி வாலுகாந்திரத்தில் தொண்ணூறு நாழிகை எரிச்சு ஆற விட்டெடுக்க செந்தூரமாம். சர்க்கரையுடன் அநுபானம் பண்ணிக் கொடுக்க குன்மந் தீரும். முசுமுசுக்கை சாத்தில் கொடுக்க கிருணி தீரும். மோரில் கொடுக்க ரத்தப் பிரமியந் தீரும். பருத்திக் கொட்டை வறப் போட்டு சாத்தில் கொடுக்க மூத்திரந் தீரும். கோழி முட்டை கருப் போக்கி இரண்டு விராகனெடை ரசம் ஒரு விராகனெடை கெந்தகமும் முட்டையிலடைச்சு முட்டை ஒட்டிலே தாளோடி காசுக் கட்டி அரைத்துப் பசி மூன்று மண் பூசி தீபாக்கினி சட்டியில் மணல் போட்டு அதில் நடுவே வைத்து தொண்ணூறு நாழிகை எரிக்க செந்தூரம். இப்படி நாலாறு முட்டை போடலாம். சகல சுரம் உள்ள வியாதிக்கும் அரைப் பணவிடை அநுபானத்திலே இடவும்.

வெட்டுப்_பட்ட_புண்ணுக்கு:-

செவிரை அன்பத் தொக்க தியவெ வறுத்து துளாயி செய்து விரை வேர் தன்னில் அரைத்து மென் பொடியதாக்கி ஏவி நீர் பிளவை தன்னில் மிளவங்கும் நெய்யை யுத்தாள் தனைத் தா வத்தி சுறகெள புலருந்தானே.

வெட்டுப் பட்ட புண்ணுக்கு விரித்து முன்னோர் உரைத்தபடி வட்டப் படவே நீர் பூனை *விஷ்ணு* த்தை வருந்து பாதி ரெண்டாக்கி சட்டி தனிலே எண்ணை விட்டு கழலிறவே மிகக் காய்ச்சி அஉட்ட மருந்தும் ஒத்திடவே அதுக்குப் பின்னே எண்ணையிடே. யிடவே எண்ணை அது தனக்கு யிலந்த தரு காயிகாம் பாயி தடரி மூழப் பூ படரும் நிலத்து

குமிழ் விட்டு பசுதையா விரை வசு வேரும் கடவா தொழுக்க சிற கடுக்காய் காம்பை ஞரியஞயுத அட்டவே மிலையின் வேர் கொண்டே அதின் மேல் வச்சேர் கடைச் சரக்கோ கோஷ்டம், மதுரம், வெம்பாடல் கொடியின் சிவந்த செவ்வள்ளி யிட்டுங் கரிய குருந்திருக் குயில் சேக்கப்பூ சதமுப்பை மேஷ்டில் வளரும் மெல் முள்ளி மிகா மருந்த வில்ல வங்கம் கூட்டி தாளியுடன் செய்து கொள்ளீரென் னை புண்ணுக்கே.

<u>குத்தப் பட்ட புண்ணுக்கு:</u>-

மத்தக்குடனே உடைசீலை குடைந்தே யிரத்த கள்ளிதனை முத்தப் போலே விழு நீரை முறித்து சும்மா வகை செய்து குத்தப் படவே குத்தளவாய் தடைத்த வாய் வந்த சதை தள்ளி சித்த நள்ள மகா தேசிக்காயி செறிந்தே வொத்தச் சடவே என்னை சுடை வைத்தே.

ஒன்னையிட்ட முன்குள் ஒரு புறம் சலமும் உள்ளடியும் மத்தோர் சிறியோர் தாம்பலவோர் மனைக்கு முந்தின நன்னரி சித்த ஏலம், லவுங்கம் தின்றும் கைப்பு வெம் பாடலும் மத்தோர் மதுரந் தான் கொண்டு உடசல் என்னை உடன் கூட்டி தன்னே.

ஆனைக் கன்னன் ஒரு பிடியும் அரச விளுதிகள் அது வித்தும் கான குதிரை தோல் எலும்பும் கான நெல்லி அதும் பருப்பும் தாயைக் கொன்றான் சாறு தன்னில் நடவி செய்து கொள்வீரும் மானே பொருதும் விழியாரே வடுமுமதமு ஞணமாலும்.

<u>முது மேகத்துக்கு</u>.

செண்பகப்பூ, ஏலம், சீரகம், சாஸ்திர வேதி, குங்குமப் பூ, சாதிக்காய், சாபத்திரி, லவுங்கம், கோஷ்டம், லவுங்கப் பட்டை, சிறு லவுங்கப் பட்டை, கோரோசனை, கஸ்தூரி கற்பூரம் இது வெல்லாம் பச்சையாய் பொடி பண்ணி இது விராகனெடை ஆவாரங் கொழுந்து அரைத்து நாக பற்பம் பணவிடை கூட்டி ஒரு மண்டலம் கொண்டால் குணமாம்.

<u>சோகை லக்ஷணம்:</u>- குமார வங்குஷ்ட வறத்தில் உலந்து இருக்கிறவனுக்கு வீக்கம் ஏதெனருல் குரு பாதங்கள் பிழந்து யிருக்கிறவர்களா குழப்பு சாறுகளாய் போசித்து இருக்கும் அதிலேலே வீங்கும். இப்படி சோபம் ஒன்பது விதமாயிருக்கும்.

வாத சோபம், பித்த சோபம், சேத்தும சோபம், வாத பித்த சோப மொன்றும் அவசத்தியத்தில் உண்டான சோப மென்றும் விஷத்திலுண்டான சோப மென்றும் என்பது வகைப் படும். விச்சு பிரி சோப மென்றும் அகந்த சோப மென்றும் இப்படி இரண்டு வகைப்படும். அதுக்கு அசாத்தியமே தென்னில் வாய் அழுத்தியும் அசதி சத்தி விக்கல் வயிறு பொருமல் வயிறு கழிச்சல் இது முதலாக அனேகம் அனேகம் வகை உபத்திரங்கள் காலிலே வீங்கிறல் புருஷனைக் கொல்லும், வயித்திலேயும் குய்யதானத்திலேயும் விளிந்து சத்திறும் ஆதி சத்தமும் சிறப்பு வகைகளோடே கூடியிருக்கும். விக்கலும் வீங்கின சுரமும் தினமும் உண்டாக அர்தவிக்கலும் சுரமும் அதிசாரமும் இவைகள் விட்ட போது உண்டான விக்கலும் அசாத்தியமாம். யாதொருக்கு காலிலே வீக்கம் சிரசிலே வீக்கம் அரைமேல் வீக்கம் அது அசாத்திய மென்று சொல்லக் கடவர்.

<u>இதுக்குமருந்து:</u>--

சாறு வேளை வேர், ஆமணக்கம் வேர், பஞ்ச மூலம் குடிக்க வாதத்தால் வந்த வீக்கம் போம். சாறு வேளை தேவதாரம், கடுக்காய், சுக்கு குடிக்க சோபந் தீரும். பேய்ப் புடல் தராய், அதிமதுரம், கடுகுரோகிணி, கடுக்காய், தேவதாரம், மஞ்சள்,

சந்தனம், காட்டா மணக்கம் வேர், திப்பிலி, கையாந்த கரையிட்ட கசாயம் கொடுக்கலாம். அதில் செண்பகப்பூ தேவதாரம், மஞ்சள் மரமஞ்சள், திப்பிலி, கொத்தமல்லி, இருவேலி, ஏலம், லவங்கம், நாபப்பு, முத்தங் காசு பனை சாபத்திரி வகைக்கு பலம். அரைந்த என் ஊயில் பாகம் பண்ணி எல்லாம் மேலும் இட்டு உள்ளுங் குடிக்கவும். வீக்கம் தீரும்.

கொடிவேலி, திப்பிலி, சுக்கு, முத்தங் காசு, சீரகம், தேவதாரம், கடுக்காய், சாரவேலை பொடி செய்த காரெள்ளுப் பொடியுடன் கட்டி வெந்நீரில் அடிக்கவும் வீக்கந் தீரும்.

சித்தாடை வேர், இஞ்சி சாறு, திப்பிலி, மிளகு, சுக்கு இலை அரைத்து கரைத்து; உரி நெய்யும் விட்டு பாகம் பண்ணி உண்ண சிறனி குன்மம், பித்தம் அடினது சுகப்பட்டு எங்கும் நிறை ரெத்தம் பரவிக் கரத்து வரும். வட்டம்படி நரம்புடைந்த உடம்பு குளிர்ந்த இருக்கும். இது சித்த பித்த மென்று பேராம்.

பித்தத்துக்கு மருந்து.

பித்தமென்னும் பேர் நெட்டி சந்தனம், முத்தங் காசு, வேப்பம் பட்டை, வெட்பாலரிசி, மஞ்சள் மதுரம், காளா விளாக்காய், பித்த மதெனவும் உருத்தி இலை யிலை போக்கும். மஞ்சள், கோஷ்டம், விலாமிச்சம் அரைத்து பூச பித்தந் தீரும். இந்தப்பை பொடி செய்து சிறு சூடாக நெய்யில் கலக்கி அப்பி பாகம் பண்ணி சித்த பித்தந் தீரும்.

சீந்தில் பலம்.ய, பேய்ப்புடல் பலம்.ய, வேப்பம் பட்டை பலம்.ய, முசுமுசுக்கை பலம்.ய, நாலு மரக்கால் தண்ணீரில் நாலொன்றுக்கி அதிலே பேய்ப்புடல், சந்தனம், விலாமிச்சை கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், மஞ்சள், மரமஞ்சள், தேவதாரம், செஞ் சந்தனம், கோஷ்டம் இலை அரைத்து நாழி நெய் விட்டு பாகம் பண்ணிக் கொள்ளவும். நசியம் பண்ணவும்.

கடுக்காய் கலப்பக் குணம்.

கடுக்காய், வயித்தியநாதன் கயிலவான கடுக்காய் அட்டை தரித்தாள் அகஸ்தியருத்தாதான் தெற்கே நிபத்தியாய் கத்தோர் காணும் பெரியோர் கல்லாதாரே.

நரகில் உத்தே விழுந்திருவாரே. மருவிய பிணிகளாலே மானிடர் மடியா வண்ணம் கரியவன் அமுர்த மூட்ட கைபிறை நப்பி போந்து பெரு நிலம் தன்னில் விழுந்து எழுந்திட பேரும் பெத்த உருவிய மூலேயிருளே உரைப்பது உத்துக் கேளாய்.

வாதம் போம். விசையன் தன்னை உள்ளங் கொள்ளீர் வருங்காலே ரேசனிக்கு சன்னி வராது. பேசுங்கால் பிடிதிரிக்குள் பித்தம் போகும். பேராதம் சேத்துமத்தை பிரிய பண்ணும். ஓதுங்கால் சேலந்தி மூலம் போக்கும். உத்தமான திரிபிரியனகள் ஒட்டிக்கும். ஆதி அயனூர் பிதனே அருளி செரி உபையன் அனேகம் கோஷ்டம் அகற்றும்.

ஒப்புடன் ஓங்கும் உரேகனியே உகந்து கொள்ள ஒண்பொடியை வாங்கு சன்னி மாறும் ஆந்திடு வாங்கு மளவே வயித்திய நாதன் கையில் தாங்கு மனித்தரை நீர்தா பரித்து நீங்கா. பிணிகள் பல நோய்கள் பல நோய்கள் பெரு வயறு குஷ்டம் அணுகி வரும். வெற்பை அகத்தும். முதுகி வரும். மும்மலமும் போக்கும். நதிரும் பிறதி முன்குள் கை பலமாங் கொண்டவர்க்கு காண் புத்தி தரும் வித்தை தரும் போத வறள் கொடுக்கும். மெத்தவே சத்தி விக்கல் விண்ணேத்தும் உந்த தொரு மா பெரும் பிணிகள் வகை பல நோய் ஆறும் பேர் பெருகி நிர்வத்தைப் பேர் விக்கும் குரு குட்டம், பெருவயிறு,

குன்மம், குடல் பிறட்டு, மட்டறவே நெஞ்சில் வகை பல நோய் திட்டமுடன் ஆத்தமே அந்த அமுந்த மௌங் கடுக்காய் மாத்தமே அன்னம் போல் வந்த மலம் சலம் தன்னைப் போக்கும். வயத்தினில் கன்டி பெல்லாம் சூலம் கிள தன்னை விட்டு குட்டமும் குறை நோய் நலங் கெட செய்த பின்னும் நாசிகா பிடம் கன்னேயி சிதைந்திட செப்புங் கன்டாய் செல் வந்திக் கடுக்காய் தானே. முந்த மதியற விதையவன் மூவிறல்டாற வாரி-கொந்தலகும் பூங்குமலாள் கொள்டக் கால் வந்த விரணங்களெல்லாம் விடுவிக்கும் மன்னே மறத விரணங்

களெல்லாம் விடுவிக்கும் மன்னே மரணம் தவிர்க்குமாம் வந்த கன்டால் உமையவள் கடுக்காய் கா த்திருக்கும். கொள்டால் அதின் குணத்தைக் கூறக் கேள்-கன்டே தொத்தம் சதை பெருக்கும் தொல் புலியோர் கொன்டாட செத்தும் கா போமே தெளிந்த ஒதிய கடுக் காய் தன்னை உகந்துடன் கொள்வார்க் செல்லாம் தாஜன்டா மலமும் போக்கும். தக்க தோர் முத்தம் தீரும்.

நீதியாய் பித்தந் தீரும். நிறைந்திடு வாய்வு தீரும். சேதி சேர் காசந் தீரும். அன்பமாம் குன்மம் தீரும். ஏகமாங் குட்டந் தீரும். எலிகடி இரைப்புப் த் தீரும். மாத சேர் மெய்யும் பொன்னும் வகை பிறதாக்க மூன்டாம். அனல் படு யிளைப்புத் தீரும். அடைஞ்செழம்புருக்கி தீரும். சிவனை நினைந்த கொன்டு சி காலே கொன்ட பேர்க்கே.

கடுக்காய் கலப்ப முத்தும்.

நீர் ரெத்தம் போலே இறங்குகிறதுக்கு:-

கத்தாழஞ் சோற ஒரு கொட்டைப் பாக்கு, மாத்திரம் வென்ணை அம்மாத்திரம் சீரகம் பலம்.ப , சர்க்கரை பலம்.வ, மூன்று பொழுது கொடுக்கவும் தீரும். வாழைப்பழம் உள்ளே சவுக்காரம் புளியங் கொட்டை மாத்திரம் வைத்து பனியிலே வைத்து காலமே மூன்று நாள் கொள்ளப் போம். தன்னி முட்டால் சாற உழக்கு, சீரகம் வென்னை கொடுக்கத் தீரும். சிறு புள்ளடி மோரில் பிசைந்து கொடுக்கத் தீரும். கருக்கிக் கசாயம் குடிக்கத் தீரும். மாவிலிங்கம் பட்டை, அத்திப் பட்டை மோரில் அடிக்கத் தீரும் கீழா நெல்லி திப்பிலி, சீரகம், மிளகு பழம் கிட்டம், எருமைத் தயிரில் கொடுக்கத் தீரும். பத்தியம் உப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

பத்தியக் கறி:-

பன்டு யிலைக் கறி தின்ன மகிழ்ந்திலோ மின்டியிலைக் கறி தின்ன விரும்பிடில் வன்டிலை கேள் வல்லாரை காரை கொள் சுன்டிலை கொள் கரைக் கொள்வே மானே பனைய கறி கேளாய் வயிற கழிந்த மனிதருக்கு ஊனே பெருத்த வெள்ளாட்டின் உப்பக் கன்டம் அத்திக்காய் கானில் வாழு முசுமுடும்பு காடை குருவி கவுதாரி வாளேர் போத்தும் வாழை கச்சல் வளரும் குறிஞ்சி புளியாரை தேற மாகும். வெள்ளாட்டின் சேர்ந்த தயிரினை அன்னியிலே ஊனே விரும்பும் செர் வீரர் வீனே உயிரை யிழப்பீரே.

முத்த முசுவும் புல் வாயும் முத்தின முறவை விழுமுடும்பு சேத்த மீனும் சேவல் காடை செருங்கும் ரெட்டி கவுதாரி தீர்க்கமான கறி சொன்னேம் செவக்கப் பொரித்துக் கொள்வார்க்கு ஊற்சமாகும் மேனி யெல்லாம் அன்னே தெளியுங் கன்டீரே.

சொள்ருக் காடி கும்மட்டிக் காய் கொழுந்த பஞ்சி கோழியுடன் பள்ளித் திருக்கும் படர் சேம்பு பரும வள்ளி பாகல்க் காய் முன்றும் பெரிய கத்தரிக்காய் முழுதும்

பெரிய பூசணிக்காய் எள்ளதனையுந் தின்பீராய் எல்லா மருந்தும் ஏழைந்தீரே.

மூலமே எழுந்த வாய்வு, முறைவத விலாளை பத்தி உள்ளது கடுத்துக் கொள்ள உள்ளற மார்பில் நின்று தாபியில் சுழித்து நொந்து நருக்கென கழியுநீதே மாகில் சாலவே கொல்லு மென்று சாத்திரமும் தறணி மீதே. மூல வாய்வு கோபித்தால் முடுகிய கழிச்சலுண்டாம். தாதுவும் குறைந்து சத்தி தன்னையே நோக்கி நிற்கும். காலுடன் கையும், முகமும் களைத்த தோர் வீக்கம் காட்டும். மார்பினில் நோக்காடாகும். மறனை மென்றறிந்து கொள்ளே. இந்தக் குணங்களுக்கு மருந்து வகைக் குளிகை:

யிரதம், பெரு மரப் பட்டை, கெந்தகம், அதிவிடையம், கடுக்காய், அப்பிரகம் தலஉநிகை எவ்வாசாரம் யிலவம் பிசின் வசம்பு சமன் கட்டி எலுமிச்சம் பழச் சாத்தில் தழு தாழை சாத்தில் அரைத்து சுன்டைக்காயளவு உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து எலுமிச்சம் பழச் சாத்திலரைத்திடவும். பத்தியம் பால் மோர். மாத்துப் போட்டு காய்ச்சி நாழி வெள்ளாட்டுப் பால் நாலொன்றுய்க் காய்ச்சி எடு தள்ளிப் போட்டு புரை குத்தி அதிவிடையம் அரைக் கழஞ்சு பொடி தாவி உள்ள அதிசாரமுங் கிருளியுந் தீரும்.

<u>நிலை நிலை பேத்திக்கு அஞ்சனம்:-</u>

பெரிய கோமியம் பெய்த்தரைச் சுன்டையே சரிய கண்ணிடு சன்னி தீரவே மிளகு நெல்லி வாகை விரை திப்பிலி, சுக்கு எலுமிச்சஞ் சாத்துடன் நெருக வரைத்து அரம் பழச் சாத்திலே அஞ்சிக்க பெத்தல் அரைத்தல் சன்னி அப்போதே தஞ்சித்துப் போமெனீரே சொல்.

<u>இந்த ரோக லெகுஷ்சனம்:-</u>

அய்யியும் சிறு சுழிக்கும் மேல் மிதம் மிச்சம் சுக்குலத்து மேல் வாத மென்று தடமச்சம் போல் விழி யிர வாய்வு எங்கும் நாக்கு நசியமாயிருக்கும். நிலை நிலை பேத்திரு வாத பித்தத்தில் மனைக்கே பித்தம் போய் ஒதரிய அய் வீட்டில் ஒடிதல் போதவே. அய்யானதும் நெஞ்சிடையும் காஸ்பாரதே.

உய்யா னென்னே தாமரை வாதமும் அய்யும் பித்தம் வாய்வு குன்மம் தாது மதிரடன் சேரு ஞ் சத்தி விக்கல் சேருமே தோஉநம் சிக்கும், தாதனி மாலை சுந்தல் தைய்யலே மெய்யே சொன்னேம் கோதற குடத்தின் மேவுங் குளிர்ந்த தன்னீர் உன்ட பேர்க்கே.

கரிபா எறலும், காரிறள் குளிர்ந்த நீரால் சொரிய நீர் சுவறலாலும் சொத்து மேல் உன்டலாலும் பெரும் பய மெய்தலாலும் வருகிற பாசி நீராலர ரும் வியாகு தானே குன்ம மிரன்டு மடக்காமல் கருகாமம் வடகாமல் பெண்ணின் மேல் ஆசை பெருகாமல் உன்னும் காலே நீருக்கு மோர் பெருக்கி நெய் உருக்கி உன்பார்க்கு பேருரைக்கப் போமே பிணி.

தனிச்சரி வாத பித்த சேத்துமத்தை மாத்தும் அருங் கயமும் போமிகத் தாதுப் பொருந்தி ஒக்குமாறு செய்து.

<u>கழிச்சலுக்கு:-</u>

பெரு மரப் பட்டை குடச பாலை வேர் இலை இரண்டும் சமன் இடித்து குடிநீர் தண்ணி எட்டோன்றுய்க் காய்ச்சி வடித்து அதில் வேரேரே வெங்காயம் சுக்கு, மிளகு,

அசமதாகம், சீரகம், கிராம்பு வகைத்த பொடி செய்த சுக்கு கசாயம் இட்டு குறுக காய்ச்சி இறக்கி குழம்பான வாறே எண்ணெயும் எருமைத் தயிரிலும் குழப்பி கொடுக்கவும் கழிச்சலும், மூலக் கிராணியுந் தீரும். அருணாசல ஈஸ்பரர் கிருபை யுண்டாக வேண்டும்.

கோழி முட்டைத் தோல் பற்பம் பண்ணுகிறது:-

பொரிச்ச முட்டை நருக்கி குப்ப மேனி சாரம் காசசங் கன்னிச் சாரம், எருக்கம் பாலும் விட்டு அரைத்து நாலு சாமம் அகலிலிட்டு உலர்த்தி முட்டை சாண் உயரம் அடுக்கி மேலே வைத்து அது மேலே சாண் உயரம் முட்டை அடுக்கி மேலே மைக்கல் மூடி மண் பூசிப் புடம் எரிக்க பற்பமாம். இதக்குத் தீரும் வியாதி அக்கினி மாந்தம், வயிற்று நோவு, குலை, கை கால் குடைச்சல், புளி தேப்பு உடம்பு கடுப்பு இதுகள் தீரும்.

தோஉடத்துக்கு நசியம்.

முசுமுசுக்கை இலையும், வெள்ளுள்ளியும் நசியம் பண்ணவும். குளிருக்கு

குளிருக்கு கலக்கம்:-

சுக்கு இரு கழஞ்சு, முருங்கப் பருப்பு கழஞ்சு, கருக வறுத்து கழஞ்சு வெண்காரங் கூட்டி நல்லெண்ணை கூட்டி அரைத்து சிமிளில் வைத்துக் கண்ணிலிட குளிர் மாறும்.

சீந்தில் பூவை எலுமிச்சம் பழச் சாத்தில் முட்டியிலரைத்து உலர்த்தி நல்லெண்ணை விளக்கேத்தி மை பத்தினத்தை வாங்கி நல்லெண்ணையில் குழைத்து சிமிளில் வைத்துக் கண்ணிலிட குளிர் மாறும்.

நேர்வாளப் பருப்பு எலுமிச்சம் பழச் சாத்தில் ஊறப் போட்டு மூன்று நாள் ஊறின பிறகு எடுத்து சுத்தி நெய்யில் உரைத்து இட குளிர் மாறல் தீரும்.

தாகத்துக்கும் குளிருக்கும் நசியம்:-

யுழும் புளி முக்கழஞ்சு, கோரோசினை பணவிடை கூட்டக் கொடுக்க தாகம் நிற்கும். சிறுகீரையும், திப்பிலியும் அரைத்து முழுங்கத் தாகம் நிற்கும்.

முத்தங் காசு நருக்கி ஏலம் பொடி செய்து நாழுழி நீரில் போட்டு மூழுழி யாகக் காய்ச்சி அதில் சந்தனமும் ருத்திராஉட்சமு மரைத்து கொடுக்கத் தாகந் தீரும்.

குப்பை மேனி சாத்தில் மிளகு உரைத்து நசியம் பண்ணிக் கொடுக்க குளிர் குலைப்புத் தீரும்.

சுரத்துக்கு குடிநீர்:-

கோரை ஒடு, பேய் புடலம், பேராமுட்டி, துலங்கு, சிறு முள்ளியோடு தோரு முத்தம் பாகுதவும் பற்படாகம் சீந்தில் தாரம் பரிவான காஞ்சொறி அஃபழக் சூட்டி ஆண்டயில் சைக்கிலேறு கோஃடம், தேக்கு ஆன பரி நிலவேம்பு, கொத்தமல்லி, நாயுருவி அப்பு வாயில் வார்க்க பெரு நளிர் ஆண்டு சீத் அப்பித்தே நிற்கும். சிவனார் தம் பங்காக செப்பினேமே.

நிலவேம்பு, அமுர்த முத்தம் செவ தேக்கு, கோஃடம், திப்பிலி, பற்படாகம், கடும் கண்டங் கத்திரியும், சிறு காஞ் சொறி, சுக்குடனே சேர் மருந்து சமன் கொண்டு இரு நாழி நீர் விட்டு எட்டொன்றாய் காய்ச்சி பிசைய காஞ்ச நீர் குடிக்க சன்னி வாதம், தாந்திரக்கும் மாந்தம், சரல மறள் தனிய சுரமும் பண்டு உள்ள சுரங்களும் போம். பாங்காகு கொள்ளார்க்கெல்லாம்.

<u>விஷ சுரம், தாந்திரக்கம் இஞ்சு கசாயம்</u>:-

நடுக்கு மெய் குலைப்போடு நகு நருந்திட அக்க ஆக்க அந்த வெம்பிஷர் அவர் கக்கு நாம் முரைக்கிறேம்.

புண்ணுக்கு:-

இலவ மரத்து இலையைக் கொண்டு வந்து தலைத்து சாறு பிழிந்து அதிலே சர்க்கரை போட்டு உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி எட்டு நாள் சாப்பிட பொட்டாய் உதிர்ந்து போம். இது கை கண்டது. நாவித நல்லான் சொன்ன வைத்தியம்.

வெள்ளை உதிரம் விழுகிறதுக்கு:-

உலை நெருஞ்சி கொண்டு வந்து இடித்து சூரணம் பண்ணி மோரிலாவது நீச்சத் தண்ணீரிலாவது ஒரு சாமம் இருக்க விட்டு தினம் இரண்டு வேளையும் மூன்று நாள் கொடுக்க தீரும்.

கரையாப்பு கடி கட்டிக்கு :-

கோழி முட்டை இமைச்சு கட்டி மேல் தடவி சுண்ணாம்பு கல் பொடி போட பிடிக்கும். கட்டி கரையும். செம்பவெலையை அவைச்சு சாறு பிழிச்சு நல்லெண்ணை விட்டு கலந்து கொடுக்க நேசருக்கு வெள்ளை உதிரும். மூன்று பொழுதில் நிற்கும்.

சீரகம் பலம்.க, சீனி சர்க்கரை பலம்.க இது இரண்டும் பொடி பண்ணி புளியிலை சாறு படி இரண்டும் கலந்து கிட்ட வைத்துக் கொண்டு தயிரிலே வார்த்து அந்த சூரணம் குடிக்கவும். இப்படி மூன்று பொழுது குடிக்க நிற்கும்.

காமாலைக்கு மருந்து:-

கரிசலாங் கண்ணி கீழா நெல்லி கோவை இலை மூன்றுங் கொண்டு வந்து அரைத்து தயிரிலே கொடுக்கவும். இதுக்கு பத்தியம் தயிரும் சோறும். உப்பு புளி ஆகாது. ஆதண்டை இலையை கொண்டு வந்து கொடுக்க காமாலை தீரும். பாலிலே கொடுக்கவும். கள்ளா ரியிலே கொடுக்கவும்.

கிட்டம் கொண்டு வந்து இடித்து கரசலாங் கண்ணி சாறு விட்டு புடம் போடவும். எடுத்து நாய்த் துளசி ரசம் அம்மான் பச்சரிசி முசுமுசுக்கை சாறு இதுகளில் புடம் போடவும்.

பாண்டை நோவுக்கு:-

கடுக்காய் பொடி பலம்.உ, கிட்டம் பொடி பலம்.உ, ரசம் விராகனெடை.உ, பருத்தி இலைச் சாறு விட்டரைக்கவும். மேல் அனுபானம் இல்லை.

ஊலைக்கு மருந்து:-

பெக்கி மருந்து பலம்.ங, அகத்திச் சாறு விட்டரைத்து உருண்டை பண்ணி கொடுக்கவும். கச்சை பிரமாணம் ஊசிக் காந்தம் பலம்.எ, சீரகம் பலம்.உ, மிளகு பலம்.க, சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, தாளிச பத்திரி பலம்.க, லவங்கப் பத்திரி பலம்.க, லவுங்கம் பலம். சாதிக்காய் பலம்.க, சாபத்திரி பலம்.க, கத்தாழ மடல் விட்டு அரைத்து உருண்டை பண்ணி கொடுக்கவும்.

நாட்டு சர்க்கரை நெய் சேர்.க, விடூத்துக்கு மை

விடூத்துக்கு மை:-

சாதிலிங்கம் விராகனெடை.க, கெவுரி விராகனெடை.க, கெந்தகம் விராகனெடை.க, அரிதாரம் விராகனெடை.க, காயம் விராகனெடை.க, ரசம் விராகனெடை.க, நேர்வாளம் விராகனெடை.க, சுக்கு விராகனெடை.க, மிளகு விராகனெடை.க, தரிசி விராகனெடை.க, வெங்காரம் விராகனெடை.க, சக்கு விராக

பூவத்தி பழம் விராகனெடை.க, மருது விரை விராகனெடை.க இந்த வகை பதிமூன்றும் வேப்ப எண்ணெய் விட்டு எருக்கம் பால் விட்டு ஐந்து சாமம் அரைக்கிறது.

நேர்வாளம் விராகனெடை.உ, ரசம் விராகனெடை.க, துரிசி விராகனெடை.க, வெள்ளெருக்கம் வேர் சுட்டுக் கட்டி வேப்பெண்ணெ விட்டு அரைக்கிறது. பேதி

பேதியாகிறதுக்கு:-

வெள்ளைக் காக்கணன் வேரைப் பசுவின் பாலில் அரைச்சு குடிக்க பேதியாம்.

தலை உடைச்சல் இடுப்பு உடைச்சலுக்கு:-

துவரம் பருப்பும், உப்பும் அரைச்சுப் பத்துப் போட தீரும்.

மூல நோவுக்கு மருந்து:-

சாதிக்காய் பசு மஞ்சளும் அரைத்து பூசவும். நன்னாரி வேர் பாலில் உரைத்துப் பூசவும். கஞ்சா வேரும் காத்சொறி வேரும் அரைத்துப் பூசவும். மாத்தை வனனிலை அடுக்கி கட்டவும்.

எரிகுன்மத்துக்கு மருந்து:-

மிளகு, உள்ளி அரைத்து பாதி பாதி இதுக்கு சமன் விளாயிலை அரைச்சது இந்த மூன்று வகையும் வெள்ளாட்டு வெண்ணெயில் குழப்பி கொள்ளவும். இதுவும் ஒரு பிடி புன்னைக்கும் ஒரு பிடி கல்லுப்பும் கால் பிடி மிளகும் இந்த வகையும் இள வறுவலாக வறுத்து இடிச்சு வஸ்திர காயம் பண்ணி கொள்ளி கொள்ள தீரும்.

நீர்க் கட்டுக்கு மருந்து:-

ஏலம் காசுக்கட்டி, திப்பிலி முக்காலரைத்து முக்கால் இள வெந்நீரில் குடிக்க எல்லா நீர் விகாரமும் உதிர நோக்காடும் கல்லும் போம்.

குடல் வாதத்துக்கு:-

வில்வலை வேர், அரிசுக வேர், பெருங்காயம் இந்துப்பு, உள்ளி வசம்பு இலுப்பை புன்னைக்கு விளக்கெண்ணெயில் குடிக்கவும்.

இருமலுக்கு நெய் பண்ண:-

ஏலம், லவங்கம், அதிமதுரம், கோஷ்டம், திப்பிலி கிராம்பு, முந்திரிப் பழம், அறி பேரீச்சம் பழம், நாகப்பூ, செண்பக மொக்கு, சாதிக்காய், சாபத்திரி சித்தரத்தை விழலரிசி தேத்தாங் கொட்டை பலம்.க, முறை மீந்தது குழைச்சு கட்டவும்.

தாமரை லாயம், தண்ணி முட்டான் கிழங்கு அமுர்த வள்ளிச் சாறு முன்னுாழி நெய் படி.உ, கலந்து மருந்து பொடி எல பதத்திலிறக்கி நக்க இருமல் தீரும்.

இருமலுக்கு மருந்து:-

பால் எலுமிச்சம் பழம்.௰, சீரகம் பலம்.க, தாளிச்ச பத்திரி பலம்.க, சுக்கு பலம்.க, கடுக்காய் பலம். தாளிக்காய் பலம்.க நெல்லிப் பருப்பு பலம்.உ, கடுகுரோகணி பலம்.க, சீயக்காய் கொழுந்து பலம்.க, எள்ளை பலம்.க, சதிர கள்ளி பால் பலம்.௨, வெங்காயம், வெள் வெங்காயம் பலம். கார்போக அரிசி பலம்.௩, கருஞ்சீரகம் பலம்.உ, குரோசனி ஓமம் பலம்.உ, நீரடி முத்து பலம்.உ, வசம்பு பலம்.உ, தும்பருஷம் பலம்.உ, செருபபிடை பலம்.க, சிலந்தி நாயகம் பலம்.க, கோழியவரை கொட்டைக் கறந்தை முசுமுசுக்கை உத்தாமணி துளசி வல்லாரை இலை வங்கா இலை விடத்தறு கிருந்தி சூரிய கிருந்தி சிறகீரை, கஞ்சாங் கோரை;

திப்பிலி பலம்.உ, மோடி பலம்.உ, தம்பராஷ்டம் பலம்.உ, மிளகு பலம்.உ திரி பலம். ஓமம் பலம்.ங, சுக்கு பலம்.உ, சதகுப்பி, வாய்விளங்கம் பலம். , செவ்வியம் சித்திர மூலம் பலம்.ங, லவுங்கப் பட்டை பலம்.க, லவுங்கப் பத்திரி பலம்.க, லவுங்கம் பலம்.க, சாதிக்காய் பலம்.க , சாபத்திரி பலம். , அகில் கட்டை பலம்.உ, வெட்டி வேர் பலம்.உ, அமுக்கிறுங் கிழங்கு பலம்.க, தேத்தாங் கொட்டை பல கள்ளி முட்டான் கிழங்கு பலம். தேன் சேர்.க மேல் செய்முறை முடிவு இல்லை.

நிலத்சோதி என்கிற மேகம்:-

கோரோசனை பணவிடை.அரை, ஆவாரை விரை விராகனெடை மூன்ற பதினாறு பணவிடை நிலத் சோதியும் நெல்லிக்காய், கெந்தகம் இரண்டரை விராகனெடை ஏலம் விராகனெடை.உ எருமைத் தயிரிலேஅரைத்து மண்டலங் கொள்ளவும். பத்தியம் முசிட்டை இலை, காரை இலை, அவரம் பருப்பு, வாழைப்பூ கத்திசரில் எருமைத் தயிர் கூட்டவும். புளிப்பு தவிர்க்கவும். நல்லெண்ணை விளக்கெண்ணை கூட்டி முழுகவும்.

நிலத் சோதி பிரமியமாய் விழுகிறதுக்கு:-

சீரகம் மாடையிடை, ஏலம் இரண்டு விராகனெடை பொடி செய்து வாழைப்பூ சாற விட்டு அரைத்து அரை மண்டலம் உள்ளுக்கு கொள்ளவும். பத்தியம் சிறுகீரை தண்டு, பச்சைப் பயறு, முருங்கையிலை, புடலங்காய், பீர்க்கங்காய், பசுவின் பால் கூட்டவும். புளிப்பு தவிர்க்கவும். நல்லெண்ணை விளக்கெண்ணை நெய் கூட்டி முழுகவும்.

சந்த மேகத்துக்கு:-

சீந்தில் கொடி தலைவத்து சார பிழிந்து முள் மருந்து கட்டிக் கொடுக்கவும்.

நிலத் சோதி என்கிற பிரமியம்:-

கருப்பத் சாறு போலே நீர் இறங்கும். இதுக்கு அரை விராகனெடை மூன மருந்து கூட்டி இள வெந்நீரில் கொடுக்கவும். அரை மண்டலம் பத்தியம் முள்ளங்கி கிழங்கு புடலங்காய், பீர்க்கங்காள் பசுவின் மோர் கூட்டிக்கவும். புளிப்பு தவிர்க்க

நீர் பிழிவுக்கு:-

ஆனை நெருஞ்சி ஒரு தழு கொண்டு வந்து உலர்த்தி கொட்டெது முட்டை மாட கொண்டு வந்து இது,இரண்டும் பிறந்த சுருபமாயிருந்து கொண்டு அடுக்கு மேல் அடுக்கி இரு புறமும் தீப் போட்டு சுட்டு வெந்த பிறகு இரண்டு சாம்பலும் ஒன்றாய்ப் பிசைந்து புதுப் பல்லாயில் தண்ணீர் கொண்டு வந்து ஒரு பிடி சாம்பல் போட்டு முப்பகம் இருந்தால் தண்ணீர் சுவறும். அந்த தண்ணீரிலே உழக்குத் தண்ணீர் இறுத்து குடிக்கவும். ஐந்து நாள் குடிக்கத் தீரும். தாகம், உழலை, நீர் இறங்கிறது எல்லா அடங்கி விடும்.

கடி திமிருக்கு:-

அவுரி இலை, எலுமிச்சம் பழம், நல்ல சந்தனம், இது மூன்றும் அரைத்து பசுவின் பால் காய்ச்சி புரை குத்தி தோய்ச்ச பிறகு மேல் எடுத்து அரைத்த சந்தனத்துடனே பிசைந்து கடி மேல் பூச ஏழு நாள் பூச கடி மறையும்.

உஷ்ண வாய்வுக்கு:-

கீழா நெல்லி, சமூலகமும் வேப்ப யீர்க்கு நா நுனீர்க்கு ஒதியிலை யீர்க்கு கரு

சேசுபதி* வேப்பிலையீர்க்கு இந்த யீர்க்கு ஐந்து பிடி சிறுக அரிந்து பதமாக வைத்து மூன்று நாளையில் புளிச்ச மோர் படி.உ, வார்த்து மருந்தில் அத்தி காய்ச்சிலும் மோர் முறிந்து போம். அதிலே அரைப்படி யெடுத்துக் கொடுக்கவும். வயிறு கழியும். வெந்நீர் வார்த்துக் கொண்டு மிளகு நீரும் சோறும் சாப்பிடவும்.

திப்பிலி பலம்.உ, சாதிக்காய் பலம்.உ, சாபத்திரி பலம்.க, லவுங்கம் பலம்.க, மிளகு பலம்.க, ஓமம் பலம்.க, பனைவெல்லம் சேர்.௨, நொச்சிலைச் சாறு படி.உ, இந்த சாறு சட்டியில் வார்த்து காய்ச்சி வெல்லம் போட்டு துழாவி மருந்து வகையும் அரைத்து பொடி பண்ணி கூடப் போட்டு துழாவிக் களிப்பாகு பாலே ஆன பிறகு இறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் சாப்பிடவும். ஒரு வாரம் சாப்பிட்டால் முன்பு சொன்ன வியாதி எல்லாம் தீரும்.

<u>பிணிசிக்கு மருந்து</u>:-

சித்தாமணக்கெண்ணெயில் கரிசலாங் கண்ணி சாறு பிழிந்து தலைக்குத் தேய்ச்சு பிறகு எண்ணெ தேய்த்துக் கொண்டு தொண்ணூறு நாழிகை இருக்க விட்டு அரிந்சி தாள் இட்டு முழுகவும். இப்படி மூன்று முறை முழுக பிணிசு போம்.

<u>உள் மாந்தைக்கு: சுர விகாரம் குதகத்தின் பேரில் வந்தால்</u>:-

வெத்திலை வேர், நெய்தனில் கலந்து கொள்ள குணமாம்.

திச மூல கசாயம்:- வில்லை வேர், தழுதாழை வேர், பாதிரி வேர், குமிழம் வேர், சித்தாமணக்கு சிறு மல்லி, வேர், பெரு மல்லிகை வேர், நிலப்பனை, முக்கா வேளை, சிறு நெருஞ்சில், சுக்கு, கண்டங் கத்திரி வேர், விஷ்ணு கிராந்தி இதுவெல்லாம் சமன் கூட்டி கசாயம் வைத்து கொடுக்க சுர விகாரம் தீரும்.

<u>வயிற்று நோவுக்கு</u>:-

ஆத்து தும்மட்டி பழம் தோல் எடுத்துக் கொண்டு சுக்கு பலம்.க, திப்பிலி பலம். , திப்பிலி மூலம் பலம்.க, மிளகு துட்டெடை .க, வெள்ளாட்டுக் கோமியம் வார்த்து இது வெல்லாம் கூடப் போட்டு இடிச்சு பாகம் பண்ணி காலமே ஒரு குளிகை கொள்ளவும். வல்லை குணம் நீர்க் கோவை கரைந்து விடும். இப்படி அரை மண்டலம் கொள்ள வியாதி தீரும். பத்தியமில்லை. மணி புங்கம் பழம், பத்து பழம், தண்ணீர் பிசைந்து காலமே குடிக்கவும்.

<u>பிரமியத்துக்கு மருந்து</u>:-

பொடுதலை துவைத்து உழக்கு சாறும், உழக்கு நல்லெண்ணெயும் கலந்து கொடுக்கவும். மூன்று நாள் கொடுத்து மறு பத்தியம் பிடிக்கவும். சுடும் வெந்நீர் உடம்பிற்கு வார்த்துக் கொண்டு புன்னைக்குள் கறியும் எண்ணெயும் வார்த்துக் கொண்டு அசனம் பண்ணவும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். உட்டின பிரமியமெல்லாந் தீரும்.

அறிஞ்சில் வேர்ப் பொடி கறந்தை வேர்ப் பொடி, சங்கம் வேர்ப் பொடி முக்கா வேளை பொடி, சாறணையிலைப் பொடி, சுக்கு, மிளகு, ஓமம்; இவை சமனாக பொடி செய்து மோரிலாவது தேனிலாவது குழைத்து இட பிரமியம் நீரழிவு, மேகப் விழுகிறதுக்கு

விடத்தேரி யிலை ஒரு பிடி, சாதிக்காய், பாதி இது இரண்டும் அரைத்து எருமைத் தயிரில் குழப்பி கொள்ளவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும். பத்தியம் பசுவின் நெய், எருமைத் தயிர் பச்சைப் பயறு முளைக் கீரை, ஆகும். மேகம், பிரமியம், எலும்புருக்கி சகல கழிச்சலும் தீரும்.

ரத்த பிரமியத்துக்கு:-

பெருங்காயம் இரண்டு பணவிடை எள் ஒரு பணவிடை மிளகு, மரத்தக்காளி ஒரு பாக்களவு கூட்டி அரைத்து ஆறு நாள் கொடுக்கவும். வெகு மூத்திரம், பெரும்பாடு, எலும்புருக்கி கீழ் பிரமியம் இதுகளுக்கு கொடுக்கவும்.

இரண்டு கோழி முட்டை அளவு கரு கூட்டி கையாந்த கரை உடைக்க இரண்டும் மத்திச்சு கொடுக்க மேகம் தீரும்.

விரை வாதம்:-

புறச் சட்டியில் பழங் கூரை பாகு வைக்கல் கட்டு. அந்த சாம்பலில் அப்ப இட்ட கழுதை லத்தி பிசைந்து வடியிட்டு கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். தண்ணீர் வடி யிட்டுக் கொடுக்கவும்.

மலம் சலம் அடைத்த பெருக்கு மருந்து:-

ஓதியம் பிசின் வெங்காரமும் இள வெந்நீரில் கொடுக்கவும். எலிச்செவி பிடுங்கி வந்து அவைத்த ஒரு படி பசுவின் பாலில் பிசைந்து வெல்லங் கலந்து கொடுக்கவும். வெள்ளரி விரையும், வெங்காரமும் இள வெந்நீரில் கலந்த கொடுக்க விடும். வலம் சலம் விடும்.

நாலு காச்சலுக்கு மருந்து:-

நல்ல தும்பை இலையைக் கசக்கி ஆழாக்கு சாறு மூன்று நாள் கொடுக்கவும். சாட்டறணைக் காய் பிடி காலை அரைத்து வெந்நீரில் கலப்பி மூன்று நாள் குடிக்கவும். முக்கா வேளை சமூலம் ஒரு தடு பிடுங்கி வந்து காயப் போட்டு அடிச்சு பதக்கு தண்ணீரில் அடைத்து காலி தண்ணீர் வார்த்து முப்பது நாழிகை ஊறப் விட்டு பிறகு அடுப்பில் வைத்த மூன்று படியாக காய்ச்சி அடுப்பில் உமி போட்டு அனலிலே இருக்க விட்டு தினம் கால்படி இறத்த கோரோசனை விராகனெடை கரைத்து மூன்று நாள் இரண்டு வேளையுங் கொடுக்க காச்சல் தீர்ந்து போம்.

சீரோ வாய்வுக்கு மருந்து:-

திப்பிலி பலம். சாதிக்காய் பலம். , காரம் பலம். வ, சாபத்திரி பலம்.வ, செண்பகம் பலம்.வ, வில்வ பத்திரி காய் பலம்.வ, நொச்சில் சாறு படி.க, நெல்லிக் காய் சாறு படி.௧, சிறு கீரை சாறு படி.க, பொன்னுங்கன்னி சாறு படி.க, மஞ்சள் பலம். சாறு வகையெல்லாம் ஒட்டு சட்டியில் வார்த்து கொதிக்க வைத்து குமிழி பதத்தில் பசுவின் நெய் படி.க, வார்த்து கருகு திரண்ட பக்குவத்தில் மஞ்சள் பொடி அவி தைலம் வடித்து தலைக்கு தேய்ச்சு முழுகவும். நாலு நாளைக்கொருக்கால் நாலஞ்சு முறை முழுகவும்.

சயித்தியத்தின் பேரில் கழுத்து நரம்பு பிசித்தால்:-

மலை வேம்பு, இலையையும், ஒதி இலையும் அவித்து வசித்து ஒத்திடவும்.

காது அடைப்புக்கு:-

நொச்சில் சாறும் எண்ணெயும் கொதிக்க வைத்து நாலு முறை முழுகவும். காது அடைப்பு வாங்கும்.

கல்லெரிப்புக்கு:-

உப்புலி பூண்டு துவைத்து வெள்ளாட்டுப் பாலில். அரைத்து குடிக்க கல்லு விழும். மியந் தண்டு மேல் புறணி சீவிப் போட்டு அதின் பட்டையை நசுக்கி உழக்கு காடியில் பிசைந்து

கொட்டைப் பாக்களவு மிளகும் வெள்ளுள்ளியும் அரைத்து கரைத்து கொடுக்க இரண்டு நாழி கையில் கல்லு விழும். கல்லு உடைந்து விழ புனலி தன்று நறுக்கி ஆழாக்கு சாறும் காசிடை நல்லெண்ணெயும் கலந்து மூன்று நாள் கொடுக்க கல்லு உடைந்து விழும்.

நெருஞ்சில் வேர், சிறு பூளை வேர் இவை ஒன்று நாலு கழஞ்சி பிரமாணம் அரைத்து பசுவின் பாலில் கரைத்து குடிக்க நோவு தீரும்.

எரி குன்மத்துக்கு :-

சக்கரை பலம். சீரகம் பலம்.௨, முசுமுசுக்கை பலம்.௧ இந்த மூன்றும் சர்க்கரை முந்தி கொடுக்க பிர்க்கன் இலை மடிச்சுக் கொடுக்கவும். சீரகம் பிறகு கொடுக்கவும். இப்படி பதினொரு நாள் கொடுக்கவும். குலை எரிவு தீரும் பிறகு மூல மத்துப் போக அவ்வேளை சமூலம் கொண்டு வந்து அந்த தரம் இடித்து அந்த தரம் உலர்த்தி சூரணம் பண்ணி சீலை வடி கட்டிக் கொண்டு வைத்துக் கொண்டு வெள்ளாட்டுப் பாலிலாவது, பசுவின் பாலிலாவது இள வெந்நீரிலாவது வெருகடிப் பிரமாணம் கூட்டி பதினொரு நாள் கொள் எரி குன்மம் மூல மத்துப் போம்.

சத்தி குன்மத்துக்கு :-

கள்ளிப் பால் நாழி காச்சத் திரளும் குறுணி பசுவின் பாலில் ஒரு காசிடை கள்ளிப் பால் கிட்டத்திலே போட்டுக் காய்ச்சி திரளும். தயிர் ஆனவாறே எடுத்து வைத்துக் கொண்டு சத்தி குன்மத்துக்கு கழஞ்சி தேனில் கொள்ளுவது. இப்படி பத்து நாள் கொள்ள தீரும். மத்த குன்மத்துக்கு இதில் கழஞ்சி பால் பனை வெல்லத்தில் கொள்ளவும். எரி குன்மத்துக்கு கழஞ்சி வெண்ணெயில் கொள்ளவும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

பிரமியத்துக்கு நெய் பண்ணுகிறது :-

பசுவின் நெய் ஒரு படி, நல்ல சீரகம், சர்க்கரை பலம்.௨ கத்தாழஞ் சோறு தேங்காய் மாதிரி நெய் காய்ச்சே கத்தாழஞ் சோறு போட்டு மூன்றும் கொதிச்ச பிறகு சீரகமானவைப் போட்டு பிறகு சர்க்கரை போட்டு கறண்டியாலே கிளறி இறக்கி வைத்துக் கொண்டு தினம் இரண்டு வேளையும் எலுமிச்சங்காய் மாதிரி சோறும் கறண்டி நெய்யும் கொள்ளவும். இப்படி பத்து நாள் கொள்ள வச்சிர சரீரமாம். பத்தியம் பால், நெய், துவரம் பருப்பு, முருங்கைஇலை கூட்டவும். உப்பு கூட்டவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

மருந்தீட்டுக்கு மருந்து :-

முசுட்டை இலை ஒரு பிடி இலையை அரைத்து பின்னை வெத்தலைக்கு சோறப் பிற விரியதாகும் அறிந்து நாபி வயிற்றி தேசி நீர்புக்கரை பொருங்கி நிரம்பியே முளைத்தேங்காய் போல் எர்க்க சல்லு முத்தி மிகவே உதிர் நாளில் நீர்ப் பெருகி திருப்ப தென்னம் நிதம்பமாம் சூலை தானே. பின்னை பெத்த விடந் தனில் பெருக்க யோனி தனில் வாய்வு உள்ளே அடங்கிச் சலமிரத்தம் ஒதுங்கிப் புரை பட்டிருப்பதனீர் தள்ளி சலமே போகாமல் தடை பட்டிருக்கதனீட்டல் அடை பட்டு மெள்ள கனத்தக்கு பிறமோடும் மிகுத்த நிதம்ப சூலையாமே.

இருக்கு மருந்து :- பாம்பு கண்டம் குங்கிலியம் பருக்க ஏலம் பொடி செய்து மேல் முடிவு இல்லை.

வயிற்று நோவுக்கு மருந்து :- நூக்கு தும்மட்டிக் காய்.உ, மணத்தக்காளி சாறு உழு கு

உழக்கு எருமை சாணிப் பால் உழக்கு, சித்தாமணக்கெண்ணை ஆழாக்கு கருஞ்சீரகம் பலம். தும்மட்டிக் காயை மூன்று நாள் உப்பையிலே புதைத்து எடுத்து திப்பியை பிழிந்து போட்டு பிடவையில் தீத்திக் கொண்டு சட்டியில் வார்த்துக் கொண்டு அடி பத்தாமல் துழவிக் காய்ச்சிக் குழகி வரச்சே தக்காளி சாறு வார்த்து பிறகு சாணிப் பால் வார்த்து குழகி மெழுகு பதமாக பிறகு விளக்கெண்ணை வார்த்து கிளறி இறக்கின பிறகு கருஞ்சீரகம் பொரிச்சு பொடி செய்து கூடக் கிளறி எண்ணை பல்லாயில் வழிச்சுக் கொண்டு மூன்று மிளகு மாதிரி நல்ல வெல்லத்தில் வைத்துப் பொரி மாவில் பிரட்டி கொடுக்கவும். வயிறு பிடுங்கலெடுத்து மிஞ்சினால் கொதிக்கிற கஞ்சியில் எருமைத் தயிராவது மோராவது கூட விட்டு எலுமிச்சம் பழம் சாறு விட்டு கொடுக்கவும். அதிலும் மிஞ்சினால் சாதிக்காய் சாதிபத்திரி, நல்ல தண்ணீர் நாழி கூட விட்டுக் காய்ச்சி அரைத்துக் கொடுக்கவும். பத்தியம் பால் சோறுக் கருவாடு மிளகு பழம் புளி கருஞ்சீரகம் பொரிச்சு தூவி இறக்கி வைத்துக் கொண்டு மருந்து தின்னுத அன்றைக்கு விடிய ஒரு நாழிகை என்னத் தின்னவும். இந்தப் படி தின்னச்சே முந்த மூன்று நாள் கொடுத்து பிறகு ஒன்றை விட்டொரு நாள் கொடுக்கவும். பிறகு மூன்று நாளைக் கொருநாள் கொடுக்கவும். வியாதி சதை, சதையாக விழுந்து போம்.

பத்தியம்:- நாய்த்தங்காய், உப்பு, புளிப்பு கூட்டலாம்.

நீர் சுரக்க மருந்து:-

வெள்ளைக் குங்கிலியம் பொடி செய்து பதக்கு தண்ணீரிலே போட்டு நல்லெண்ணை கால்படி வார்த்து மத்தாக்கொண்டு கடைந்து வெண்ணை எடுத்துக் கொண்டு அதிலே சர்க்கரை போட்டு உள்ளுக்கு மூன்று பொழுது கொடுக்கவும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

நீர் சுரக்க பிரமியம் கண்டவர்களுக்கு அந்த க்ஷணம் அந்த சுறுக்கை நிறுத்த மருந்து:-

பாலட்டை இலையைக் கொண்டு வந்து பசுவின் மோரில் கொடுக்கவும். ஆவாரம் பட்டையை வெட்டி வந்து ஊறப் போட்டுத் தண்ணீர இறுத்துக் கொடுக்கவும் நிற்கும். கடும் பத்தியம்.

அரையாப்புக்கு:-

பனைவெல்லம் பாக்களவு சித்திர மூலம் ஒன்றரைப் பாக்களவு அந்தப் பிரமாணம் வெல்லம் கூட்டி அரைத்து நல்லெண்ணையில் குழப்பி கொடுக்கவும். ஆறு நாள் கொடுக்கவும். கை கண்டது. உப்பு, புளிப்பு தவிர்க்கவும். நெய் கூட்டவும்.

இதுவும்:-

நல்ல வெல்லமும், பூலாத்திக் கற்பூரமும் பொதிந்து ஆறு நாள் இரண்டு பொழுது கொடுக்கவும். இதற்கு அரையாப்பு, அண்ட வியாதி மேகம், முழல் வாதம் தீரும்.

வெள்ளெருக்கு கற்பம் வசனம்:-

ஞாயிற்றுக் கிழமை உதயம் பொழுதிலே செடி பக்கத்தில் போய் சாம்பிராணி தூபம் கொடுத்து பழம் பாக்கு வெற்றிலை கொண்டு போய் படைத்து சாம்பிராணி தூபம் கொடுத்து திரு மஞ்சனம் விட்டு நைவேத்தியம் பண்ணி சமூலத்துடனே வேர் அறுமல் வெட்டிப் பிடுங்கிக் கொண்டு வந்து சமூலமும் நிழலில் உலர்த்தி சூரணமாக இடித்து பதனமாக வைத்துக் கொண்டு அனுபானம் கொள்ளும் விரகம் தேனில் மூன்று மாசம் நாள் ஒன்றுக்கு வெருகடிப் பிரமாணம் கொள்ள செய்கட்டம் கருங் குட்ட மெய்சப் பட்டதெல்லாம் தீரும். இதற்கு பத்தியம் பசுவின் பால் வெள்ளாட்டுப் பால் நெய் ஆகும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

வென்னீர் வார்த்துக் கொள்ளவும். இந்த கற்பம் ஒரு வெரு கடிப் பிரமாணம் ஒரு மண்டலம் சிறு நீரில் கொள்ள வியாதி யென்னப் பட்டதெல்லாம் தீரும். இதக்கு பத்தியம் பசுவின் பால், நெய் ஆகும். மத்தொன்று மாகாது. பாக்கு ஆகாது. இது கை கண்டது. இந்த கற்பம் ஒரு வெரு கடிப் பிரமாணம் கரசலங் கண்ணி சாத்தில் ஒரு மண்டலங் கொள்ள பாண்டுவ காமாலையுந் தீரும். இதக்குப் பத்தியம் பசுவின் பால் வெள்ளாட்டுப் பாலாகும். மத்தொன்று மாகாது. இந்தக் கற்பம் ஒரு வெரு கடிப் பிரமாணம் இருபத்தைந்து நாள் கொள்ள வாயாலே ரத்தம் எடுக்கிறது தீரும். இதக்கு பத்தியம் பசுவின் பால், நெய் ஆகும். மத்தொன்று மாகாது. அசனம் பண்ணின பிறகு பாக்கு ஆகும். இந்த கற்பம் சிறுக மாலை யிலை இரண்டு மண்டலம் வேப்ப எண்ணையில் கொள்ள கடி என்னப் பட்ட வியாதி யென்னப் பட்ட தெல்லாம் தீரும். திமிர், எரிப்புகள் எல்லாம் தீரும். இதக்கு பத்தியம் வென்னீர், இந்துப்பு, அவரம் பருப்பு, மிளகு, நீர் ஆகும். மிளகு நீருக்கு இந்துப்பு போட்டுக் கொள்ளவும். மத்த உப்பு ஆகாது. இந்த கற்பம் நாற்பத்தெட்டு நாள் வெரு கடி பிரமாணம் காசலங் கண்ணி சாத்தில் சிறுநீர் வார்த்து நருக்கி பிழிந்த சாத்தைக் கொள்ள பாம்பு கடிச்சால் ஏறாது. கடிச்ச பாம்பு சாகும். இதக்கு பத்தியம் பசுவின் பால், நெய் கொஞ்சமாம். மத்தொன்றும் ஆகாது. இந்தக் கற்பம் வெரு கடிப் பிரமாணம் நல்லெண்ணையில் ஒரு மாதம் கொள்ள பேய் நரி; எலி பூச்சி இந்தக் கடிகள் இந்தக் கற்பம் ஒரு வெரு கடிப் பிரமாணம் வெள்ளாட்டுப் பாலில் இருபத்தொரு நாள் குடிக்க உடம்பு கருப்பு சோகை எல்லாம் தீரும். இதக்கு பத்தியம் பசுவின் பால், வெள்ளாட்டுப் பாலாகும். இந்த கற்பம் ஒரு வெரு கடிப் பிரமாணம் வெப்ப எண்ணையில் இரண்டு மண்டலங் கொள்ள படர் தாமரை ஆனை நெருஞ்சி தீராப் பெருவியாதிகள் இப்படிப்பட்டதுகள் எல்லாம் போம். இதக்கு பத்தியம் பசுவின் பால், வெள்ளாட்டுப் பால், நெய் ஆகும். இந்த கற்பம் மூன்று மாசம் விராகனெடை பிரமாணம் தேனில் கொள்ள காசரோகம், இருமல் எனப்பட்டதெல்லாம் போகும். இதக்கு பத்தியம் பசுவின் பால், நெய் ஆகும். மத்தொன்றும் ஆகாது. இந்தக் கற்பம் ஒரு மாலையிலை பெண்டுகள் முருக்கு வந்த அன்று முதல் எட்டு நாள் பசுவின் பாலில குடிக்க மலட்டுப் புழு விழும். இதக்கு பத்தியம் பசுவின் பால், பசுவின் நெய் ஆகும். மத்தொன்றும் ஆகாது. இந்த கற்பம் அண்டை கன்றுடம் நீரில் போட்டுக் கொடுக்க உடம்பு சோகம் சோறு செரிக்கும்.

<u>கழிச்சலுக்கு மாத்திரை கட்ட</u>:-

நெட்ட பேய் முரட்டை இரண்டு ருக்கு குண்ணி மோர் வார்த்து அது மேல் துணி கட்டி இலை புட்டு வைத்து அதிலே சாதிக்காய், சாபத்திரி, லவங்கம், அதிவிடையம், மாதிளந் துளிர் நடுவே வைத்து மேல் சட்டி மூடி எரிக்க மோர் அவ்விடும் இலையை எடுத்து பிழிந்து அந்த கசாயத்தைத் திரும்பக் காய்ச்சி குழகின பிறகு அந்த கற்கத்தை அரைத்து அதிலே போட்டு கிளறி தேத்தான் விரை மாத்திரம் மாத்திரை பண்ணி அந்த இலைக் கசாயத்தில் தானே ஒரு மாத்திரை கொடுக்க எந்தக் கழிச்சலும் கொடுக்கவும் ராத்திரி கசாயம் பொரித்தகாய் ஒரு விராகனெடை கசாயம் போட்டு அபினி பொரிச்சு சிறுக மிளகு மாத்திரம் கொடுக்கவும்.

அகஸ்தியர் வாகடம்:

<u>கொடாசாலைப் பட்டை விபரம்</u>:-

<u>வடுவிலே கொல் முக சக்கை எக்கிறது</u>:-

கோடாசாலை பட்டையைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு சயித்தியத்தின் பேரில் இருமல் கண்டாலும் பின்னையும் சயித்தியத்திறோடே கூடினத்தைக் கெல்லாம் ஆகும். விஷத்துக்குமாம். பின்னையும் அவிழ்த்தங்கைக்குமாம். இருமலுக்கு இந்தப் பட்டையை அரைச்சு குடிச்சால் கையாலே பிடிச்சாப் போலே நிற்கும். நல்ல பாம்பு கடிக்கு இந்த பட்டையை அரைச்சு குடிச்சால் கையாலே பிடிச்சாப் போலே நிற்கும். நல்ல பாம்பு கடிக்கு இந்த வேரை அரைச்சு உள்ளுக் கொடுத்து கடி வாய்க்கும் பூசவும். பேய்ப் பீர்க்கம் வேர் தின்றாலும் நெறும்.

<u>அரளர் வேம்பு:-</u>

அரளர் வேம்புடன் ஆதித்த வார நாள் சென்று திரமாய் வேண்டு மூலிகைக்கு சித்தம் வைத்து சத்தி வந்து உரமாய் யத்தி செட்டு செடி தன்னிருகுந்து காப்பு கட்டி மந்தி வரலே பிடுங்கி வந்து சுமை கொண்டு வந்து நிழலில் உலர்த்தி இடியே யிடித்து சூரணம் வெகு கடி தாமிரண்டு போறு பேறுளித வாதம் சன்னி வாதம்.

கடித்த வண்டு கடி கரப்பான் காணக் கடிகள் சொறி குட்டம் வெடித்த பெரிய வியாதி நம்ம். விளைந்த குன்மம் விடும் நாவே.

<u>பேய் நாய் பேய் நரி கடிச்சதுக்கு மருந்து:-</u>

மைத்தம் இலையை தண்ணீர் வராமல் அரைத்து மூன்று நாள் மூன்று உருண்டையாக உருட்டி பச்சரிசி தவிட்டிலே பிரட்டி சிறு பாக்களவு முழுங்கவும். குளிர்ந்த தண்ணீரில் முழுகி மோரும் சோறும் அசனம் பண்ணி விக்கவும். மனிதர் பல்லும் மூலைப் பாலும் உரைத்து மூன்று நாள் கொள்ளவும்.

<u>சுளுக்குக்கு மருந்து:-</u>

தொண்டு வெங்காயம், நீர் முள்ளி வேராகும் அரையில் கட்டி மணலிலே படுக்கப் போட்டு பிரட்டி விட உருளும். திரும்பி வந்தவழி பிறட்டி இப்படி மூன்று நாளைக்குப் பிறட்ட விடும்.

<u>பெரும் பாட்டுக்கு:-</u>

தேள் கொடுக்கு இலை பறிச்சு வந்து அரிசியில் போட்டு இடிச்சு மூன்று பிடி பிடிச்சு கொடுக்க இப்படி மூன்று நாள் கொடுக்க கையிட்டு பிடிச்சாப் போலே நிற்கும். பத்தியம் உப்பு, புளிப்பு ஆகாது.

<u>சிரோ பாரத்துக்கு:-</u>

கண் சுழக்கென்று பத்த நீர் விடும். இதுக்கு சித்தாமணக்கு எண்ணெய் படி:உ, கருஞ்சீரகம் படிக இது இரண்டும் வசத்து வைத்து எண்ணெ வடித்துக் கொண்டு, தலைக்குத் தேய்ச்சு மூன்று நாள் மூன்று நாள் முழுகிப் போடவும். இப்படி மூன்று முறை முழுகினால் நோவு தீரும். கண் துலக்கமாம்.

<u>நாடி பார்க்கிற விதம்:-</u>

அன்னிய சேர்த்துமக்கச் சுடையாளம் உடம்பு வேர்க்கும். நள்ளென உமி நீரோடி நாவெழுமாதிருக்கும். ஒன்னிய சிறுநீர் தானும் உண்மையா விளைத்த விடும். மன்னி மூர் சேஷ்பந் தன்னை மனதினிலறிந்து கொள்ளே சொன்னுக வாதம் இரண்டும் பித்தமு மொரு காலோடி கள்ளமாய் புதரய் விம்மி கனக்கவே வாயு வென்றும் தேர்வற கோதையே பார் சிந்தனை மிகவுண்டெனச்சும் ஒன்னிய வாத பித்த தொந்த மென்றுரைக்கலாமே.

மிசைத்திடும் பித்தம் இரண்டு வாத மென்றே முந்த காட்டில் பசிந்தி
பசித்திடும் புளிப்பு வேண்டி காட்டிடே தலைம் பத்ர
இசைத்திடு முஉன்ன முண்டாம் இவ்வகை மிகவுந் தோன்றி
வசத்திடும் பித்த வாத தொந்திப் பாம் வகையில் மாதே.

மாதராம் பித்தம் இரண்டு சேத்தும மொன்ச மாகில்
நீருடல் தலை வறண்டு பிடறி நேர் திவு மெல்லாம் பேதமாய் வலி
பேதமாய் விழிநெரித்த மந்தரும் பெரித் காட்டும்
சோதில்ா பித்த சேத்துமம் தொர்திப் பின் குணங்கள் தானே.

நாவெழு சேத்துமம் இரண்டு வாதமு மொன்ச மாகில் மாவதிர சன்னி
சொன்னும் தலை நோவாம் வாய் தித்திக்கும் போசனஞ் செரிக்காத வாயசையாடும்
போத ஆாதோர் சேத்ம வாதம் தொந்திப் பாந் தெரிந்த கொள்ளே.
பாரித்த சேத்மம் இரண்டு பித்தமு மொரு காளோமல் கரித்த குளிர்ந்த கசி
வயநத மிக்க கும்பி நேரொாத்த தவவுண்டாம் மூலையும் நெருங்கிச் காட்டும் தீ
தெர்த்த சேத்தும பித்தம் தொந்திப் பாந்திரு நல்லாட்டி நல்ல தோர் வாத பித்தம்
டிவிரண்டு நாகம் புல்லிய பிலிங்கள் போல் போவதாம் வாத சேத்துமம் மெ
மெள்ளவே யோடி மத்சை பாம்பென விரைய ஒடும்
சொல்லிய பித்தஞ் சேத்துமம் தொன்னித்த பின்னே யட்டே
அட்டமாம் வாதந் தொப்புளா மிடும் தற்கு மேலே
யிட்ட நாள் விரலில் பித்தம் மிருந்திடும் மியல் தாகம்
மட்டமாம் குழலினளே மார்பினிட மாய்வைக்கும்
கட்டளையான சேத்துமம் கருதிய மூன்றீ் காணேன்.
காணு மிவ்வாக பித்த கிருப்படாதாகிற் கூடு. புஞமி பித்த சேத்துமத் தருப்பிடாதார்
ற் போது
நாளுட சேத்துமந் தான் கண்டத்தில் நஞு மப்பா ஊளியே குடி குலக்கு முயிர் பிழைக்
காதேவென்னே. எண்ணிய வார்த்தை சொல்வோர் மினிய கை மார்ப்பும் மூக்கும்
நண்ணிய செவியோடுந்தி நலம்பட குளிந்த காயில் திவ மாயுச்சி யங்கியா யெழி
செப்பு மோடில் முன்னில் கடிகை யஞ்சில் மரண மென்றறிந்திடாயே. அறிந்திடாய்
பித்தம் நின்ற வாத சேத்துமங் களங்கே சிறந்த தோர் தமரச்சதை நேர்பட வடித்தா
போலும் சிறந்த தோர் முகம் வெளுத்து மார்பது தடி போல் செய்தால் மறந்த நற்
கடிகை தொன்னூ றிலே மரணமாமே. மெய்யத பகல் வேதைய் பாய் மிரவு தாழ வே
பாயதோர் நாவறண்டு சேத்தும நாடி யாடி ஊ ய தோர் வயிறு நொந்து
மலங்கடி தலைசு மன்ன மெய்ய கண் பாபரந்த விழிக்கில் நாளிரண்டில் சாவே
சாவுட முதலைத்தை பின் நாளுக கடைந்த செய்யும் தாய் மரஞ் சுவாதஞ் செப்பில்
ஈதி நறந்த குமாசின்ன மாய தோர் மகான அக்க மென்னிவை அய்ந்து பேரும் போர்
ப்பு உத்திரந்தால் பிழையாதி எச்ச வாதம் தகமத்தில் தகமை சாத்திலோர் பட
விரைவிலேடி யழைத்திடில் போலிங்குக்கும் நேர் பட நம்பிரெண்டும் நெத்தியில் புடந்
திருக்கும்.

புடையுமே விலாவிரண்டும் பூர பூரென வெளுத்தி திடமுத நெஞ்சு நொந்து உச்சியுஞ்
சிறிது நோவாய்

கடியுமு மிருமலுண்டாய் கழன்ச வாய்நீர் கழுத்தும் முடியுமே தாகமுண்டாய் மழுக்கு
நீர் பாயுமன்னே

மின்ன நீருடல் பறக்கு மிவையுறடஞ் சுவாதம் சின்னத மறத்து மாறு தன்னி லெட்டு யுத்து
மூக்கு பிட்டலுந் தானெடுக்கு மின்னங்களே பொருத்து தொற மிட சவரேவுண்டென்மும்
தோன்று கீழ் வயறு விம்மி துகளறு மலசலாதி யுன்னியே கனிய வென்ன வொட்டார்
வானர வோர் கன கலிங்கி வலித்து கீழ் நோக்கிப் பார்க்கும் பொன்னெரு கண் சிவக்கும்
புரிதல மறஞ் சுவாதம் வேர திருஞ்சுவர்தம் நாலிலி வரியவே மகான மிகு காதி
மிர போர் புரிந்தோ னென கனத்திழை குந்தி தரிசிலேத்துமந்தான் செருமியே குறுகுறுக்கும்
போது சீறி பார்க்கும் குதறியே விழு மென்டித்து உறவரை மஞ்சுடைரைப் போலுடல்
நெக்கும் மூழிய வாங்கி பத்தியே வாங்கு மூள்ள் மலம் சலம் கனியப் பார்க்கிற குத்தன
மெந்தனவுங் கூறி கூப்பிட்டால் போத மில்லே யிட மயிலே நாலஞ்சு வாத மிதென்ன செப்பே.

செப்பிய வாதமஞ்சில் பெருக்குமேன மன்ன் சேருந்த பற பெரு பூவ செய்து
கடக்க நீர் தானே பாயும் மொப்புற கண் மூடாதே மேரேக்கு மொன் சீரமாதே.
மைப்படா விழி துடிக்கும் வாய் பல கால் பிளேக்கும் காது மிக்குணங்கள் சேரில்
கருதியே ஒன்றுங் கான மேலுரை தன்னில் மீளில் மீயஉஷியு மியம்ப மெய்தான்
சாலவே குளிர்தல் வெம்பல் தஞ்ர குளிர் விட்டாலன்மே சுகீ ஏலவாயிகை யித்தலுச்சி
யசியாகவே யகல் எய்திய உடம்பு வேச் சன்னி குத்தல் சேமித்தல் சைத்தல்
மைய்திகழ் கண்ணிலுளே வாய் வெழுப்பிடாதிருத்தல் செய்திடா யுறங்கி நெஞ்சு திடுக்கிடாக்
கண்ணீர் பாயாத் தைய்வமார் அந்திக் கசாயமும் அருந்திக்காரே. கார்த்திடா உச்சிவே
சன்னிருக்குதல் கண் பஞ்சோறு யொத்திடும் பித்த காடி யியம்புதல் வாத சிலேற்பனம்
கோற்திடா சேரவம் நாடி குடிகு காளா திருத்தல் நாசி நீர்த் தடை படாதாகில்
நிறம் செயம் புரிந்து பாரே.

புரிந்து மேன் சோர்ந்திடர்தே போற் விழி சிவப்பேறாதே வெந்திடு முடல்
நாறுதே வரி விழி நீர் பாயாதே கரிந்து நாவறண்டிடாதே தகுப மிரையா தொகிற்
வருத்தியே பரிகாரஞ் செய் ஹாதமை பாகருனே பாகான. மொழி மாதே. கேள்
பரபலாதிருத்தல் மெய்தான் வாகனன் செவி கேளாதே மந்த மில்லாதே யாதல் தாகமா
யிறமைத்து நெத்தி வேர்வை தா நேடாதே செய்தால் லேகதம்பிரான்றுனே விட்டேன்
நெய்தி நீ மருந்து செய்யே.

செய்தியாம் யுறங்கி நெஞ்சம் திடுக்கிட கண்ணீர் பாய
மெய்யது குடிய நெத்தி வேத்திடா விழி நீர் பாய
கையது நாடி சேத்தமன் கார்த்திடா கப மிருத்தல்
றையய திருப்பாவை தன் வரைந்த நா ர்ப்பம் தப்பாதே.

<u>நாடி பரிட்சை: நாடி பார்க்கும் விதம் அறியும்படி</u>:-

ஆதியிலே சகலமான வியாதிக்கும் நாடி பார்க்கிறது உடம்பு தீண்டி பார்க்கிறது வார்த்தை பேசுகிறதைப் பார்க்கிறது. உடம்பு தீண்டிப் பார்க்கிறது. கண்ணைப் பார்க்கிறது. வலத்தைப் பார்க்கிறது. நீர் இறங்கிறதைப் பார்க்கிறது. நாக்கைப் பார்க்கிறது. இந்த முறையிலே பார்த்து வியாதி லெட்சணத்தை பண்டிதனானவன் கண்டு கொள்கிறது.

<u>வாத பித்த நாடி பார்க்கிறது</u>:-

பெரு விரல் மணிக் கட்டில் நடுக்கும். அதுக்கப்பால் சேத்தும நாடி நடுக்கும். இது வாத பித்த நாடி. சேஉஷ்ம நாடி என்பது நாடி பார்க்கிற அடவில்
வலக்கை விரல் பெருவிரல் கொண்------ பாம்பு விரலளவும் மூன்ற விரலையு

மடிச்சுக் கொண்டு நாடி பார்க்க வாத பித்த நாடி, சேத்தும நாடியுந் தெரியும்.

நாடி எந்தக் கிரமத்தில் இருக்கு மென்லே நெல்லிடை பிரமாணத்திலே நாடி பார்க்கிறது. பார்க்கு மிடத்தில் மூன்று விரல் எண்ணப்படும்.

சேத்தும நாடி லெட்சணம் நாடி மெள்ள நடக்கும். இந்தக் கிரமத்தில் நடந்தா ல் சேத்தும நாடி என்று சொல்லுவது.

வாத பித்த நாடி லெட்சணம்:- முந்த காளுங் கோழி போலே நடக்கும். பிரமாி போலே நடக்கும். இந்த கிரமத்தில் நடந்தால் பித்த நாடி என்று சொல்லுவது.

வாத சேத்தும நாடி லட்சணம்:- குறஉஷ்சியிலே கெதிர நாடி முகுற நாடி சிஙக வா து வா சேத்தும கெதிப்பு கெந்தம் வயித்தியர் வித்தியாலி சாரதா என்பது.

வாத சேத்தும நாடி கோழி போலே நடக்கும். பிறகு ஆட்டைப் போலே நடக்கும். இந்தக் கிறமத்தில் நடந்தால் வாத சேத்தும நாடி என்று சொல்லுவது.

பித்த சேத்தும நாடி லெட்சணம்:-

தவளை போலே நடக்கும். பிறகு ஓடும். நாடி குற வயத்திலேயும் ஓடும். இப்படி ஓடினுல் வாத பித்த சேத்தும நாடி என்று சொல்லுவது. நாடி ஓடுகிற வகை கையிலே ஓடும். கணுக்காலிலே ஓடும். நாடி சேத்துமத்துக்குள்ளே மோடமாயிருக்கும்

பெண்சாதிக்கு நாடி யிடது கையிலே பார்க்கிறது. புருஉஷனுக்கு நாடி வலது கை யிலே பார்க்கிறது. இது நாடி பார்க்கிற கிரமம்.

வாத நாடி லெட்சணம்:- வாத நாடியாகிறது ஒக்கியாய் நடக்கும். தவளை போலே நடக்கும். காடை குருவி போலே நடக்கும். நாகப்பாம்பு போலே ஓடும். இந்த விதத்திலே நடந்தால் வாத நாடி என்று சொல்லுவது.

பைத்திய நாடி லெட்சணம்:-

கோழி இறகு உததிக் கொண்டு நடக்கிறப் போலே நடக்கும். அன்னம் போ லே நடக்கும். ஊர்க் குருவி போலே நடக்கும். இந்தக் கிரமத்திலே நடந்தால் பயித் தியம் நடக்கும். வலம் விடாத பேருக்கு அன்னம் போலே நடக்கும். இந்த லெட்சண முண்டானுல் இந்த நாடி என்று சொல்லப் படும். உடம்பு தீண்டிப் பார்க்கிறது. மூகம் புரித வாய்வுக்கு உடம்பைத் தொட்டுப் பார்க்கிறது. உடம்பு சிறுக உஷ்ணமாயிருக்கும்

அரையாப்புக் கட்டிக்கு:-

முருங்கயிலையைக் கொண்டு வந்து விளக்கெண்ணை விட்டு வறுத்து அடையாய் வைத்த கட்டக் கரையும். ஊர் முருங்கையுமல்லா, காட்டு முருங்கையு மல்லா, செடி தொறட்டு முள்ளா யிருக்கும். காம்பு கறுத்து இருக்கும். இலை காரை இலை போலே இருக்கும். கிளிஞ்சலைக் கொண்டு வந்து காட்டெரு முட்டை அடுக்கி அதின் மேலே வைத்து மேலும் இடுக்கி சுட்டு எடுக்க நீராம். அதை எடுத்து விளக்கெண்ணை வார்த்து குழைத்து கட்டி மேல் தடவ யிப்படி மூன்று பொழுது தடவக் கரையும்.

வெள்ளை விழுகிறதுக்கு:-

குப்பை மேனியும், கருப்பு நெல் அரிசியும் அரைத்து அடை சுட்டு தின்ன தீரும். கை கண்டது. ஏடசாமி சொன்ன வைத்தியம்.

ஊது காமாலைக்கு மருந்து:-

நாபாவட்டை இலையைக் கொண்டு வந்து சட்டியிலே போட்டு அத்தோடை அவரைக் கொட்டை போட்டு தண்ணீர் வார்த்து வெவிச்சு எடுத்துக் கொண்டு அந்தக்

கொட்டையை உலர்த்தி வைத்துக் கொண்டு காலமே பத்துக் கொட்டை சாப்பிடத் தீரும்.

வெள்ளர்கணை பட்டை உலர்த்தி இடிச்சு சூரணம் பண்ணி வெள்ளாட்டுப் பாலில் சாப்பிடத் தீரும். எடசாமி சொன்ன வயித்தியம். கை கண்டது.

<u>சயித்திய காசிக்கு லேகம் பண்ண மருந்து வயனம்</u>:-

திப்பிலி பலம்.க, மூலம் பலம்.க, தெசாவரம் பலம்.க, கண்டு பறங்கி பலம்.க, தும்பராஷ்டம் பலம்.க, லவுங்கப் பட்டை பலம்.க, மிளகு பலம்.க, சுக்கு பலம்.க, சித்திர மூலம் பலம்.க இது வெல்லாம் வஸ்திர காயம் பண்ணிக் கூட்டிக் கொண்டு இதுக்கு கசாயம் வில்வ வேர் வறமுள்ளி வேர் சிறு வழுதலை வேர், கண்டல முருக்கம் வேர் உத்தாமணி வேர், முசுமுசுக்கை வேர் கசாயம் வைத்து இறுத்து கொண்டு இதில் பழைய வெல்லங் கூட்டி கொதிக்க வைத்து இந்தச் சூரணம் இதில் கூட்டி லேகம் பண்ணிக் கொடுக்கவும். எலுமிச்சம் பழ சாறு விட்டரைத்து அதிக பொடி பண்ணி சர்க்கரை கூட்டி கொடுக்கவும்.

<u>சுர பாண்டுவைக்கு மருந்து</u>:-

நீர் முள்ளி வேர், சங்கம் வேர், அருக வேர், பூவரசம் வேர் கசாயம் வைத்து மிளகு, திப்பிலி மூலம், கண்டு பறங்கி இவை பொடி செய்து கசாயத்தில் கூட்டிக் கொடுக்கவும்.

<u>சயித்திய காசிக்கு மருந்து</u>:-

சித்திரமூலம் பட்டை இலை இது இரண்டும் கருப்பு நெல்லரிசி மாவும், தட்டி ரொட்டி பண்ணி கொடுக்க இலமூல் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளிப்பு கசப்பு தவிர்க்கவும்.

<u>விஷ பாண்டுவைக்கு</u>:-

வெள்வக்கணை பட்டை வேளை ஒத்தக்கு பலம்.உ, கசாயம் போட்டு அந்த தண்ணீர் இறுத்து அதில் திப்பிலி மிளகு வெள்ளுள்ளி, சீரகம் கிருமி பண்ணி பொடி செய்து அதில் கூட்டி கொடுக்கவும். வியாதி தீரும்.

இதவும் சங்கம் வேர்ப் பட்டை கொண்டு வந்து உலர்த்தி வஸ்திர காயம் பண்ணி வென்னீரில் கொள்ள தீரும். வெள்ளாட்டுப் பாலில் தயிரில் கொள்ளத் தீரும். இதுக்கு புளிப்பு உப்பு தவிர்க்கவும்.

<u>பால கிரகம்</u>:-

பன்னிரெண்டு வருஷத்த் பருவத்துக்கும் ஏகமாய் சகல தேவதைக்கும் ஏகமாய் பண்ணுகிறது. எல்லா கிறவாதும் நிற்கும். இதுக்கு ஆத்து மன் இருகரை மண்ணில் கொண்டு வந்து பெனருப்பு செய்து பஞ்ச வன்ன பிடச் சயம் வெள்ளை வஸ்திரம் தரித்து பூவு கெந்தம் அதை தரித்து முன்னாழி அரிசி சமைத்து புது வோட்டிலிட்டு ஐந்து கறி தயிரு வெல்லம் உளுந்து வடை பத்து எள்ளுருண்டை இருபது கொழுக்கட்டை இருபது அடை ஒரு விளக்கு ஒரு தேங்காய் இது வெல்லாம் படைத்து மூன்று தரம் சுத்தி ஊருக்கு மேற்கே போடவும்.

<u>பெரும்பாட்டுக்கு</u>:-

ஈர வெங்காயந் தன்னை பியலுடன் அரிந்து கொண்டு கலந்தனைக் காய வைத்து கடுகவே எரிப்பதிட்டு பொன்னிறமாய் வறுத்து புற வற சொரிந்து கொண்டு இப்படி இரண்டு நேரம் இரு நாலு நாள் தான் கொள்ள பெரும்பாடு ரத்தப் பிரமியம் தானும் போமே.

விடத்தேரி இலை உலர்த்திப் பொடி செய்து சீலை வடி கொண்டு அதக்குச் சமன் அரிசி வறுத்துப் பொடி செய்து கலந்து நித்தம் இரண்டு பிடி பொடி நல்லெண்ணெயில் குழைத்து முழுங்கவும். இப்படி எட்டு நாள் கொள்ள நாள் பட்ட பெரும் பாடு ரத்த பிரமியமும் போம்.

சங்கம் வேர், எலுமிச்சங்காய் மாத்திரம் அரைத்து இளநீரில் குடிக்க பெரும் பாடு மாறும். மீண்டங் கொழுந்து எலுமிச்சங்காய் அளவு அரைத்து நல்லெண்ணெயில் முழுங்கப் பெரும்பாடு தீரும்.

எலி கடி விபரம்:-

எலிகளுக்கு பெயர்:-

வாளம், புங்கன், மவுக்க அலந்திரன், திருவடி விடூமாக உந்தி உதிரமண்டல எலி அ கன் சூதன், மந்திப் முத்தையன் பாண்டு பதி உதிரியன், விரங்கன், சில நன் விசையன் ஆண் எலி. பெண் எலி ஆக எலி ::: வகை செய்யுங் குணம்:-

வானம் புங்கன் எலி கடித்தால் செய்யுங் குணம்:-

உடம்பு குடல் போலே வீங்கும். கண் சிவந்து இருக்கும். வேகம் உண்டாயிருக்கும்.

இதக்கு மருந்து:- சிறுகீரை வேரை தேனிலரைத்து முழுங்கத் தீரும்.

அலந்திரன் என்னும் எலி கடித்தால் செய்யுங் குணம்:- வெண்ணேவு கொண்டாப் போலே உடம்பு சிவந்திருக்கும். எலி போல் தடிப்பு யிடும்.

இதக்கு மருந்து:- பாவை விரையை பொடி செய்து தேனில் குழைத்து முழுங்கத் தீரும்

திருவடி என்ற எலி கடித்தால் செய்யுங் குணம்:-

வேத்து, வெதும்பும்.

இதக்கு மருந்து:- புனல் முருங்கை விரையை பொடி செய்து தேனில் குழைத்து முழுங்கத் தீரும்.

ஆழமாக உந்தி என்ற எலி கடித்தால் செய்யுங் குணம்:-

கண் புகைந்திருக்கும்.

இதக்கு மருந்து:- முத்தங் காசும் இந்துப்புந் தேனில் குழைத்து முழுங்கத் தீரும்.

மாபுந்தி என்ற எலி கடித்தால் செய்யுங் குணம்:-

...புந்தி எப்பொழுதும் உள்ளே தலை சுழலப் பண்ணும். வீங்கும். வாய் பொல்லாததாய் நாறும்.

இதக்கு மருந்து:- பாகைத் தோ ம் பாகை விரையும் பொடி செய்து தேனில் குழைத்து முழுங்கத் தீரும்.

உதிர மண்டலி என்ற எலி கடித்தால் செய்யுங் குணம்:-

சிறுநீர் உதிரம் போலே இருக்கும். கடித்த வாய் வட்டம் போலே இருக்கும்.

இதக்கு மருந்து:- நெய் சட்டியும் பற்படாகமும் பொடி செய்து தேனில் குழைத்து முழுங்கத் தீரும்.

அ ண மண்டலி என்ற எலி கடித்தால் செய்யுங் குணம்:-

உடம்பு குடம் கண்புண்டாம். கருச் சளியும் இருமலும் உண்டாம்.

இதக்கு மருந்து:- முத்தக் காசும் பற்படாகமும் அரைத்து தேனில் குழைத்து முழுங்கத் தீரும்.

மரவட்டை நீர் வண்டு, செவ்வட்டை கடி வகைக்கு மருந்து:-

ஆகாசக் கெருடன் கிழங்கு கொண்டு வந்து கொட்டைப் பாக்குப் போலே வெட்டி ஒரு படி பசுவின் நெய்யில் போட்டு ஆக்கி இந்த கிழங்கு பக்குவத்திலே எடுத்து ஒரு கரண்டி நெய்யும் ஒரு கிழங்கும் இது இரண்டும் தின்னவும். இந்த நெய் கண்ட மாலைக்கு ஆடி இந்தப் படி உள்ளுக்குங் கொண்டு மேல் புண்ணுக்கு சீலையில் தவட்டிப் போடவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளிப்பு, கவுச்சு தவிர்க்கவும்.

ஆகாச கெருடன்:- வயணம்: வலம் சலம் விடாத பேருக்கு மருந்து:-

ஆகாச கெருடன் கிழங்கு கொண்டு வந்து இரண்டு கொட்டைப் பாக்களவு வென்னீரில் கொடுக்கவும். இதுக்கு விடாதே போனால் ஈர வெங்காயச் சாத்தில் கால்படி மதக்கின சர்க்கரை இரண்டு காசிடை இரண்டு கரண்டி விளக்கெண்ணெயில் வெங்காயச் சாத்தில் கொதிக்க வைத்து சங்கம் சா சர்க்கரை வெண்காரம் பொரிச்சு அரைச்சு கூட்டி கொடுக்கவும். இது கை கண்டது.

விரை வாதத்துக்கு மருந்து:-

பாக்கிலே எருக்கம் பூ தின்ன தீரும். பூ கிடையாவிட்டால் மூன்று துளி பால் வெத்திலையில் தடவி தின்ன அண்டவாதம் விரைவாதம் கூட தீரும். கை கண்டது.

காமாலை சோகை பித்தத்துக்கு:-

புளி உப்புக் கண்டம் தின்ன தீரும். பிரண்டை சாத்தில் தினை அரிசி இடிச்சு தின்னத் தீரும். கை கண்டது.

மூலாம் பண்ணுகிறது வயணம்:-

ரசம், களிப்பாக்கு, மாப்பிளைக் காய், மயில் துத்தம், மொங்கு, நல்லெண்ணெ, வெள்ளைக் காசுக் கட்டி, நெய், புதுப் பானை கவுத்து அதின் மேலே காசுக் கட்டி பொடி பண்ணிப் போட்டு எலுமிச்சம் பழம் சாறு பிழிஞ்சு செப்பு செம்பாலே அரைச்சுத் தடவ ஆறிப் போம்.

மயில் துத்தம் விராகனெடை.க, பால் துத்தம் விராகனெடை.க, இரண்டையும் நன்றாய் சுட்டு வெள்ளைக் குக்கிலம் விராகனெடை .க, ரசம் விராகனெடை. இது இரண்டும் சும்மா போட்டு எலுமிச்சம் பழ சாறு விட்டரைத்துக் ஒனி நல்லெண்ணெ வார்த்து அரைத்து பழத்துக்கு முன்னே செம்பருத்திச் சாறு வார்த்தரைத்து அதின் பிறகு நல்லெண்ணெ வார்த்தனரத்து அதின் பிறகு இந்த மருந்து மேலே தண்ணீர் வார்த்துக் கழுவிப் போட்டு வெள்ளை சீலையில் பிசறி நிழலுலத்தாக உலர்த்தி சீலை மடிச்சு வைத்துக் கொண்டு பின்னை தண்ணீர் விட்டு கழுவிப் போட்டு சீலை போடவும். எப்படிப் பட்ட புண்ணும் ஆறிப் போம்.

பால் துத்தம், மயில் துத்தம், வெள்ளைக் குங்கிலியம் பசுவின் வெண்ணெயில் பண்ணி சீலையில் தடவிப் போடவும்.

செம்பிலை, நாகையிலை, புளியிலை மூன்று இலையும் வேகப் போட்டு தண்ணீர் இறுத்து கழுவிப் போடவும். பிறகு மூலாம் போடவும்.

புண்ணுக்கு எண்ணெ பண்ணி போடுகிற வயணம்:-

ரசகற்பூரம், காசுக் கட்டி, களிப்பாக்கு, பால் துத்தம், மயில் துத்தம், வெள்ளைக் குங்கிலியம், சுருள் பட்டை, நில்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி சீலையில் தோய்ச்சுப் போட ஆறிப் போம்.

உடம்பு திணவெடுத்தால் மருந்து :-

நிலப்பனங் கிழங்கு அரிசியிலரைத்து பசுவின் நெய்யில் அடை சுட்டு தின்னவும். சுடும் சாதம் சாப்பிடவும். ஆவாரையிலையைத் துவைத்து குளித்திட சரீரத்திலுண்டான திணவு போம்.

சமாது உப்பு கட்டு :-

ஐந்து வருஷம், பத்து வருஷம்சமாது உப்பு வாங்கி வந்து அந்த உப்பையும் அண்டத்தை விட்டு அரைத்து ஊர்த்திப் பொடி செய்து அண்டத்தில் ரொப்பி.சயஅ நாள் புதைத்து எடுத்து குக்கிட புடம் போட செந்தூரமாம். சீந்திர் வேர் சாறு விட்ட ரைக்கவும்.

குழந்தைகளுக்கு மேகத்துக்கு விரையத்து எண்ணை :-

கொட்டக் கிரந்தை கோழியவரை செருப்படை சீலந்தி நாயகம் மணத்தக் காளி பிரண்டை வெங்காயம் இது வெல்லாம் இடிச்சு சாறு பிழிஞ்சு கொண்டு கருஞ்சீரகம் கார்போக அரிசி வெட்டாலரிசி நீரடிமுத்து பறங்கி சக்கை இது வெல்லாம் இடிச்சு சாறு பிழிஞ்சு கொண்டு பொடி பண்ணி சித்தாமணக்கு முத்து எண்ணையில் ஆக்கி சாப்பிட ரோகம் அத்துப் போம்.

ஊமத்து தும்மட்டிக்காய், வெங்காயம், சித்தாமணக்கெண்ணையில் ஆக்கி குழந்தைகளுக்கு வார்க்க விரையம்.

குழந்தை பிள்ளைகளுக்கு மாந்தை சகலத்துக்கும் :-

லவுங்கம் விராகனெடை.உ, அதிமதுரம் விராகனெடை.உ, சாபத்திரி விராகனெடை.உ, வெள்ளி விராகனெடை.உ, செங்கத்தாரி விராகனெடை.உ, பெருங்காயம் விராகனெடை.உ, சுக்கு விராகனெடை.உ, மாதளங் கிழங்கு விராகனெடை.உ, கோரைக் கிழங்கு விராகனெடை.உ, ஆக வகை பதினொன்றும் பொட்டலங் கட்டி கொண்டு ஒரு சட்டியில் போட்டு தண்ணீ போட்டு ஊசி சத்தம் கல்லுப்பும் சதுக்கட போட்டு வறக்கையில் உப்பு பொரி பிற போது எருமை மோர் ஒரு எனமை விட்டு நன்றாய் கருச்சு கொதி திருப்பின் பிறகு மருந்து வகைகள் பொர்ட்டணங் கட்டினதை உள்ளே போடவும். இதவும் வைத்துக் காய்ச்சி அரைப்படியாக இருக்கையிலே இறக்கிக் கொள்ளவும். அந்தக் கசாயம் விட்டரைக்கவும். ஒரு நாள் நிழலில் உலர்த்தி மறுநாள் வேலிப் பருத்திச் சாறு விட்டரைத்து மறுபடி கோழிய வரைச் சாறு விட்டரைத்து மறுபடி காட்டாவாரைச் சாத்திலரைத்து கோரைக் கிழங்குச் சாத்திலரைத்து மறுபடி வட்டப் பிறுரிச் சாத்திலரைத்து மறுபடி வெந்தயக் கசாயத்தில் வைத்து அதின் பிறகு குளிகை சேர்த்து மிளகு போலே உருண்டை பண்ணிக் கொள்ளவும். ஓட ஓட வயறு எடுத்தால் துளசி சாத்தில் வாலசிரி ஒரு குளிகை வேலிப் பருத்திக் கசாயத்தில் கொடுக்கவும்.

பைத்திய காசத்துக்கு :-

சீரகம் பலம்.க, அதிமதுரம் பலம்.க, நெல்லிப் பருப்பு பலம்.க, எலுமிச்சம் பழசாறு பலம்.க பற்படாகம் பலம்.உ, முசுமுசுக்கை சாறு பலம்.க, பொன்னாங்கண்ணி சாறு பலம்.க, மிளகு பலம்.க, பசுவின் பால், பசுவின் நெய் இது காய்ச்சி கடுகு திறள் பக்குவத்தில் தூள் போட்டு பொன்னிறமாய் இறக்கி இரண்டு பலம் சர்க்கரை கலந்து கொடுக்கவும்.

தலை முழுக்கு:-

நல்லெண்ணெய், சந்தனம் பலம்.க, குங்குமப் பூ காசிடை தண்ணி மிட்டான் கிழங்கு சாறு பலம்.க, போட்டு காய்ச்சி வடித்துக் கொண்டு கால் பலம் மிளகு வெட்டிப் போட்டு தானிய புடம் வைத்து மூன்று நாளைக்கொரு கால் சீயக்காய் தேய்ச்சு முழுக சகல ரோகமும் தீரும். நிவாரணம்.

வலசலமடைத்தால் மருந்து:-

கோவளம் பூச்சியைக் கொண்டு வந்து அவைத்து இரண்டு படி தண்ணீரை அரைப் படியாக காய்ச்சி பசுவின் வெண்ணெ ஒரு எலுமிச்சங்காய் அளவு சீலையிலே முடிந்து அரைப் படி தண்ணீரிலே போட்டு கோவளம் பூச்சி சாறு கூட கால் படி விட்டுக் கொடுக்கத் தீரும்.

அதிசாரத்துக்கு:-

சாதிக்காய், சாபத்திரி பலம்.வ, லவுங்கம் பலம்.ரு, லவுங்கப் பட்டை பலம்.ரு, லவுங்கப் பத்திரி பலம்.அ, அதிமதுரம் பலம்.ரு, கோஷ்டம் பலம்.வ, ஏலம் .வ, சுக்கு பலம்.வ, திப்பிலி பலம்.வ, திப்பிலிமூலம் பலம்.வ, தவசட்டி பலம்.ரு, ரேணுகம் பலம்.ரு, மிளகு பலம்.ரு, தம்பாஊடம் பலம்.வ, முந்திரிப் பழம் பலம்.வ, பேரீச்சம் பழம் பலம்.வ, கல்கண்டு பலம்.வ, மாதள ஓடு பலம்.வ, வில்லை ஓடு பலம்.வ இது வெல்லாம் கருக்கி பண்ணிக் கொண்டு இதுக்கு சமன் சர்க்கரை கூட்டி முலைப்பால் வார்த்தரைத்து கறண்டியில் கொதிப்பிச்சு ஏழு தரம் இந்தப்படி கொதிப்பிச்சு பாக்குப் பிரமாணம் உருண்டை பண்ணி காலமே சாயங்காலம் சாப்பிடவும். வயிறு கழிச்சலும் அதிசாரமுந் தீரும்.

சுரத்துக்கு மருந்து:-

உத்தாமணி இலையை அரைத்துத் தவுட்டிலே பிறட்டிக் கொடுக்கத் தீரும்.

குளிர் காச்சலுக்கு மருந்து:-

சங்கிலையும், வெள்ளுள்ளியும், மிளகாயும் அரைத்து தின்ன தீரும்.

பாண்டுவ ரோகத்து மருந்து:-

நீர் முள்ளி இலையைக் கொண்டு வந்து உலர்த்தி இடித்து புதுப் பல்லாயில் போட்டு தண்ணீர் வார்த்து வைத்துக் கொண்டு தினம் இரண்டு வேளைக்கும் ஆழாக்கு தண்ணீர் இறுத்துக் குடிக்கத் தீரும். இது கை கண்டது.

பிடங்கு நாரிலையைக் கொண்டு வந்து தண்ணீர் வார்த்து வேக வைத்து அதிலே கடுக்காய் ஐந்து போட்டு வேக வைத்து ஆழாக்கு தண்ணீர் இறுத்து குடிக்க வயிறு கழிச்சல் எடுக்கும். பிறகு பிரமியிலையைக் கொண்டு வந்து கடுக்காய் ஐந்து போட்டு வேக வைத்து தண்ணீர் இறுத்து வடி கட்டி கொண்டு குடிக்கவும்.

கீழா நெல்லி யிலையைக் கொண்டு வந்து எலுமிச்சம் பழம் பத்து வகுந்து இரண்டையும் போட்டு புட்டு இட்டு தண்ணீர் கால்படி இறுத்து குடிச்சு பழத்திலே பாதி சாப்பிட போம். இப்படி ஐந்து நாள் தின்ன காமாலை விஷபாகம், பாண்டுரோகம் இது முதலாய் தீரும்.

(பின்னிணைப்பாக உள்ள ஏடுகள்)

புண்ணுக்கு மூலம்:-

பால்துத்தம், மயில் துத்தம், முருதார் சிங்கு, வெள்ளை குங்கிலியம், காசுகட்டி

களிபாக்கு வேப்பெண்ணையில் அரைத்து சீலையில் தோய்ச்சு போடவும் ஆறிப் போம்.

தலை பாரம் நோவுக்கு நீர் குண்டிதயிலம் முழுகத் தீரும். நொச்சில் பிரமியிலை உத்தாமணி குப்பை மேனிஇ பேய்ப்பீர்க்கு, தழுதாழை வேப்பயிலை, நா யிலை, கரிசலாங் கண்ணி, மாவிலிங்கை, மணத்தக்காளி, செருப்பிடை சிலந்தி நாயகம் கொட்டைக் கிறந் சங்கெலை, சாறுவேளை; கல்லியான முருங்கை இலை, விழுதி இலை, சிறு புள்ளடி செப் பெலை; முசுமுசுக்கை இலை; நெட்டைப் பேய் முறட்டை சித்திர மூலத்து இலை, வல் லாரை இலை, ஆடாதோடை வகை ஒன்றுக்கு பிடி இலை நொச்சில் ஒரு முறம் இலை தண்ணீர் விட்டு காய்ச்சி பிழிந்து ஒரு படியாகக் காய்ச்சி நழி எண்ணை விட்டு சாணிப் பதமானால் திப்பிலி மிளகு பலம்.உ, சுக்கு பலம்.க, சீரகம் பலம்.வ, ஓமம் பலம்.ச மஞ்சள் பலம். , கஸ்தூரி மஞ்சள் பலம்.வ, லவுங்கப் பட்டை பலம். சதகுப்பை பலம். கடுக்காய் பலம்.உ, தம்பராஷ்டம் பலம்.க, சந்தணம் பலம்.உ இடிச்சு காய்ச்சி வடிச்சு லவுங்கம் பச்சிலை, சாம்பிராணி எண்ணையில் விடவும்.

<u>பாஷாணம் முறிய</u> :-

அகத்திப் பாகனிலை, பெரும் பூசனிக்காய் சாறு பிழிஞ்சு, கருஞ்சீரகம், பலம். மிளகு பலம். அரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலும் பூச பாஷாணம். சத்தியாம். சாயங்காலம் சாணி கரைத்து சறுவாங்கம் பூசி குளிர்ந்த தண்ணீரில் பத்து மொடா தலையில் கொட்டவும்.

<u>கிரணிக்கு</u> :-

நாயுருவி விரை பலம்.உ, நாய் வேளை விரை பலம்.ச மிளகு பலம்.உ, ஓமப பல்.உ, சுக்கு பலம்.உ இது வகுத்து பொடியாக்கி சிறுக சோத்தில் தூவி தின்ன தீரும் பகல் உண்ண ராத்திரி உபாசம்.

<u>குலைக்கு</u> :-

நார்த்தம் பழம் பத்து சாறு வாங்கி அதிலே உப்பு பலம்.உ, இந்துப்பு பலம். உ, பொட்டுலுப்பு பலம்.உ, எண்ணை நழி வளையலுப்பு பலம்.உ, பெருங்காயம் பலம் க, இதை வறுக்க வேணும். எல்லாம் பொடியாக்கி குடுவையிலிட்டு பதினொரு நாள் வீட்டில் புதைத்து விராகனெடை தின்ன குலை போம். மாதம் போம்.

<u>பாண்டு வியாதி வீங்கினல் லெட்சணம்</u> :-

கண் வெளுப்பு, நகம் ரத்தம், இராது. கட்டு விட்டு இருக்கும். கால் நகமு கட்டு விட்டு இருக்கும். முகம் கால் கை சோவை தட்டும். உதடு ஒரத்துயிருக்கும். இதுக்கு கருஞ்சீரகம் பலம்.ச, கார்போவளம் பலம்.க, தீ நீரடி முத்து பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, குரோசாணி ஓமம் பலம்.க, மிளகு பலம்.க, உள்ளி ஊள் பலம்.க, திப்பிலி பலம். க, இது வெல்லாம் கரசலாங் கண்ணி சாறு குறுணி விட்டு புலர புலர இரண்டு சாம மரைச்சு விழுது வாங்கி வைத்து அரப்பொடி பலம். சாறு வார்த்து மூன்று சாமமரைத்து கூட்டி பிசைந்து முப்பது எலுமிச்சம் பழம் நாலாய் வகுந்து நடுவே நடுவே அந்த விழுதை வைத்து ஒரு குடுவையில் எடுத்து அதிலே இருபத்தைந்து பலம் கூரெள்ளெண்ணை விட்டு ஒடு போட்டு மூடி ராத்திரியும் பகலும் எரியுற அடுப்பு வாய் முன்னே பள்ளம் வெட்டி நன்றாய் மூடி ஒன்பது நாள் சென்று எடுத்து அதிலே ஒரு கறண்டி கொடுக்க எலுமிச்சம் பழ சாத்தில் ஒரு பிளப்பு கொடுக்கவும். இதுக்கு நாள்

என்பது போனல் பழஞ் சோறு கூட்டவும். பதியம் புகையிலை அகத்தி பண்ணிக் கறி பசளிக் காய் ஆகாது. உப்பு, புளிப்பு கூட்டவும்.

இருமலுக்கு குண்டிவாதி லேகியம்:-

சங்கம் வேர் பலம்.ச முக்கந்நாரி பலம்.ரு, மீனகறளை பலம்.ரு, ஆதண்டை பலம்.ரு, சதுரக் கள்ளி பலம்.ரு, பூனைக் காஞ்சொறி பலம்.ரு, ஆகாச தாமரை பலம்.ய, கோரைக் கிழங்கு பலம்.ய, சாய வேர் பலம்.ய, விஷ்ணு கிரந்தி பலம்.ரு, நன்னாரி பலம்.ரு, நாயுருவி பலம்.ரு, ஆடாதோடை பலம்.ரு, கருசளங்கண்ணி பலம்.ரு, உத்தாமணி பலம்.ரு, குமுளம் வேர் பலம்.ரு, கண்டங் கத்திரி பலம்.ரு, சிறுவழுதலை பலம்.ரு, வில்லை வேர் பலம்.ரு, முன்னை வேர் பலம்.ரு, நாரவேளை வேர் பலம்.ரு, கொள்ளுகா வேளை பலம்.ரு, முக்கா வேளை பலம்.ரு, சத்தி சாரு வேளை பலம்.ரு, எருக்கம் வேர் பலம்.ரு, கிளா வேர் பலம்.ரு, வறண்ணி பலம்.ரு, வறபுல்லாந்தி பலம்.ரு, முசுமுசுக்கை பலம்.ய, வட்டத் திருப்பி பலம்.ரு, நெருஞ்சி பலம்.ரு, சீந்தில் தண்டு பலம்.ரு, நசுக்கிக் கசாயம் சரி தண்ணீர் விட்டு ஐந்து நாள் குறுகக் காய்ச்சி வெல்லம் பலம். சய போட்டு இறுத்து வடித்துக் கொண்டு பாகு பதமானல் கடை மருந்து திப்பிலி பலம். , மிளகு பலம். , சீரகம் பலம்.க, மோடி பலம்.க, தம்பழூஷம் பலம்.க, தேத்தாங் கொட்டை பலம்.க, தாளிச பத்திரி பலம். சித்திர மூலம் பலம்.க, சுண்டு பறங்கி பலம். , லவுங்கப் பட்டை பலம்.க, பறங்கிப் பட்டை பலம்.உ, கெர்த்தமல்லி பலம். , கோரோசினை பலம். , பெருங்காயம் பலம். , சமம் பலம்.உ, வாய் விளங்கம் பலம். , சிறு நாகப்பூ பலம். , அக்கார காரம் பலம்.வ, அதிமதுரம் பலம்.வ, கோஷ்டம் பலம்.வ, லவுங்கம் பலம்.வ, குரோசாணி ஓமம் பலம்.வ, அமுக்கிரா பலம்.க, சுக்கு பலம். , யிஞ்சி சாறு உரி வஸ்திர காயம் பண்ணி பேரீச்சம் பழம் தேவதாரூஷ் பழம் கூட தூவிக் கிளறி தேன் பலம்.சய வார்த்து கிளறி பாக்காவு தின்ன தீரும் வியாதி இருமல், சயித்தியம், வாதம், மந்தம் தீரும்.

மேக நாதக்குளிகை:-

நேர்வாளம் பலம்.க, காட்டாமணக்கு பலம்.க, பெருங்காயம் பலம்.க, யிங்குலீகம் பலம்.க, சிவந்த வேர் பலம்.க, சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.க, சீரகம் பலம்.க, எலுமிச்சம் பழம் சாறு விட்டு அரைத்து உழுந்து மாதிரி குளிகை பண்ணி சகலத்துக்கும் கொடுக்கவும். க்ஷயரோகத்துக்கு கொடுக்கவும்.

****

க.ச:7.1.63. முற்றும்

******